பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி

# Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 மார்கழி 01 வெள்ளிக்கிழமை (16.12.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 363

MONEY TRANSFER உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

## சிதம்பர தரிசனம் தமிழகத்துக்கு கப்பல் சேவை

(யாழ்ப்பாணம்)

மார்கழி மாதத்து திருவெம்பாவைக் காலத்தில் சிதம்பரத்தில் ஈழத்தவர்கள் தரிசிப்பை மேற்கொள்ளும் வகையில் காங்கேசன்துறையில் இருந்து தமிழகத்தின் காரைக்கால் பட்டினத்துக்கான கப்பல் சேவை இம்மாதம் 27-ம் திகதி ஆரம்பமாகி

24ஆம் பக்கம் பார்க்க....

# "குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது"

## இலங்கை குறித்து அமெரிக்கா பாராட்டு



(வாஷிங்டன்)

இலங்கையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதை மிலேனிய சவால்களுக்கான ஒத்துழைப்பு சபையின் தீர்மானம் எடுத்துக்காட்டுவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

புதிய மிலேனிய சவால்களுக்கான ஒத்துழைப்பு அமைப்பின் பணிப்பாளர் சபை, பொருளாதார வளர்ச்சி மற்றும் வறுமை குறைப்பை ஊக்குவிப்பதற்கான நாடாக இலங்கையைத் தேர்வுசெய்துள்ளது.

மிலேனிய சவால்களுக்கான ஒத்துழைப்பு அமைப்பின் உதவித் திட்டத்திற்குள் இலங்கை உள்வாங்கப்பட்டுள்ளமை குறித்து டுவிட்டர

23ஆம் பக்கம் பார்க்க....



# நாட்டில் காட்டாட்சி தலைதூக்கி உள்ளது!

## ஆபத்து என எச்சரிக்கிறார் மகிந்த



(கொழும்பு)

மன்னார் முத்தரிப்புத்துறை கிராமத்தில் கடற்படை சிப்பாய்கள் இருவர் சிறைப்பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்ட சம்பவத்தின் போது படையினரை அனுப்பி நடவடிக்கை எடுக்காத அரசாங்கம், அம்பாந்தோட்டை துறைமுகத்தில் தமது உரிமைக்காக குரல்கொடுத்த தொழிலாளர்களை கலைக்க கடற்படையினரை பயன்படுத்தியுள்ளது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, தேசிய அரசாங்கத்தின் இதுபோன்ற நடவடிக்கைகளால் நாடு ஆபத்தை நோக்கி நகர்ந்துள்ளதாகவும் எச்சரித்துள்ளார்.(23-ம் பக்.)

## காணிப் பிரச்சினை: அறிக்கையிட பணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழில் கடந்த 16 வருடங்களாக தீர்க்கபபடாமல் இழுபறி நிலையில் இருந்துவரும் காணியொன்றின் பிரச்சினைக்கு தீர்வை பெறுவது தொடர்பாக ஆராய்ந்து அறிக்கையிடுமாறு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகன் நல்லூர் பிரதேச செயலர் ஆழ்வார்பிள்ளை சிறிக்கு அறிவுறுத்தியுள்ளார்.

யாழ்.மாவட்ட நீதிமன்றில் கடந்த

23ஆம் பக்கம் பார்க்க....

## சட்ட வைத்திய அறிக்கை ஏற்பு

(கொழும்பு)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் காலஞ்சென்ற நடராஜா ரவிராஜின் மெய்ப்பாதுகாவலராக செயற்பட்ட பொலிஸ் சார்ஜன் லக்ஷ்மன் லொகுவெல்லவின் சடலம் மீதான சட்ட வைத்திய அறிக்கையை ஏற்றுக்கொள்வதாக பிரதிவாதிகள் தரப்பு சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் அறிவித்துள்ளனர்.

24ஆம் பக்கம் பார்க்க....

## கே.பியை கைது செய்யுமாறு உத்தரவு பிறப்பிக்க முடியாது

### கொழும்பு நீதிமன்றம் மறுப்பு

(கொழும்பு)

விசாரணைகள் பூர்த்தியாகும் முன்னர் தமிழீழ விடுதலை புலிகள அமைப்பின் முன்னாள் தலைவர் குமரன் பத்மநாதனை (கே.பி) கைது செய்யுமாறு உத்தரவு பிறப்பிக்க முடியாதென்று கொழும்பு மேல் முறையீட்டு நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

குமரன் பத்மநாதனை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தும்படி பொலிஸாருக்கு உத்தரவொன்றை பிறப்பிக்குமாறு கோரி மக்கள் விடுதலை முன்னணி தாக்கல் செய்த மனு விசாரணைக்கு அழை

24ஆம் பக்கம் பார்க்க....

## இளம் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து சந்தேகத்துக்கிடமான முறையில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கோப்பாய் தெற்கை சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான ஸ்ரீஸ்கந்தராஜா சிறீதரன் (வயது 30)

24ஆம் பக்கம் பார்க்க....

## தோல்வியடைந்துள்ள மகிந்தவால் மீண்டும் ஆட்சிக்கு வர முடியாது

### நேர்காணலொன்றில் பிரதமர் கருத்து



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீண்டும் ஆட்சியை கைப்பற்றுவார் என தாம் நினைக்கவில்லை என பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் த ஹிந்து பத்திரிகைக்கு வழங்கிய விசேட நேர்காண

24ஆம் பக்கம் பார்க்க....

## அரசியலமைப்பு வழக்குகளுக்கு புதிய நீதிமன்றம்

(கொழும்பு)

நாட்டின் அரசியல் யாப்புடன் தொடர்பிலான வழக்குகளை விசாரணை செய்ய புதிய நீதிமன்றமொன்றை உருவாக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரை அரசியல் யாப்புக்கு விளக்கம் கோரல் மற்றும் அரசியல

24ஆம் பக்கம் பார்க்க....

## மலேசியாவில் ஜனாதிபதி மைத்திரிக்கு இராணுவ மரியாதையுடன் வரவேற்பு



(கோலாலம்பூர்)

மலேசிய அரசாங்கத்தின் விசேட அழைப்பின்பேரில் மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு மலேசியா புறப்பட்ட

24ஆம் பக்கம் பார்க்க....

## எமில் காந்தனுக்கு திறந்த பிடியாணை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கிய செயற்பாட்டாளர்களில் ஒருவரான எமில்காந்தனுக்கு கொழும்பு மேல்நீதிமன்றம் நேற்று திறந்த பிடியாணையை பிறப்பித்துள்ளது.

ராடா நிறுவனத்தில் இருந்த பொதுமக்களின் 169 மில்லியன் ரூபாய் பணத்தை மோசடி செய்த குற்றச்சாட்டு தொடர்பிலேயே இவ்வாறு திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (இ-10)

# இலங்கை-மலேசிய வர்த்தகக் குழுக் கூட்டம்

(கோலாலம்பூர்)

இலங்கை மற்றும் மலேசிய நாடுகளுக் கிடையே காணப்படும் வியாபார மற்றும் முத லீட்டு வாய்ப்புக்களை மேம்படுத்தும் நோக் குடன் இரு நாட்டின் வர்த்தகர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் கலந்துகொண்ட வர்த்தக குழுக்கூட்டம் ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன தலைமையில் நேற்று பிற்பகல் கோலா லம்பூரில் இடம்பெற்றது.

இரு நாடுகளினதும் முதலீட்டுச் சபைகள், ஏற்றுமதி அபிவிருத்தி சபைகள் மற்றும் உயர் ஸ்தானிகர் அலுவலகங்கள் இணைந்து ஏற் பாடு செய்திருந்த இக் கூட்டத்தில் இரு நாடு களையும் சேர்ந்த பெரும் எண்ணிக்கை யான முதலீட்டாளர்களும் வர்த்தகர்களும் பங்குபற்றினர்.

இரு நாடுகளுக்கும் இடையிலான முத லீடு மற்றும் வர்த்தக தொடர்புகளை மேலும் விரிவுபடுத்துதல் மற்றும் புதிய முயற்சிகளை ஏற்படுத்திக் கொள்ளுதல் தொடர்பாக இதன் போது விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன் எதிர்காலத்தில் அதற்கான பல ஒப்பந்தங் களை ஏற்படுத்திக் கொள்ளவும் உத்தேசிக்க ப்பட்டுள்ளது.

எதிர்வரும் மூன்று வருடங்கள் இலங் கையின் அபிவிருத்திக்கான வருடங்கள் என பெயரிடப்பட்டுள்ளதுடன் அச்சமின்றி இல ங்கையில் முதலீடுகளை மேற்கொள்ளுமாறு முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுத்த ஜனாதிபதி அதற்கு தேவையான அனைத்து வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதற்கு தமது அரசாங்கம் தயாராக உள்ளதாகவும் தெரிவித்தார். (செ-11)




We Serve

## சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306B1
## க.பொ.த (சா.த)-2016 பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு

அண்மைக்காலமாக தமிழ் மொழி பேசும் மாணவர்கள் குறிப்பாக யாழ்ப்பாண மாணவர்கள் உயர் தரத்தில் விஞ்ஞான துறைக்கு செல்வது குறைந்து கொண்டே வருவது யாவரும் அறிந்ததே. இக்குறையைப் போக்கி விஞ்ஞான துறையை உயர் கல்வியில் தெரிவு செய்வதை ஊக்குவிக்கும் முகமாக யாழ். மாவட்டத்தில் முதல் கட்டமாக வடமராட்சி வலயத்திற்குட்பட்ட மாணவர்களுக்கு வழிகாட்டல் கருத்தரங்கொன்றினை யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்களின் கருத்தாலோசனைகளுடன் சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306B1 நடாத்தவுள்ளது. இத்தகவல் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளரூடாக பாடசாலைகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் பங்கு பற்றி பயனடைய க.பொ.த (சா/த)-2016 மாணவர்களை அழைக்கின்றோம்.

இடம்:-நெல்லியடி மத்திய கல்லூரி பிரதான மண்டபம்
காலம்:-24.12.2016 காலை 9.00 தொடக்கம் 12.30 வரை

WHERE THERE IS A NEED THERE'S A LION

தொடர்புகளுக்கு:-லயன் க.கமலேஸ்வரன்
மாவட்ட இணைப்பாளர் (தொழில் வழிகாட்டலும் தொழில் வங்கியும்)
சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306B1
தொலைபேசி:-0776047195
lionkamales@gmail.com


## நல்லூர் பிரதேச சபையின் வரவு செலவுத்திட்டம் மக்கள் பார்வைக்கு

1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்ட நல்லூர் பிரதேச சபையின் 2017ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டம் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் இதனை கீழ்க் குறிப்பிடப்படும் இடங்களில் 16.12.2016ஆம் திகதியிலிருந்து 21.12.2016ஆம் திகதி வரை பார்வையிடலாமென சபையின் செயலாளர் திரு.சி.தயாபரன் தெரிவித்துள்ளார்.

- தலைமை அலுவலகம்-கருவப்புலம் லேன், கொக்குவில்.
- நல்லூர் உப அலுவலகம்-ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
- கொக்குவில் உப அலுவலகம்-பிறவுண் வீதி, கொக்குவில்
- பொது நூலகம் கோண்டாவில்-ஆஸ்பத்திரி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
- பொது நூலகம் கொக்குவில்-பிறவுண் வீதி, கொக்குவில்
- பொது நூலகம் நல்லூர்-கலாசாலை வீதி, திருநெல்வேலி.

சி.தயாபரன்
செயலாளர். நல்லூர் பிரதேச சபை.

## கண்ணீர் அஞ்சலி



எமது சங்கத்தின் புரவலர்களில் ஒருவரும் சங்க உறுப்பினரும் சமூகத் தொண்டரும் மிகிய் கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி சரஸ்வதி ஆறுமுகம்
(இளைப்பாறிய ஆசிரியர்)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

சைவ வித்தியா விருத்திச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி. (சி-6751)
மனிப்பாளர்கள், பணியாளர்கள், இல்லச் சிறார்கள்

## இணுவில் இந்துவின் கண்ணீர் அஞ்சலி




### அமரர் சரஸ்வதி ஆறுமுகம்

எமது கல்லூரியின் பழைய மாணவியும் ஆசிரியையும் எமது கல்லூரிக்கு பல வழிகளில் நிதி உதவி வழங்கி வந்தவருமான **அமரர் சரஸ்வதி ஆறுமுகம்** அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு துயர் அடைவதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/இணுவில் இந்துக் கல்லூரி

## கண்ணீர்க் காணிக்கை



சைவத்தையும் தமிழையும் வளர்த்தெடுப்பதில் தன்னை முழுமையாக அர்ப்பணித்தவராக விளங்கும் செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் அவர் களோடு உயர் பண்புகள் நிறைந்ததும் கலாமன்ற சேவைகளுக்கு ஊக்கும ளிக்கும் நல்லுள்ளங்களை ஈன்றெடுத்த திருமதி **சரஸ்வதி ஆறுமுகம்** அம் மையாராகிய ஒளி விளக்கு அணைந்த செய்தி அறிந்து அதிர்ச்சி அடைந் துள்ள நாம், ஆறாத்துயரில் இருக்கும் அன்புள்ளங்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா எல்லாம் வல்ல எழுந்துச் சிதம்பர தில்லைக்கூத்தன் குஞ்சிதபாதம் சேர பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி! சாந்தி!!!

கலாமன்றத்தினர் மற்றும் காரைவாழ் மக்கள் (சி-6752)
கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்

## மரண அறிவித்தல்

### திருமதி நடேசு (கந்தையா) வள்ளிப்பிள்ளை

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 06 |  | 15 |
| - | | - |
| 09 | | 12 |
| - | | - |
| 1926 | | 2016 |

1ஆம் வட்டாரம் கல்யாண வேலவர் கோவிலடி முள்ளியவளையை பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடேசு (கந்தையா) வள்ளிப்பிள்ளை நேற்று (15.12.2016) வியாழக்கிழமை தனது 91ஆவது வயதில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடேசு (கந்தையா)வின் அன்பு மனைவியும், காலஞ் சென்ற விநாயகமூர்த்தி மற்றும் கனகசபாபதி, சுந்தரமூர்த்தி, செந்தில்வடிவேல் (முகாமையாளர்-ஆசிரியர் மத்திய நிலையம் பரந்தன்), அனந்தசயனன் (விரிவுரையாளர்-கோப்பாய் ஆசிரியர் கல்லூரி), திருமதி விஜயரட்ணம், திருமதி பாஸ்கரன் (வரி மதிப்பீட்டு ஆணையாளர், உள்நாட்டு இறைவரித் திணைக்களம்-கொழும்பு), திருமதி உதயகுமாரன் (கனடா), திருமதி குணசீலன் (முகாமைத்துவ உதவியாளர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (16.12.2016) வெள்ளிக்கிழமை பி.ப 02 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நாவல்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

1 ஆம் வட்டாரம்,
கல்யாண வேலவர் கோவிலடி, முள்ளியவளை.

தகவல்:-குடும்பத்தினர்
தொடர்பு:-0777443952

## தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண

# தமிழீழ விடுதலைப் புலிகள் உயிர்ப்புடன் இருக்க வேண்டும்

# அமெரிக்கா விருப்பம்

**(வோஷிங்டன்)** **தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண தமிழீழ விடுதலைப் புலிகள் உயிர்ப்புடன் இருக்க வேண்டும் என அமெரிக்கா விரும்பியது என்று புதிதாக வெளியாகியுள்ள நூல் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் பணியாற்றிய அதிகாரியான தயா கமகே, “Tamil Tigers' Debt to America: US Foreign- Policy Adventurism & Sri Lanka's Dilemma” என்ற தலைப்பில் நூல் ஒன்றை எழுதியுள்ளார். அதில் தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பான அமெரிக்காவின் நிலைப்பாடு விரிவாக விபரிக்கப்பட்டுள்ளது.**

குறிப்பாக 2009 ஆம் ஆண்டு மே மாதம் இறுதி யுத்த நாட்களின் போது பிரபாகரன் மற்றும் தளபதிகளைக் காப்பாற்ற அமெரிக்கா பெரும முயற்சி எடுத்தது குறித்து இந்த நூலில் விபரிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு மண்டலங்கள் என அறிவிக்கப்பட்ட பகுதிகளின் மீது இலங்கை இராணுவம் தொடர்ந்தும் தாக்குதல் நடத்தக கூடாது எனவும் அமெரிக்கா எச்சரிதததாகவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

ஒருகட்டத்தில் இலங்கை மீது சர்வதேச நிதியம் மூலமான நெருக்கடி தடைகளையும் முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன் ஏற்படுத்தி பணிய வைக்கவும் முனைந்தார் எனவும் அந்த நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்காவைப் பொறுத்த வரையில்விடுதலைப்புலிகளை பயங்கரவாத அமைப்பாக தடை செய்திருந்தாலும் அந்த அமைப்பினால் அமெரிக்காவுக்கு எந்த ஒரு பாதிப்பும் இல்லை என கருதியது. அதே நேரத்தில் இலங்கையை இரண்டாகப் பிரிக்கவும் அமெரிக்கா விருப்பவில்லை. தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண விடுதலைப் புலிகள் உயிர்ப்புடன் இருக்க வேண்டும்எனவும்அமெரிக்கா விரும்பியது எனவும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மற்றும்தளபதிகளை யுத்த களத்தில் இருந்து பாதுகாப்பாக வெளியேற்ற கடைசி நேரங்களில் அமெரிக்கா போராட்டம நடத்தியதாக முன்னாள் தேசிய பாதுகாப்பு செயலர் சிவ்சங்கர் மேனனும் தனது நூலில் குறிப்பிட்டிருந்தார். பிரபாகரன் உள்ளிட்ட தளபதிகளை காப்பாற்ற அமெரிக்காவும், நோர்வேயும் முயற்சித்தன. எனினும் இதனை இந்தியா எதிர்த்தது. இந்தியாவின் எதிர்ப்பை தமிழக தலைவர்களும் ஆதரித்தனர் என முன்னாள் தேசிய பாதுகாப்பு செயலர் சிவ்சங்கர் மேனன் தன்னுடைய நூலில் தெரிவித்துள்ளார். (இ-10)

## கொலைகளைச் செய்தேன்!

## ஒப்புக்கொண்டார் ஜனாதிபதி

பிலிப்பைன்ஸ்சின் தவோவ மாநில மேயராக தாம் செயற்பட்ட காலப்பகுதியில் குற்றங்களில் ஈடுபட்ட சந்தேகநபர்களை தனிப்பட்ட முறையில் கொலை செய்ததை அந்த நாட்டு ஜனாதிபதி ரொட்ரிக்கஸ் டுட்ரேட் ஏற்றுக்கொண்டுள்ளார்.

தவோவ் மேயராக செயற்பட்ட இரண்டு தசாப்த காலத்தில் குற்றங்களை குறைத்த பெருமை அவருக்கு காணப்படுகின்ற போதிலும் கொலைகளை புரியும் படைப்பிரிவுக்கு ஆதரவு வழங்கியதாக பிலிப்பைன்ஸ் ஜனாதிபதிக்கு எதிராக குற்றஞ்சாட்டும் முன்வைக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு விஜயமொன்றை மேற்கொள்வதற்கு முன்னதாக நேற்று முன்தினம் வர்த்தக தலைவர்கள் முன்னிலையில் ரொட்ரிக்கஸ் டுட்ரேட் உரையாற்றினார்.

இந்த நிலையில் தொடர் சர்ச்சைக்குரிய கருத்துக்களை வெளியிட்டு வரும் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி, தற்போது கொலை செய்துள்ளதையும் ஏற்றுக் கொண்டுள்ளார்.

கடந்த மே மாதம் பிலிப்பைன்ஸ்சின் ஜனாதிபதியாக ரொட்ரிக்கஸ் டுட்ரேட் தெரிவு செய்யப்பட்ட பின்னர், அவரால் முன்னெடுக்கப்பட்டு வரும் போதைப்பொருளுக்கு எதிரான யுத்தத்தில் சுமார் 6 ஆயிரம் பேர் இதுவரை கொலலப்பட்டுள்ளனர்.

எனினும் இது தொடர்பில் எந்தவொரு தருணத்திலும் அவர் வருத்தம் தெரிவிக்கவில்லை என சர்வதேச தகவல்கள் தெரிவிக்கின்றன.

மூன்று மில்லியன் யூதர்களை ஹிட்லர் கொலை செய்ததாக சுட்டிக்காட்டிய பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி, போதைப்பொருளுக்கு அடிமையான மூன்று மில்லியன் பேர் உள்ளதாகவும் அவர்களை கொலை செய்வதில் தாம் மகிழ்ச்சி அடைவதாகவும் தெரிவித்தார்.

மேயராக தாம் செயற்பட்ட காலப்பகுதியில் குற்றமிழைத்த நபர்களை கொலை செய்ததை ஏற்றுக் கொண்ட நிலையில், கம்போடியா மற்றும்சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு அவர் விஜயம் செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

## இலங்கையின் உற்பத்திப்பொருட்களை தஜிகிஸ்தான் கொள்வனவு செய்யும்

### அந்நாட்டு ஜனாதிபதி உறுதி



இலங்கையுடனான வர்த்தக பொருளாதார உறவுகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தஜிகிஸ்தான் ஜனாதிபதி இமோமெலி ரஹ்மான் தெரிவித்தார்.

இலங்கையின் தேயிலை, ஆடை, இரத்தினக்கல், ஆயுள்வேத உற்பத்திகள், வாசனைத் திரவியங்கள், பீங்கான் பொருட்கள், இறப்பர் உற்பத்திகள் என்பனவற்றை கொள்வனவு செய்வதற்கு தஜிகிஸ்தான் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற இலங்கை மற்றும் தஜிகிஸ்தான் வர்த்தக சபை உறுப்பினர்களுடனான சந்திப்பில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

இலங்கையில்தற்போது முதலீடு செய்வதற்கான சூழ்நிலை ஏற்பட்டுள்ளமை குறித்து மகிழ்ச்சியடைகிறோம். தஜிகிஸ்தான் வர்த்தகர்கள் இலங்கையில் விரிவாக முதலீட்டு நடவடிக்கைகளில் ஈடுபட எதிர்பார்த்துள்ளனர். இலங்கை முதலீட்டாளர்களையும், எமது நாட்டிற்கு விஜயம் செய்து முதலீடுகளை மேற்கொள்ளுமாறு அழைப்பு விடுக்கிறோம் எனத தெரிவித்தார். (இ-10)

## ஊடகவியலாளர்களுக்கு ராணுவப் பயிற்சி அவசியம்

### பொதுபல சேனா பரிந்துரை

இன்றைய சூழ்நிலையில், ஊடகவியலாளர்கள் பாதுகாப்பாகச் செயற்பட வேண்டியுள்ளதுடன், அவர்களுக்கு இராணுவக் களப் பயிற்சிகளையும் கற்றுக்கொடுக்க வேண்டும். அப்போதுதான், ஊடகவியலாளர்கள் அச்சமின்றிச் செயற்பட முடியும் என, பொதுபல சேனாவின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

குறித்த அமைப்பின் அலுவலகத்தில், நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, அம்பாந்தோட்டை துறைமுகத்தில் ஊடகவியலாளர் ஒருவர் தாக்கப்பட்டமை குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. இதன்போதே தேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், “மேற்படி தாக்குதல் சம்பவம் ஏன் நடந்தது என்பது குறித்து ஆராய்வதை விட, இந்தச் சம்பவத்துக்குப் பின்னால் யார் நின்று செயற்படுகிறார் என்பதை முதலில் கண்டுபிடிக்க வேண்டும்.

அதன் பின்னர் அதற்கான தீர்வை முன்வைக்க வேண்டும்" என்றார். “மாற்றம் வேண்டும், ஊடக சுதந்திரம் வேண்டும் என கூக்குரலிட்டீர்களே இப்போது உங்களுக்கு சந்தோசமா? இதுதான் நீங்கள் எதிர்பார்த்த ஊடக சுதந்திரமா? அன்று மறைமுகமாக நடைபெற்ற சமபவங்கள் எல்லாம் இன்று நேரடியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன" என்றும் தேரர் தெரிவித்தார்.

“அம்பாந்தோட்டை துறைமுகத்தின் 80 சதவீதமான பகுதிகள், சீனாவுக்கு தாரை வார்த்து கொடுக்கப்பட்டு விட்டன.இதற்கு, பல்வேறு தரப்பினரும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். இந்த நாட்டில் தீய விடயங்கள் எவை நடந்தாலும் முதலில் மகிந்த மற்றும் ஒன்றிணைந்த எதிர்கட்சினர் மீதே இந்த அரசாங்கம் பழிசுமத்துகிறது. அவர்கள், அரசாங்கத்தின் மீது பழி சுமத்துகின்றனர். இவ்வாறு மாறி மாறி பழி சுமத்திக் கொண்டிருப்பதில் எதுவும் நடக்கப்போவதில்லை" எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ - 10)

## விமானப்படைக்கு தங்க விருது



2015ஆம் ஆண்டுக்கான தேசிய உற்பத்தித்திறன் தங்க விருதினை இலங்கை விமானப்படை பெற்றுக்கொண்டுள்ளது.

பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் கீழ் நிறுவப்பட்டுள்ள தேசிய உற்பத்தித்திறன்களுக்கான செயலகத்தினால் வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படும் விருது வழங்கும் விழா இரதமலானை ஸ்டைன் மண்டபத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் இலங்கை விமானப்படை அதிகாரிகளின் பிரதானி எயர் வைஸ் மார்ஷல் டி.எல்.எஸ்.டயஸ் ஜனாதிபதியிடமிருந்து வெற்றிக்கிண்ணத்தை பெற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் விமானப்படையின் பல நிலையங்கள் மற்றும் அமைப்புக்கள் என்பன பொறியியல், பயிற்சிகள், ஆய்வும் அபிவிருத்தியும் மற்றும் நலன்புரிசேவைகள் உள்ளடங்கலான பல துறைகளல் உற்பத்தித்திறன் தொடரபான மதிப்பீடுகளுக்கு உட்படுத்தப்பட்டதாக இலங்கை விமானப்படை ஊடக தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-10)

## பிரிஸ்பேன் பகலிரவு டெஸ்ட்

# பாகிஸ்தானின் வேகங்களுக்கு மத்தியில் ஸ்மித் சதத்தால் முதல் நாளில் ஆஸி 3/288

பிரிஸ்பேனில் பாகிஸ்தானுக்கு எதிராக நடைபெறும் பகல் - இரவு டெஸ்ட் போட்டியில் அணித் *தலைவர் ஸ்மித் சதம் கைகொடுக்க* அவுஸ்திரேலியா அணி நேற்றைய முதல் நாள் ஆட்டநேர நிறைவில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 288 ஓட்டங்கள் எடுத்து வலுவான நிலையில் உள்ளது.

மூன்று டெஸ்ட் மற்றும் ஐந்து ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுவதற்காக பாகிஸ்தான் அணி அவுஸ்திரேலியா சென்றுள்ளது.

இரு அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் பகல் - இரவு ஆட்டமாக பிரிஸ்பேனில் நேற்று தொடங்கியது.

நாணயச்சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலியா அணித் தலைவர் ஸ்ரீபன் ஸ்மித் முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய அவுஸ்திரேலியா அணிக்கு ரென்சா, டேவிட் வோர்னர் ஆரம்ப வழங்கினர்.

பாகிஸ்தான் அணியின் மொஹமட் அமிர், ரஹத் அலி ஆகியோரின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து விடக்கூடாது என்ற எண்ணத்தில் இருவரும் நிதானமாக விளையாடினார்களோ என்னவோ தெரியவில்லை. அவுஸ்திரேலியாவின் ஓட்ட எண்ணிக்கை மந்தமாகவே காணப்பட்டது.

இதனால் அவுஸ்திரேலியா அணி தனது முதல் 50 ஓட்டங்களை 17.3 ஓவர்களில்தான் தொட்டது.

இந்நிலையில் அவுஸ்திரேலியா அணியின் ஓட்ட எண்ணிக்கை 70ஐ எட்டியபோது அதிரடி வீரர் வோர்னர் 32 ஓட்டங்கள் எடுத்த நிலையில் மொஹமட் அமிர் பந்தில் எல்.பி.டபிள்யூ ஆனார்.

அடுத்து வந்த கவாஜாவை 4 ஓட்டங்களில் பெவிலியனுக்கு அனுப்பி வைத்தார் யசீர் ஷா. 3ஆவது விக்கெட்டுக்கு ரென்சா உடன் அணித் தலைவர் ஸ்மித் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி நிலைத்து நின்று விளையாடியது.

அணியின் ஓட்ட எண்ணிக்கை 151 ஆக இருக்கும் போது ரென்சா 71 ஓட்டங்கள் எடுத்த நிலையில் வஹாப் ரியாஸ் பந்தில் ஆட்டம் இழந்தார்.



அடுத்து 4ஆவது விக்கெட்டுக்கு ஸ்மித் உடன் ஹேண்ட்ஸ் காம்ப் ஜோடி சேர்ந்தார். அரைசதம் அடித்த ஸ்மித் அதை சதமாக மாற்ற முயற்சி செய்தார். இதற்கு நல்ல பலன் கிடைத்தது. மொகமட் அமிர் வீசிய ஆட்டத்தின் 87ஆவது ஓவரின் 2ஆவது பந்தை பவுண்டரிக்கு விரட்டி 16ஆவது சதத்தை பூர்த்தி செய்தார்.

மறுமுனையில் விளையாடிய ஹேண்ட்ஸ்காம்ப் அரைசதம் அடித்தார். இருவரின் ஆட்டத்தால் அவுஸ்திரேலியா அணி நேற்றைய முதல் நாள் ஆட்ட நேர நிறைவில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 288 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

ஸ்மித் 110, ஹேண்ட்ஸ்காம்ப் 64 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளனர்.

பாகிஸ்தான் அணியின் பந்துவீச்சில் மொஹமட் அமீர், வகாப் றியாஸ், யசீர் ஷா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

போட்டியின் 2ஆம் நாளாட்டம் இன்றாகும். (க)

## வடக்கு மாகாண சபையின் சின்னங்களில்

# சேர, சோழ, பாண்டியர்களது வீர வரலாற்றை பொறியுங்கள்

## உறுப்பினர் சிவாஜி கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் கொடி, சின்னம், தேசிய கொடிகளில் தமிழர்களின் வீரம் மிக்க மன்னர்களான சேர, சோழ, பாண்டியர்களின் வரலாற்றை பிரதிபலிக்கும் வகையிலும் அடையாளங்கள் உள்வாங்கப்பட வேண்டும் என உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் 69ஆவது அமர்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன் போதே மேற்படி கோரிக்கையை சிவாஜிலிங்கம் முன்வைத்துள்ளார்.

மேலும் வட மாகாண நிகழ்வுகளில் வட மாகாண சபையின் கொடிகள் ஏற்றப்படுவதில்லை. எனவே வட மாகாண சபை சார்ந்த நிகழ்வுகளிலாவது வட மாகாண சபையின் கொடிகள் ஏற்றப்படவேண்டும் என உறுப்பினர் சுகிர்தனும் கோரிக்கை முன்வைத்துள்ளார். வட மாகாண சபை உறுப்பினர்களின் வாகனங்களை நிறுத்துவதற்கு வாகன தரிப்பிடங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மற்றைய மாகாண சபை அமர்வுகளை அறிய அயல் மாகாண சபைகளுக்கு கூட்டிச் செல்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

வட மாகாண சபை உறுப்பினர்களான எங்களுக்கு மற்றைய இடங்களை விட பிரமாண கொடுப்பனவுகளில் 50 வீதமே பெற்று வந்தோம். பின்னர் கடந்த காலத்தில் எமது செயற்பாட்டால் ஒரு வீதம் உயர்த்தப்பட்டு உள்ளது. எனினும் இது போதாது.

எங்களுக்கும் இனிவரும் காலங்களில் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அவர்களின் அமர்வுகளுக்கான கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

எனவே எங்களின் கொடுப்பனவுகளையும் மீள் பரிசீலனை செய்ய வேண்டும். வட மாகாண சபையின் சின்னம், செங்கோல் போன்றவற்றில் மீன்பிடித்துறை தொடர்பில் ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. எனவே வட மாகாண சபையின் சின்னத்தில் மீள் பரிசீலனை செய்து புதிய சின்னம் உருவாக்கப்படவேண்டும். அதற்கு என ஒரு குழு அமைத்து மறுபரிசீலனை செய்ய வேண்டும் என உறுப்பினர் ஆனோல்ட் கூறினார்.

குறித்த விடயத்துக்குள் சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் வீர வரலாறு தொடர்பிலும் வெளிப்படுத்துவதை உள்ளடக்க வேண்டும் என கூறிய சிவாஜிலிங்கம், வட மாகாண சபையின் தலைமை செயலகம் அமைய வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கின்றேன்.

அதற்காக 10 மில்லியன் ஒதுக்கி முதலில் காணியை அளவிடுதல், முட்கம்பி போட்டு பராமரித்தல் போன்றவற்றை செய்ய வேண்டும். அதற்காக மாகாண சட்ட குழு உருவாக்கப்பட வேண்டும் எனவும் கூறினார்.

வட மாகாண சபை மரமாக மருதமும், பறவையாக புளுனியும், பூவாக வெண்டாமரையும் விலங்காக ஆண்மானும் இருக்கின்றது. ஆனால் இந்த விடயம் இருப்பது என்று பெரும்பாலானோருக்கு தெரியாது. எனவே இதனை மீளாய்வு செய்து இதனை அனைத்து தரப்புக்கும் தெரியப்படுத்த வேண்டும் எனவும் கூறப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

# கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை



(பரந்தன்)

பெரியகுளம் இரட்டைப்பனை பகுதியில் இயங்கிவந்த கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்று கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்னவின் விசேட குழுவினரால் முற்றுகை இடப்பட்டுள்ளது

நேற்று பிற்பகல் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்னாவின் விசேட குழுவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து குழுவினர் குறித்த பகுதிக்கு சென்று முற்றுகை இட்டதனை அடுத்து 55 ஆயிரத்து 550 மில்லி லீற்றர் கசிப்பு, ஆறு பேரல்களில் இருந்த 674 ஆயிரத்து 750 மில்லி லீற்றர் கோடா மற்றும் கசிப்பு உற்பத்தி செய்வதற்கான உபகரணங்கள் மூன்று என்பன பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளதுடன் இரு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட பொருட்கள் மற்றும் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இன்று கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த பட உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-312)


கண்ணீர்க் காணிக்கை



கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் விரிவுரையாளர்
திருமதி பௌசில்கனியா பஞ்சலிங்கம்
அவர்களின் அன்பு மாமியார்

திருமதி
செல்லம்மா அப்பாக்குட்டி

அவர்கள் கோப்பாய் மத்தி, கோப்பாயில் உள்ள
அவரது இல்லத்தில் காலமானமையையிட்டு
அவரது பிரிவால் துயருற்றிருக்கும்
அன்பு உள்ளங்கள் யாவருக்கும் எமது ஆழ்ந்த
இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

விரிவுரையாளர் கழகம்
கோப்பாய் ஆசிரிய கலாசாலை
(C-6755)

கண்ணீர்க் காணிக்கை



கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் விரிவுரையாளர்
திரு. ந. அநந்தசயனன் அவர்களின்
அன்புத் தாயார்

திருமதி
நடேசு வள்ளிப்பிள்ளை

அவர்கள் கந்தர் வீதி, முள்ளியவளையில் உள்ள
அவரது இல்லத்தில் காலமானதையிட்டு அவரது
பிரிவால் துயருற்றிருக்கும் அன்புள்ளங்கள்
யாவருக்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

விரிவுரையாளர் கழகம்
கோப்பாய் ஆசிரிய கலாசாலை
(C-6757)

# இதய அஞ்சலி



திருமதி சரஸ்வதி ஆறுமுகம்

அறிவாலயத்தின் ஸ்தாபகர்
திரு. ஆறு.திருமுருகன்
அவர்களின் அன்புத்
தாயாரின் ஆத்மா சாந்திடைய
இறைவனை
வேண்டுகின்றோம்.

அறிவாலயம்,
இணுவில்.

(6939)


## இளைஞன் உயிரிழப்பு

தெற்கு அதிவேகப் பாதையின் 60 ஆவது கிலோமீற்றர் கட்டைக்கு அருகில் நேற்று நண்பகல் இடம்பெற்ற விபத்தில் இளைஞன் உயிரிழந்துள்ளார். மாத்தறை நோக்கி சென்ற கார் ஒன்று பாதையை விட்டு விலகி பாதுகாப்பு வேலியில் மோதி விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயமடைந்த காரில் பயணித்த நபரை எல்பிட்டிய வைத்திய சாலையில் அனுமதிக்கும் போது உயிரிழந்துள்ளார். மொரவக்க, அல பலாதெனிய பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதுடைய ஒருவரே உயிரிழந்துள்ளதாகவும், விபத்து தொடர்பில் எல்பிட்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ-10)


வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532



## யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம் வரவு செலவுத் திட்டம் 2017

1987 ஆம் ஆண்டு மாநகரசபை கட்டளைச்சட்டத்தின் அத்தியாயம் (252).(212) பி பிரிவின் பிரகாரம் 2017ம் ஆண்டிற்கு கிடைக்கக்கூடிய வருமான மதிப்பீட்டினையும் உத்தேச செலவின் விபரங்களையும் உள்ளடக்கிய யாழ்.மாநகராட்சி மன்றத்தின் 2017ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் 16.12.2016 தொடக்கம் 22.12.2016 வரை மாநகரசபை அலுவலகம், பிரதான பொது நூலகத்திலும் அலுவலக நேரத்தின்போது பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படும் என இத்தால் அறியத் தரப்படுகின்றது.

திரு.பொ.வாகீசன்
மாநகர ஆணையாளர்
மாநகர சபை
யாழ்ப்பாணம்.

(சி-6699)



# கண்ணீர் அஞ்சலி

செஞ்சொற் செல்வர் கலாநிதி
ஆறு திருமுருகன் அவர்களின் அன்புத் தாயார்
திருமதி சரஸ்வதி ஆறுமுகம்
(இளைப்பாறிய ஆசிரியர்)



அவர்களின் மறைவுக்கு
எமது கண்ணீர்
அஞ்சலியைக்
காணிக்கையாக்கி
அன்னாரின்
குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் அவரின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

இ.ச.பே.நாகரத்தினம்
உரிமையாளர்,
கஜமுகன் ஹாட்வெயர்
147, 149 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

(சி-6687)



# துயர் பகிர்கின்றோம்

அமரர் துரையப்பா நடராசா



இணுவிலை பிறப்பிடமாகவும் கனடாவை
வசிப்பிடமாகவும் கொண்டவரும்
இணுவில் அறிவாலய வளர்ச்சிக்கு இறுதி
மூச்சுவரை பங்களிப்பு நல்கிய வருமான
அமரர் துரையப்பா நடராசா அவர்களின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

இணுவில் அறிவாலயம்

(6940)



# கண்ணீர் அஞ்சலி



திருமதி. சரஸ்வதி ஆறுமுகம்

எமது கல்லூரியின் பழைய மாணவியும்
கல்லூரியின் கல்வி அபிவிருத்தி நம்பிக்கை
நிதியத்தின் போசகர் செஞ்சொற்செல்வர்
கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களின்
அன்புத்தாயாருமாகிய
திருமதி. சரஸ்வதி ஆறுமுகம்
அவர்களின் மறைவு குறித்து ஆழ்ந்த
கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்
வல்ல இணுவில் ஸ்ரீ பரராசசேகரப்
பிள்ளையாரை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி

இணுவில் இந்துக்கல்லூரி சமூகமும்
இணுவில் இந்து கல்வி அபிவிருத்தி
நம்பிக்கை நிதியமும்

(6938)


# இராசி பலன்

16.12.2016
(மார்கழி 01, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.15 மணிக்கு
திருதியை பின்னிரவு 1.14 மணிவரை
புனர்பூசம் மாலை 6.54 மணிவரை
சுபநேரம் 6.22-7.52 மணிவரை
இராகுகாலம் 10.52-12.22 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | சந் |
| கேது செவ் | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>மூலம், பூராடம்<br>பகல் 12.35 மணிக்கு<br>கட-சந் | | |
| | | | ராகு |
| சூரி புத | சனி | | குரு |

**மேடம்:** சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், நண்பர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**இடபம்:** உடன் பிறப்புக்கள் உதவிக்கரம் நீட்டுவர், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**மிதுனம்:** வாக்கு மேன்மையுண்டு, தொழிலில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கடகம்:** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், போசன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் கூடிய அக்கறை காட்டுவீர்கள், புதிய தகவல்கள் வந்து சேரலாம்.

**சிம்மம்:** காரிய அலைச்சல்கள் ஏற்படலாம், சயன சுகக் குறைவான நாள், ஆலய வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், கற்பனை மிகுதியான நாள்.

**கன்னி:** உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படும் நாள், பொது வாழ்வில் புகழ் கூடும்.

**துலாம்:** செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கப் பெறுவீர்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்:** தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு,ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**தனுசு:** எதையும் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது, பிரயாண பயமுண்டு, முயற்சிகளில் சிறு தாமதம் ஏற்படலாம், எதிர்பாராத மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையும்.

**மகரம்:** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்,போசன சுகமுண்டு காரிய அனுகூலமுண்டு.

**கும்பம்:** சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம்,செய்தொழில் மேன்மையுண்டு,தேக நலனில் முன்னேற்றமுண்டு,வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மீனம்:** பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்,தாழ்ந்த சுபாவ முண்டு, எடுத்த காரியத்தை முடிப்பதில் கூடிய அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.



"பெண் தலைமைத்துவ குடும்பங்களை வலுப்படுத்தல், நல்லிணக்க வழிமுறையின் முன்னேற்றப்பாதை" எனும் தொனிப்பொருளில் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான தேசிய மாநாடு நேற்றைய தினம் யாழ்.றில்கோ விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது. போகுஸ் வுமின் நிறுவனத்துடன் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் இணைந்து நடத்திய இந்த நிகழ்வில் அனைத்து மாவட்டங்களிலும் இருந்து பெண் தலைமைத்துவ குடும்பங்கள் வருகை தந்து தமது அனுபவங்கள், தேவைகள், எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் ஏனையவர்களுடன் பகிர்ந்து கொண்டனர். அத்துடன் அமரா குடும்பத் தலைமை தாங்கும் பெண்கள் ஒன்றியங்கள் இணைந்து தமது கோரிக்கைகள் அடங்கிய அறிக்கை ஒன்றினையும் வெளியிட்டிருந்தனர். இந்த மாநாட்டில் அரச அதிகாரிகள், சிவில் சமூக அமைப்புக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:-பொ.சோபிகா)

# பொலிஸ் அதிகாரி நியமனம்

(சுரணவாய்)



காங்கேசன்துறை வலயம் II இற்கு பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகராக டி.கே.பிரியந்த நியமிக்கப்பட்டார்.

வலயம் II இற்கு பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகராக இருந்த ஏ.எம். ஜம்பர் கொழும்பு தலைமையகத்திற்கு இடமாற்றப்பட்டதை அடுத்து ஒரு மாத காலமாக ஜெயசுந்தர என்பவர் நியமிக்கப்பட்டிருந்தார். அவரும் இடமாற்றம்பெற்றுசென்றிருந்தார்.

தற்போது டி.கே.பிரியந்த என்பவரை பொலிஸ் திணைக்களம் நியமித்துள்ளது.(இ-60)

# திருவாசகப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவை நடத்தும் திருவாசகப் பெருவிழா நாளை மறுதினம் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு பேரவை நடராஜர் மண்டபத்தில் இடம்பெறும்.

இந்து சமயப் பேரவையின் செயலாளர் ஈசானசிவம் ஸ்ரீசிவசக்திகிரீவன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் ஆசியுரையினை நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், தொடக்கவுரையினை இந்து சமயப் பேரவைத் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (இ-3)




# இலவச தொழிற்பயிற்சி கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்க முடியும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தற்கால வேலைவாய்ப்பினை மையமாகக் கொண்டு முழு நேர மற்றும் பகுதிநேர தொழிற்பயிற்சி கற்கை நெறிகளை நடத்தி வருகின்றது.

2017 ஆம் ஆண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்படுவதோடு இவற்றுக்கான பதிவுகள் தற்போது நடைபெற்று வருகின்றன

இக் கற்கை நெறிகளாவன சமையலாளர், வெதுப்பாளர், அறை பராமரிப்பாளர், உணவு மற்றும் குடிபானம் பரிமாறுபவர், காய்ச்சி இணைப்பவர் (வெல்டிங்), இரு சக்கர மற்றும் முச்சக்கர திருத்துநர், அலுமினியபொருத்துநர், வீட்டு மின்னிணைப்பாளர், மரவேலை தொழில் நுட்பவியலாளர், பெண்கள் சிறுவர்களுக்கான ஆடை வடிவமைப்பாளர், கட்டட நிர்மாண உதவியாளர் ஆகும்.

இக் கற்கை நெறிகள் காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இக் கற்கை நெறிகள் அனைத்தும் இலவசமாக கற்பிக்கப்படுவதோடு தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றிதழுக்கான பயிற்சிகளாகும்.

இக் கற்கை நெறிகளைக் கற்க விரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம், முதலாம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல.12, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் அல்லது வலந்தலை சந்தியிலுள்ள காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (இ-10)

# போயா தினத்தன்று சாராயம் வைத்திருந்தவர் கரவெட்டியில் கைது

(சுரணவாய்)

கரவெட்டிப் பகுதியில் போயா தினத்தன்று வீடு ஒன்றில் சாராயம் வைத்திருந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் சாராயப் போத்தல்களும் மீட்கப்பட்டதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

பௌர்ணமி (13.12.2016) தினத்தன்று பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் பிரகாரம் கரவெட்டி மேற்கில் உள்ள வீடு ஒன்றை சோதனையிட்ட போது 180 மில்லி லீற்றர் அளவுடைய 25 சாராயப் போத்தல்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

பொலிஸ் பிணையில் அவர் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (இ-60)

# கதம்பத்தின் கலைவிழா

(யாழ்ப்பாணம்)

கிளாரட் சிறுவர் கதம்பத்தின் வருடாந்த கலைவிழா எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.கலைத்தூது மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மறை மாவட்ட ஆயர் கலாநிதி ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம், கௌரவ விருந்தினராக யாழ்.கோட்டக் கல்விப் பணிப்பாளர் பிரான்சிஸ் சேவியர், சிறப்பு விருந்தினர்களாக வவுனியா வரோட் நிறுவன நிறைவேற்று இயக்குநர் அருட்பணி சிரிஸ்ரி ஜோன், யாழ்.பிரதேச செயலக சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் திருமதி புவிராஜசிங்கம் ரஜனி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

# திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ சிவகுரு நாத குருபீட வேதாந்தமட மகாதேவா சுவாமிகள் ஆச்சிரமத்தில் திருவாசக முற்றோதல் நாளை 17 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு இடம்பெறும். (இ)

# ஏதனம் நாவல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

தெணியானின் "ஏதனம்" நாவல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கொற்றாவத்தை பூமகள் சனசமூக பொதுநோக்கு மண்டபத்தில் பி.கிருஷ்ணானந்தன் தலைமையில் இடம்பெறும். (இ-3)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சர்வதேச மார்க்சிச குழுவின் சமதர்ம இயக்கத்தின் 81 ஆவது அகவையை முன்னிட்டு நிரந்தர புரட்சியிலிருந்து வர்க்க சமர சம் வரை எனும் பொருளிலான கலந்துரையாடல் நாளை மறுதினம் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இல.361, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள DMI கல்வி நிறுவனத்தில் ஏ.சி.ஜோர்ஜ் தலைமையில் இடம்பெறும். (இ-3)

# பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான இந்து தர்மாசிரியர் பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு நாளை மறுதினம் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தியிலுள்ள குருகுலம் அலுவலகத்தில் இடம்பெறும். (இ-3)

# கட்டடத்தைக் காணோம்



(சுரணவாய்)

நெல்லியடியில் சமுர்த்தி வங்கி அமைப்பதற்காக அடிக்கல் நாட்டப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்த நிலையில் அவ்விடம் பற்றைக் காடாக காட்சியளிப்பதால் சமுர்த்திப் பயனாளிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அப் பகுதிக்கான சமுர்த்தி வங்கி அமைப்பதற்கு கரணவாய் கீரிப்பள்ளி வீதியில் உள்ள காணி ஒன்று வாங்கப்பட்டது.

அதற்குள் சமுர்த்தி வங்கி கட்டடம் அமைப்பதற்காக 2014 ஆம் ஆண்டு அதன் தலைவர் கொழும்பிலிருந்து வருகை தந்து அடிக்கல் நாட்டி வைத்தார்.

அடிக்கல் நாட்டப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் எவ்வித கட்டடங்களும் அமைக்கப்படவில்லை.

அக் காணி பற்றைகள், புதர்கள் நிறைந்து காணப்படுகின்றது.

சமுர்த்தி அதிகாரசபையின் பொறுப்பற்ற செயலே என அதன் பயனாளிகள் விசனம் வெளியிட்டுள்ளனர். (இ-60)



வேலணை பிரதேச செயலகத்தின் பிரதேச ஒருங்கிணைப்பு மீளாய்வு ஒன்றுகூடல் நேற்று முன்தினம் புதன்கிழமை பாராளுமன்ற உறுப்பினர்களான சி.சிறிதரன், இ.அங்கஜன் ஆகியோரின் இணைத் தலைமையில் பிரதேச செயலகத்தின் ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் பாராளுமன்ற உறுப்பினரான ஈ.சரவணபவன், வட மாகாண சபை உறுப்பினர்களான விந்தன் கனகரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பிரதேச செயலாளர் உட்பட திணைக்கள அதிகாரிகள் கிராம மட்ட பொது அமைப்புக்கள் எனப் பலரும் கலந்து கொண்டதுடன் பல்வேறு விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

# உச்ச நீதிமன்றத்துக்கு மேலதிகமாக விசேட அரசியலமைப்பு நீதிமன்றம்

(கொழும்பு)

**பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் சட்டங்களை மீளாய்வுக்கு உட்படுத்தக்கூடிய வகையில் அரசியலமைப்பு நீதிமன்றமொன்றை அமைப்பதற்கான பரிந்துரைகள் புதிய அரசியலமைப்பை தயாரிக்கும் செயற்பாடுகளில் முன்வைக்கப்பட்டுள்ளது. உச்ச நீதிமன்றத்துக்கு மேலதிகமாக இந்த விசேட நீதிமன்றம் அமைக்கப்படுவதற்கான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.**

எதிர்வரும் ஜனவரி 5, 6ஆம் திகதிகளில் கூடவிருக்கும் அரசியலமைப்புத் தொடர்பான வழி நடத்தல் குழுவானது நிறைவேற்று அதிகாரம், அதிகாரப் பகிர்வு மற்றும் தேர்தல் முறை தொடர்பான மூன்று பிரதான விடயங்கள் குறித்து முடிவொன்றை எடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளது.

தற்பொழுது இருக்கும் அரசியலமைப்புக்கு அமைய பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படக்கூடிய சட்ட மூலங்கள் அரசியலமைப்புக்கு உடபட்டதா? என்பதை பரிசீலிப்பதற்கான அதிகாரம் மாத்திரமே உச்சநீதிமன்றத்துக்கு உள்ளது. இவ்வாறான நிலையில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றக் கூடிய சட்டங்கள் குறித்து ஆராய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கக் கூடிய வகையில் அரசியலமைப்பு நீதிமன்றமொன்று அமைப்பதற்கான ஆலோசனை முனவைக்கப்பட்டுள்ளது.

இந்த நீதிமன்றத்துக்கு ஓய்வுபெற்ற நீதியரசர்கள் அல்லது அரசியலமைப்பு தொடர்பில் அனுபவமுள்ள நீதிபதிகள் நியமிக்கப்படுவார்கள். இவ்விசேட நீதிமன்றத்துக்கும் பிரதம நீதியரசருக்கும் தொடர்பிருக்காத வகையில் அமைய வேண்டுமென்ற யோசனைகளும் அரசியலமைப்பை தயாரிக்கும் செயற்பாடுகளில் முன்மொழியப்பட்டுள்ளன.

இது மாத்திரமன்றி மாகாண சபைகளுக்கு வழங்கப்படும் அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி அவற்றை பலப்படுத்துவதே புதிய அரசியலமைப்பின் நோக்கமாக உள்ளது. மாகாணசபை முறை நடைமுறைக்கு வந்து பல ஆண்டுகளாகியிருக்கின்ற போதும் அதிகாரங்களை நடைமுறைப்படுத்த முடியாத நிலை மாகாண சபைகளுக்கு உள்ளது.

இந்த நிலைமையை மாற்றி மாகாண சபைகளும் தமக்கான அதிகாரங்களை பயன்படுத்துவதற்கான திட்டங்களும் புதிய அரசியலமைப்பில் உள்ளடக்க எதிர்பார்த்திருப்பதாக அவர்கள் தெரிவித்தனர். இரண்டாவது சபையொன்றை அமைப்பது, அது மத்திய அரசாங்கத்துடன் அதிகாரங்களைப் பகிர்ந்து செயற்படுவது குறித்து பெரும்பாலானவர்கள் விருப்பம் தெரிவித்திருப்பதாக வழிநடத்தல் குழுவின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகார முறை தொடர்பில் அரசியலமைப்பு தயாரிக்கும் செயற்பாடுகளில் பல்வேறு கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக பிரதமர் தெரிவு தொடர்பில் மூன்று யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

பாராளுமன்றத்தில் பெரும்பான்மையானவர்களின் விருப்பத்துடன் பிரதமர் ஒருவரைத் தெரிவு செய்வது அல்லது மக்களே நேரடியாகப் பிரதமர் ஒருவரை தெரிவு செய்வது அல்லது பிரதமர் ஒருவரை நியமித்து அவருக்கு செயற்படுவதற்கு இரண்டு வருட காலங்கள் அவகாசம் வழங்குவது போன்ற மூன்று யோசனைகள் குறித்தும் ஆராயப்பட்டு வருவதாக நம்பகமான தகவல்கள் கூறுகின்றன.

இருந்தபோதும் நிறைவேற்று அதிகாரம், தேர்தல் முறை மற்றும் அதிகாரப் பகிர்வு தொடர்பில் இதுவரை எந்தவொரு முடிவும் எடுக்கப்படவில்லை. இவ்வாறான நிலையில் எதிர்வரும் ஜனவரி 5, 6ஆம் திகதிகளில் கூடவிருக்கும் வழிநடத்தல் குழுக் கூட்டத்தில் இவை குறித்து முடிவொன்றுக்கு வந்தால், ஜனவரி 9, 10, 11ஆம் திகதிகளில் அரசியலமைப்பு சபையில் நடத்தப்படவிருக்கும் விவாதங்களில் இவைபற்றியும் விவாதிக்க எதிர்பார்த்திருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

தற்பொழுதுள்ள அரசியலமைப்பில் பௌத்த மதத்துக்குக் காணப்படும் முக்கியத்துவத்தைக் குறைக்குமாறு எந்தவொரு தரப்பினரும் அழுத்தம் கொடுக்கவில்லை.

இருந்தபோதும் ஏனைய மதங்களைச் சார்ந்தவர்கள் பக்கச்சார்பான முறையில் நடத்தப்படுவது தவிர்க்கப்பட வேண்டும் என்ற கருத்துக்களும் அரசியலமைப்பை தயாரிக்கும் வழிநடத்தல் குழு முன்னிலையில் முன்வைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. (இ-10)

# அரிசியை இறக்குமதி செய்யும் தீர்மானத்தில் மாற்றமில்லை

## அமைச்சர் பி.ஹரிசன் தெரிவிப்பு

(கொழும்பு)

அதிக விலையை கோரியுள்ள அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு நெற் சந்தைப்படுத்தல் சபையிடமுள்ள நெல் கையிருப்பை விநியோகிப்பதாக கிராமிய பொருளாதார விவகார அமைச்சர் பி. ஹரிசன் தெரிவித்தார்.

சந்தையில் அரிசி விலை அதிகரிப்பதை கட்டுப்படுத்துவதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஆயினும் அரிசியை இறக்குமதி செய்யும் தீர்மானத்தில் மாற்றமில்லை என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை நாட்டரிசி ஒரு கிலோகிராம் 87 ரூபாவுக்கும், பச்சை அரிசி ஒரு கிலோகிராம் 84 ரூபாவுக்கும், சம்பா 86 ரூபாவுக்கும் விற்கப்படுவதாக அந்த சங்கத்தின் தலைவர் டி.கே. ரஞ்சித் தெரிவித்தார்.

அத்துடன் கீரி சம்பா ஒரு கிலோகிராம் 115 முதல் 120 ரூபாவுக்கு இடைப்பட்ட விலையில் விற்பனை செய்யப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)


**LANKA FOOD GROUP CENTRE(Pvt).Ltd**

**Marketing support company**

Regd.No:GA2814

**பணியாளர் வேண்டுகை**

மேற்படி கம்பனியினை கணனி இயக்குநர், வியாபாரத் துறையில் அனுபவம் உள்ளவர்கள், கணக்காளர், சாரதி, கம்பனி மேற்பார்வையாளர்கள் ஆகியோரிடமிருந்து 19.12.2016 தொடக்கம் 13.01.2017 வரை விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. ஆகவே இத்துறை சார்புடையோர்கள் தங்கள் விண்ணப்பங்களை மேற்குறிப்பிடப்படும் விலாசத்துக்கோ அல்லது தொலைபேசி இலக்கம் ஊடாகவோ பதிவுகளை மேற்கொள்ளலாம். பதிவுகளை மேற்கொள்பவர்கள் சாரதி அனுமதிப்பத்திரம், கல்விச் சான்றிதழ்கள், பதிவிட அனுமதிப்பத்திரம் போன்றவற்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

குறிப்பு:
- அடிப்படைச் சம்பளம் ஒப்பந்த அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.
- வேலையில் அனுபவம் வாய்ந்தவர்கள் பிற வியாபார நிறுவனங்களுடன் இணைந்திருத்தல் தவிர்க்கப்பட வேண்டும்.

(6944)

A9 Road, 190 Mile post, chavakachcheri, jaffna.

E-mail:csclanka@gmail.com
T.P:021 492 7605
071 045 4635



கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1973 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா:49
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில் கனடா PR
எதிர்பார்ப்பு:சைவபோசனம்
தொ.இ: B/6610

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
தொ.இ: B/6611

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: பரணி
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:BSc/அரச தொழில்
தொ.இ: B/6612

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 32 செவ் 7 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:BSc/அரச தொழில்
தொ.இ: B/6614

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1993 RC
நட்சத்திரம்: ரோகினி
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:CIMA/ முகாமையாளர்
தொ.இ: G/6626

பிறப்பு: 1986 RC
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்
தொ.இ: G/6635

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 23
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:BSc, MSc/ அரச தொழில்
தொ.இ:G/6638

பிறப்பு: 1980 RC
நட்சத்திரம்: அவிட்டம்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:BA/ஆசிரியர்
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/6643

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai. jaffna@ gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

## மாற்றுத்திறனாளியாகவுள்ள பெற்றோரின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள்



மாந்தை மாற்றுத்திறனாளிகளுக்கான அமைப்பின் ஏற்பாட்டில் மடு வலயக்கல்வி அலுவலகத் திற்குற்பட்ட பகுதிகளில் மாற்றுத்திறனாளியாக உள்ள பெற்றோர்களின் பிள்ளைகளுக்கும் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற மாணவர்களுக்கும் பாடசாலை கற்றல் உபகரணங்கள் நேற்று முன்தினம் வழங்கி வைத்துள்ளனர். குறித்த நிகழ்வில் விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன் கலந்து கொண்டார்.

இதன் போது தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு பாடசாலை கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. மேலும் மாந்தை மாற்றுத்திறனாளிகளுக்கான அமைப்பிற்கு வடக்கு மாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன் தனது மாகாண சபை பாதீட்டு நிதியில் இருந்து கொள்வனவு செய்த அலுவலக தளபாடங்களையும் வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது. (2-9)

# செட்டிகுளம் அடப்பன்குளம் மக்கள் வீட்டுத்திட்டம்கோரி உணவு தவிர்ப்பு





(குருமன்காடு)

வவுனியா, செட்டிகுளம், அடப்பன்குளம் மக்கள் தமக்கு வீட்டுத் திட்டம் வழங்க வேண்டும் எனக் கோரி நேற்றுக் காலை முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

நேரியகுளம் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட அடப்பன்குளம் அம்மன் கோவில் வளாகத்தில் ஆரம்பமான உண்ணாவிரதப் போராட்டத்தில் வீட்டுத்திட்டம் கிடைக்காத 20 பேர் வரையில் கலந்து கொண்டுள்ளனர்.

தமது கிராமத்திற்கு வழங்கப்பட்ட வீட்டுத்திட்டம் திடீரென வேறு கிராமத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் அதற்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை எனவும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவித்தனர். இக் கிராம மக்கள் 1984 ஆம் ஆண்டு யுத்த அனர்த்தத்தால் இடம்பெயர்ந்து இந்தியா, மன்னார் ஆகிய பிரதேசங்களில் வாழ்ந்து மீண்டும் மீள்குடியேறி 7 வருடங்களாகிய போதிலும் 20 குடும்பங்களுக்கு வீட்டுத் திட்டம் புறக்கணிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இந் நிலையில் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டவர்கள் தமக்கு வீட்டுத்திட்டம் வழங்கப்படாது விடின் தொடர உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாகவும் தெரிவித்ததுடன் பல்வேறு சுலோக அட்டைகளையும் ஏந்தியுள்ளனர். (2-250-15)

# ஓமந்தை சோதனைச் சாவடி காணியை விடுவிக்க இராணுவத்தினர் இணக்கம்



ஓமந்தை சோதனைச் சாவடி காணியை விடுவிப்பதற்கு இராணுவத்தினர் இணக்கம் தெரிவித்துள்ளனர். பதிலீடாக இராணுவத்தினருக்கு ஏ-9 வீதியில் வேறு 6 ஏக்கர் காணி வழங்குவதற்கு வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் ரோஹண புஸ்பகுமார இணக்கம் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று ஓமந்தைச் சோதனைச்சாவடி அமைந்திருந்த இறம்பைக்குளம் காணி உரிமையாளர்களுக்கும் மேலதிக அரசாங்க அதிபருக்கும் இடையில் சந்திப்பொன்று மேலதிக அரசாங்க அதிபர் தலைமையில் இடம்பெற்றது. இதன்போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

இதன்போது ஓமந்தை சோதனைச்சாவடி அமைந்திருந்த 6 ஏக்கர் காணியை எடுத்து விட்டு மிகுதிக் காணியை விடுவிக்க இராணுவம் இணங்கியுள்ளதாக மேலதிக அரசாங்க அதிபர் திரேஸ்குமார் மக்களிடம் தெரிவித்திருந்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த மக்கள் அப்பகுதியில் சுமார் 65 குடும்பங்களுக்கு சொந்தமான காணி உள்ளதாகவும் கடந்த 23 ஆண்டுகளாக இராணுவத்தினர் அதனை தம்வசப்படுத்தி வைத்திருப்பதாகவும் தெரிவித்தனர். தமது எல்லோரது காணிகளையும் முழுமையாக விடுவிக்கப்பட வேண்டும் எனவும் கோரியிருந்தனர்.

இதனையடுத்து குறித்த விடயம் தொடர்பில் அப்பகுதி காணி உரிமையாளர்கள் வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் மற்றும் வடமாகாண சபை உறுப்பினர் ம.தியாகராசா ஆகியோரது கவனத்திற்கு இந்த விடயத்தை கொண்டு வந்ததையடுத்து, மாவட்ட செயலகத்திற்கு வருகை தந்த அவர்கள் அம் மக்களுடனும் மாவட்ட அரசாங்க அதிபர் ரோஹண புஸ்பகுமார, மேலதிக அரசாங்க அதிபர் திரேஸ்குமார் ஆகியோருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இக்கலந்துரையாடல் முடிவடைந்த பின்னர் கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் ஓமந்தை சோதனைச் சாவடி அமைந்திருந்த இறம்பைக்குளம் காணியை முழுமையாக விடுவிக்க இராணுவத்தினர் இணங்கியுள்ளதாகவும் அவர்களுக்கு பதிலீடாக 6 ஏக்கர் காணி ஏ-9 வீதியில் வழங்க வேண்டும் எனவும் அரசாங்க அதிபரிடம் தெரிவித்திருக்கின்றனர். இராணுவத்திற்கு ஏ-9 வீதியில் வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வேறு 6 ஏக்கர் காணியை வழங்குவதற்கு அரச அதிபர் இணக்கம் தெரிவித்துள்ளதுடன் மக்களின் காணியை முழுமையாக விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்துள்ளதாகவும் தெரிவித்தார். (2-250-15)




## சஞ்சீவ காட்டுப்பகுதிக்குள் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நிலையம் சுற்றிவளைப்பு



கிளிநொச்சி மாவட்டப் பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட பளை பொலிஸ் பிரிவில் உள்ள சஞ்சீவ காட்டுப்பகுதிக்குள் சட்டவிரோதமான முறையில் இயங்கிய கசிப்பு உற்பத்தி நிலையம் சுற்றி வளைக்கப்பட்டு 25 லீற்றர் கசிப்பு, 150 லீற்றர் கசிப்புக் கோடா என்பன கைப்பற்றப்பட்டுள்ளதுடன் கசிப்புக் காய்ச்சுவதற்குப் பயன்படுத்திய உபகரணங்கள் கைப்பற்றப்பட்டதன் பின்னர் கசிப்பு உற்பத்தி நிலையம் நிர்மூலமாக்கப்பட்டுள்ளது என பளைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு 8 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பளைப்பொலிஸாருக்கு பொதுமகன் ஒருவர் வழங்கிய இரகசியத் தகவலையடுத்து கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் பாலித சிறிவர்த்தனவின் நெறிப்படுத்தலில் கிளிநொச்சி மாவட்ட உதவி பொலிஸ் பரிசோதகர் றொசான் ராஜபக்ஷவின் வழிகாட்டுதலில் பளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.எஸ். டபிள்யூ. ரஞ்சன பண்டார தலைமையில் திடீர் சுற்றி வளைப்பை மேற்கொண்ட போதே கசிப்பு உற்பத்தி நிலையம் நிர்மூலமாக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவத்தில் கைப்பற்றப்பட்டுள்ள தடயப்பொருட்கள் பளை பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருப்பதுடன் சம்பவ இடத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ள சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக பளைப் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

### தேசிய திறன் போட்டியில்
## கிளி.மாவட்ட செயலகம் இரண்டாம் இடம்

இலங்கையிலுள்ள மாவட்டச் செயலகங்களுக்கிடையே நடத்தப்பட்ட தேசியத் திறன் போட்டியில் கிளிநொச்சி மாவட்டச் செயலகம் இரண்டாம் இடத்தினைப் பெற்ற நிலையில் அதற்கான வெற்றிக் கேடயத்தினை நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற நிகழ்வில் ஜனாதிபதியிடமிருந்து கிளிநொச்சி மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம் பெற்றுக் கொண்டார். இந் நிகழ்வில் மாவட்டச் செயலகத்தின் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் பங்கு கொண்டனர். வடக்கு மாகாணத்தில் தேசியத்திறன் போட்டியில் கிளிநொச்சி மாவட்டச் செயலகம் முதற்தடவையாக இரண்டாம் இடத்தினைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-312)

### ஜனாதிபதி செயலகத்தின் உத்தரவிற்கமைய
# சட்டவிரோதமாக 18 மதுபான போத்தல்கள் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் கைது
## ஆனந்தபுரம் கிராமத்தில் சம்பவம்



கிளிநொச்சி ஆனந்தபுரம் கிராமத்தில் கூடுதலான அரச மதுபானப் போத்தல்களை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டிலும் அனுமதிப்பத்திரம் இன்றி சட்டவிரோதமாக விற்பனை செய்த குற்றச்சாட்டிலும் ஜனாதிபதி செயலகத்தின் உத்தரவிற்கமைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இக் கைது நடவடிக்கை நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது. இது தொடர்பில் தெரியவருவதாவது.

குறித்த கிராமத்தில் மதுபான விற்பனை இடம்பெறுவதால் மக்கள் பல்வேறு இடையூறுகளை சந்திப்பதாக தெரிவித்து, கிராம மக்களால் ஜனாதிபதி செயலகத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டிருந்தது.

இதனையடுத்து, ஜனாதிபதி செயலகத்தால் விடுக்கப்பட்ட அறிவுறுத்தலுக்கமைய குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதோடு ஒவ்வொன்றும் 750 மில்லி லீற்றர் கொள்ளளவு கொண்ட 18 மதுபான போத்தல்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் வெலிக்கன்னவால் நியமிக்கப்பட்ட விசேட பொலிஸ் குழு, மேற்படி நடவடிக்கையை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-312)

# கன்ரர் ரக வாகனத்தில் கடத்திய பதினொரு மரக்குற்றிகள் சிக்கின

## சாரதியும் கைதானார்



(முல்லைதீவு)

முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட மாங்குளம் பொலிஸ் நிலைய வீதிப் போக்குவரத்து பொலிஸார் வீதிப் போக்குவரத்து கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தவேளை கன்ரர் வாகனம் ஒன்றை நிறுத்துமாறு சமிக்ஞை விடுத்த போது குறித்த வாகனம் தொடர்ந்து பயணித்ததை யடுத்து அதனை பின் தொடர்ந்த பொலிஸார் உமையாள்புரம் பகுதியில் வைத்து தடுத்து நிறுத்தி சோதனையிட்டபோது கன்ரர் வாகனத்தில் கடத்தி வரப்பட்ட 11 முதிரை மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் சந்தேகத்தின் பெயரில் அதன் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளதாக மாங்குளம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று வியாழக்கிழமை அதிகாலை 5மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது,

மாங்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மாலின் பெரேராவின் உத்தரவுக்கமைய விசேட வீதிப் பரிசோதனையில் ஈடுபட்ட மாங்குளம் வீதிப்போக்குவரத்து கண்காணிப்புப் பொலிஸார் சந்தேகத்திற்கிடமான வகையில் காணப்பட்ட வாகனத்தை மறித்த போதே முதிரை மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் அதன் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளதாக மாங்குளம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது கைப்பற்றப்பட்டுள்ள முதிரை மரக்குற்றிகள் அதனை ஏற்றி வந்த கன்ரர் வாகனமும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் கைதான சந்தேக நபரிடம் விசாரணை நடைபெற்று முடிந்ததும் முல்லைத்தீவு மாவட்டம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளதாகவும் மாங்குளம்பொலிஸ்நிலையத்தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(2-15-281)




# 'சமயங்களின் ஊடாக நல்லிணக்கம் காணல்'

## சர்வமதத் தலைவர்களுடன் கலந்துரையாடல்

### மன்னாரில் நடைபெற்றது



(மன்னார்)

இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டிலும் மன்னார் சமாதானத்திற்கும் மீள் இணக்கத்திற்குமான வழங்கல் அமைப்பின் அனுசரணையுடன் "சமயங்களினூடாக நல்லிணக்கம் காணல்" எனும் தொனிப்பொருளில் சர்வமதத் தலைவர்களை உள்ளடக்கி மன்னார் முருங்கன் டொன் பொஸ்கோ கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் காலை விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் நிகழ்ச்சித்திட்ட அதிகாரி எப்.நிக்ஸன் குரூஸ், மன்னார் சமாதானத்திற்கும் மீள் இணக்கத்திற்குமான வழங்கல் நிறுவனத்தின் மாவட்ட திட்ட முகாமையாளர் செல்வநந்தராஜா, மற்றும் அழைக்கப்பட்டவர்கள் சார்பாக சர்வமதத் தலைவர்கள், ஊடகவியலாளர்கள், கிராம மட்ட பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டிலும் மன்னார் சமாதானத்திற்கும் மீள் இணக்கத்திற்குமான வழங்கல் அமைப்பின் அனுசரணையுடன் "சமயங்களினூடாக நல்லிணக்கம் காணல்" எனும் தொனிப் பொருளில் மாவட்டங்கள் தோறும் மேற்கொள்ளப்பட்டு வரும் இன நல்லிணக்கம் தொடர்பான நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது.

மேலும் இலங்கையில் இடம்பெற்ற முரண்பாடுகளின் பின்னர் ஏற்பட வேண்டிய நல்லிணக்கத்திற்காகவும், சமூக ஒத்திசைவிற்காகவும் சமயங்களுக்கிடையில் மக்களுடன் மக்கள் இணைந்து செயற்படுவதை வலுப்படுத்துதல் போன்றவை தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-9)

# உரிமைகளை வென்றெடுக்க வேண்டுமெனில் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்

## வினோ எம்.பி தெரிவிப்பு

தமிழ் மக்களுடைய இனப் பிரச்சினை தீர்வு விடயத்திலே ஏமாற்றப்பட்டு விடுவோமா? என்கின்ற ஆதங்கம் தமிழ் மக்களிடையே நிலவுவதாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவில் கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு மற்றும் வறிய மாணவர்களுக்கு உதவி வழங்கும் நிகழ்வு தமிழ் தாய் கல்வி நிலைய வளாகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துதெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தேசிய அரசாங்கத்தோடு, நாங்கள் இணைந்து செயற்படுகிறோம் என்பதற்காக தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ள முடியாத. அல்லது கடந்த கால தமிழ் மக்களுடைய தியாகங்களுக்கு, தமிழ் மக்களின் இலக்குகளுக்கு ஈடான தீர்வு திட்டங்கள் தர மறுக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில் நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஒற்றுமையாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பு ஒன்றுபட்டு நிற்க வேண்டும்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பிற்குள் இருக்கும் சில கட்சிகளினுடைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கிடையே பிளவு ஏற்பட்டு விடுமா? என்கின்ற சந்தேகம் எம்மவர் மத்தியில் காணப்படுகின்றது. அதனை செய்வதற்கும் அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை எமது உரிமைகளை வென்றெடுக்க வேண்டும் என்றால் தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் எமக்கான அதிகாரங்களை நாம் மீண்டும் இழக்கின்ற நிலையே ஏற்படும் எனவும் வினோநோதராதலிங்கம் தெரிவித்துள்ளார். (2-281)

# முன்னாள் போராளிகளுக்கு விச ஊசி ஏற்றப்பட்ட விவகாரம் தொடர்கின்றது

## சாந்தி எம்.பி.கவலை

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டும் சரணடைந்த நிலையிலும் புனர்வாழ்வு முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு, விச ஊசி ஏற்றியிருக்கின்றார்கள் என்ற சந்தேகம் தொடர்ந்தும் வலுப்பெற்று வருவதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராசா அச்சம் வெளியிட்டுள்ளார்.

புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் சமூகத்துடன் இணைக்கப்பட்ட நிலையில், காய்ச்சல் காரணமாக திடீரென வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உயிரிழந்த முன்னாள் போராளியான முல்லைத்தீவு -வற்றாப்பளை பகுதியைச் சேர்ந்த இராசதுரை திக்சனின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டு அஞ்சலி உரை நிகழ்த்தியபோதே பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராசா மேற்கண்டவாறு தெரிவித்திருக்கின்றார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

சுகவீனம் காரணமாக திருகோணமலை - குச்சவெளி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே குறித்த முன்னாள் போராளி உயிரிழந்திருக்கின்றார்.

யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள சூழ்நிலையிலேயே தமிழர் பகுதிகளில் வாழும் தாய்மாரின் நெஞ்சில் யுத்தம் கொளுந்துவிட்டு எரிவதாகவும் கவலை வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர், தமிழ் மக்களது விடுதலைக்காக ஆயுதம் ஏந்திப் போராடிய முன்னாள் போராளிகள் தற்போது அங்கவீனர்களாக ஆக்கப்பட்டுள்ளதுடன் சமூகத்தினால் கொச்சைப்படுத்தப்பட்டு ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் குறுகிய காலம் உறுப்பினராக இருந்ததாக தெரிவித்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட இவர், புனர்வாழ்வு என்ற பெயரில் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டு நான்கு வருடங்களுக்கு முன்னர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

புனர்வாழ்வின் போது முன்னாள் போராளி சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டிருந்ததாகவும், சிகிச்சையளிக்குமாறு பல தடவைகள் கோரிக்கை விடுத்திருந்த போதும் அவருக்கு உரிய சிகிச்சை வழங்கப்படாத நிலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாலேயே அவர் உயிரிழந்திருப்பதாக அவரது குடும்பத்தினர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை அரசாங்கத்தின் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டு புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டு விடுதலை செய்யப்பட்ட நிலையில் உயிரிழந்த மற்றுமொரு முன்னாள் போராளியான தேவசகாயம் அமலதாஸின் மரணத்தில் சந்தேகம் நிலவுவதாக அவரது மனைவி அமலதாஸ் நாகேஸ்வரி தெரிவித்துள்ளார். (2-281)








சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம் நேற்று முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சியில் அனுஷ்டிக்கப்பட்டது. கிளிநொச்சி டிப்போ சந்தியிலிருந்து கவனயீர்ப்புப் பேரணி ஆரம்பிக்கப்பட்டு கூட்டுறவு சபை மண்டபத்தை வந்தடைந்ததும் நிகழ்வுகள் ஆரம்பமாகின. குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராசா வருகை தந்திருந்தார். இதன்போது ஜனாதிபதி மற்றும் பிரதமர், முதலமைச்சர் ஆகியோருக்கு மகஜரும் கையளிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (படங்கள்:-மல்லாவி செய்தியாளர்)

# வரவு-செலவுத் திட்ட அமுல்படுத்தலைக் கண்காணிக்க அரச,தனியார் துறை அங்கத்தவர் குழுவை நியமித்தல்



## பட்ஜெட் - 2017

நல்லாட்சி அரசாங்கத்தின் இரணடாவது வரவு - செலவுத் திட்டம் அனைவருக்கும் நன்மைதரும் விரைவான அபிவிருத்தியை நோக்கி என்ற தொனிப்பொருளில் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவினால் 10.11.2016 அன்று நாடாளுமன்றில் முன் வைக்கப்பட்டது. நிதி அமைச்சரின் 2017ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்ட வாசிப்பின் போது...

(தொடர்ச்சி)

510.உலர் துறைமுக விடுவிப்பு அரச, தனியார் பங்கேற்பின் அடிப்படையில் உலர் துறைமுகங்களை ஸ்தாபிப்பதற்கான சாத்தியங்கள் தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம்.

**511.பெறுமதி மதிப்பீட்டு தரவுத்தளம்**

இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் தீர்வைநோக்கத்திற்கான சுங்க பெறுமதி மதிப்பீடு உலக வர்த்தக அமைப்பின் பெறுமதி மதிப்பீட்டு உடன்படிக்கைக்கு அமைவாக கொடுக்கல்- வாங்கல் பெறுமதி மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டதாகும். இதனால் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் உண்மையான கொடுக்கல்-வாங்கல் பெறுமதியினை உறுதிப்படுத்துவதற்கான ஒரு சீரான முறையொன்று பிரயோகிக்கப்படும். 2017 ஜனவரியிலிருந்து பயன்வலுப் பெறும் வகையில் இறக்குமதி செய்யப்பட்ட ஏறக்குறைய 700 பொருட்களுக்கான ஆகக் குறைந்த பெறுமதி மதிப்பீட்டினைக் கொண்ட தரவுத் தளமொன்றினைஸ்தாபிக்கவுள்ளது. இதனை இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் விடுவிப்புச் செயன்முறையின் போது பெறுமதி மதிப்பீட்டுக்கான உசாத்துணையாக பயன்படுத்த முடியும்.

**512.முற்கூட்டிய விதிமுறைகள்**

இறக்குமதியின் போது செலுத்த வேண்டிய எதிர்பார்ப்பு வரிகளினை உறுதிப்படுத்தும் வகையில் சுங்கத்திணைக்களம் தற்பொழுது நடைமுறையிலுள்ள பொருட்களுக்கான முற்கூட்டிய விதிமுறைகளை வெளியிடும்.

**513.இணங்கியொழுகும் வியாபாரிகளுக்கு விருது வழங்குதல்**

சட்டங்களுக்கு இணங்கியொழுகும் வியாபாரிகளுக்கு ஆவணங்கள் பரிசீலனை மற்றும் பொருட்கள் பரிசோதனைக்கான விசேட பரிசோதனை வசதிகளை வழங்கும்.

**514.பிரசுரங்கள் மற்றும் தகவல் கிடைப்பனவு**

சுங்க நடைமுறைகள் மற்றும் நடபடிமுறைகளில் வெளிப்படைத்தன்மையினை உறுதிப்படுத்தும் வகையில், இலங்கையில் தேசிய வர்த்தகத்தகவல மையமொன்றினை சுங்கத் திணைக்களம் ஸ்தாபித்து செயற்படுத்தும்.

**515.ஒற்றைச் சாளரம்**

அதிகார சபைகள் அல்லது முகவராண்மைகளின் பங்குபற்றுதலுடன் ஒற்றை அனுமதியொன்றினூடாக இலத்திரனியல் முறைமையில் பொருட்களை மாற்றுதல் அல்லது இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகளுக்குத் தேவையான ஆவணங்கள் அல்லது தரவுகளை சமர்ப்பிப்பதற்கு வியாபாரிகளை இயலச் செய்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை சுங்கத் திணைக்களம் ஏற்கனவே எடுத்துள்ளது.

**516.கொள்கலன் ஸ்கேனிங் முறைமை**

கொள்கலன் மற்றும் பொதிகள் விடுவிப்புச் செயன்முறையினை வினைத்திறன் மிக்கதாகவும் பயன் வலுவுடனும் மேற்கொள்வதனை உறுதிப்படுத்துவதற்கு துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களில் கொள்கலன் ஸ்கேனிங் முறைமையொன்றினை பொருத்துவதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம்.

517.கடலினூடாக இடம்பெறும் கடத்தல் செயற்பாடுகளைத் தடுப்பதற்கு சுங்கத்திணைக்களம் அதன் சமுத்திர பிரிவை மீள் செயற்படுத்தவுள்ளது. இந்த பிரிவினை வலுப்படுத்தும் வகையில் 6 புதியகடல் ரோந்துப் படகுகளைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா 250 மில்லியனை ஒதுக்கீடு செய்ய நான் முன்மொழிகின்றேன்.

**இணையவழி கொடுக்கல்-வாங்கல்கள்**

518.தொழில்நுட்ப விருத்தியுடன் இணையவழி கொடுக்கல்-வாங்கல்கள் பிரபல்யமடைந்துள்ளன. இம்முறை சாதாரணமாக வர்த்தக மற்றும் நிதிசார் கொடுக்கல்-வாங்கல்களில் உத்தியோகபூர்வமாக செலுத்தப்படவேண்டிய வரிகள் மற்றும் கட்டணங்களை கொடுப்பனவு செய்யாதிருப்பதற்கான வழிமுறையாக பயன்படுத்தப்படுகின்றது. இதனால் பண்டங்கள் துறைமுகம், விமான நிலையம், தபாலகம் மற்றும் விரைவுதபால் சேவைகள் ஆகியவற்றினூடாக நாட்டினுள் கொண்டுவரப்படும் போது அவற்றின் மீதான வரிகள் உரிய முறையில் அறவிடப்படாமை காரணமாக அரசாங்கத்திற்கு குறிப்பிடத்தக்களவு வருமான இழப்பு ஏற்படுகின்றது. அமேசன், ஈபே போன்ற இணையவழி நிறுவனங்கள் இலங்கையினுள் மேற்கொள்ளுகின்ற கொடுக்கல்-வாங்கல்களின் மீது அரசாங்கத்தின் சார்பாக வரிகள் அறவிடுவதனை வசதிப்படுத்தும் வகையில் இலங்கை தகவல் தொழில் நுட்ப முகவரகம் ஒரு பொதுவான தளமொன்றினை உருவாக்கவுள்ளது. இந்தப் பொதுத்தளத்தினை பொது திறைசேரி கண்காணிப்புச் செய்யவுள்ளது.

**திறந்த அரசாங்க பங்கேற்பு**

519. இச்சபையால் 2016 இல் அங்கீகரிக்கப்பட்ட தகவல் அறிந்து கொள்வதற்கான உரிமைச் சட்ட மூலம் 2017 பெப்ரவரியில் இருந்து சட்டமாக்கப்படும். இச்சட்ட மூலத்தினை வெற்றிகரமாகசெயற்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக ரூபா 25 மில்லியனை ஒதுக்குவதற்கு நான்முன்மொழிகின்றேன்.

520. சபாநாயகர் அவர்களே, நல்லாட்சிக்கான மற்றும் நிலைபேறான அபிவிருத்திக்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பினை மீள் உறுதிப்படுத்தும் முகமாக இலங்கை அரசாங்கமானது இவ் வருடத்தில் திறந்த அரசாங்க பங்கேற்பு முன்னெடுப்புக்களுக்கும் அர்ப்பணித்துள்ளது என்பதை நான் இச்சபைக்கு உறுதிப்படுத்த விரும்புகின்றேன். இவ்வரவு-செலவுத் திட்டமானது சுகாதாரம், கல்வி, தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்பம், சூழல், உள்ளூராட்சி, பெண்கள், அரசியலில் பெண்கள், ஊழல் மற்றும் தகவல் அறிவதற்கான உரிமை என்ற எமது அர்ப்பணிப்பான வேலைச் சட்டகத்திற்கு உட்பட்டவாறே தயாரிக்கப்பட்டுள்ளது. உண்மையான திறந்த அரச கோட்பாட்டை அடைந்து கொள்வதை உறுதிப்படுத்தும் வகையில் நாங்கள் தொடர்ந்தும் நல்லாட்சி வேலைச சட்டகத்தை உறுதிப்படுத்துவோம்.

521.சபாநாயகர் அவர்களே, அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் நியதிகளுக்கமைவாக வருமான மற்றும் செலவின முன்மொழிவுகள் பற்றிய அனைத்து விபரங்களையும் நான் இச்சபைக்கு சமர்ப்பிக்கின்றேன்.

**வரவு-செலவுத் திட்ட அமுலாக்கல்**

522.சபாநாயகர் அவாகளே, எமது வருமானங்கள் மற்றும் செலவினங்களை முன்னெதிர்வு கூறுவதில் நாம் மிகவும் பழைமைவாதிகளாக காணப்படுகின்றோம். அதேவேளை, வருமாண மதிப்பீடுகள் மீது எதிர்மறையான தாக்கம் செலுத்தக்கூடிய வெளிவாரியான பல்வேறுபட்ட நிச்சயமற்ற தொடர்பாக தொடர்ந்தும் நாம் கவனத்தில் கொண்டுள்ளோம். எவ்வாறாயினும் எமது அரசாங்கமானது அரசிறையை பலப்படுத்துவதற்கு அர்ப்பணித்துள்ளதோடு, ஏதாவது வருமானக் குறைபாடுகள் ஏற்படுமாயின் இச்சபையின் அனுமதியோடு செலவுகளானது மீள் ஒழுங்குபடுத்தப்படும்.

523.சபாநாயகர் அவர்களே, செயற்றிறனான வரவு-செலவுத் திட்ட அமுல்படுத்தலானது, நாம் இலக்குபடுத்தியுள்ள பொருளாதார வளர்ச்சியை அடைந்து கொள்வதை உறுதிப்படுத்துவதற்கு மிகவும் இன்றியமையாததொன்றாகும். இச்சூழ்நிலையில், வரவு- செலவுத் திட்ட அமுல்படுத்தலை கண்காணிப்பதற்கு அரச மற்றும் தனியார் துறை அங்கத்தவர்களைக் கொண்ட குழுவொன்றினை நியமிப்பதற்கு முன்மொழிகின்றேன்.

524.சபாநாயகர் அவர்களே, நாம் ஆரம்பித்துள்ள இப்பயணமானது தனித்துவிடப் படமாட்டாது. இப்பணியில் தனியார் துறையினர் எம்முடன் பங்கெடுப்பர். எனவே விசேட சில கருத்திட்டங்களை செயற்படுத்துவதில் அரசாங்கத்துடன கைகோர்க்குமாறு இந் நாட்டிலுள்ள பெரிய கம்பனிகள் 100 இற்கு நான் வேண்டுகோள் விடுக்கின்றேன். இக் கருத்திட்டங்களுக்கான வட்டிச் செலவினம் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும்.

525.இவ்வரவு-செலவுத் திட்டமானது நலன்புரிகளை மாத்திரம் கருத்திற் கொண்ட மரபு ரீதியான வரவு-செலவுத் திட்டங்களை விட சிறப்பான உட்கட்டமைப்பு வசதிகளினூடாக சிறந்த வேதனத்துடன் கூடிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்கி, இலங்கை மக்களை வலுவூட்டுவதனூடாக எமது மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்தக் கூடிய நிலைபேறான சூழலை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டதாகும்.

526.மக்கள் மீது வரிகளை சுமத்துவதற்கு நிதி அமைச்சருக்கு எவ்வித தேவையுமில்லை. ஒவ்வொரு நிதி அமைச்சரும் மக்களது வாழ்க்கையினை முன்னேற்றுவதற்கு சலுகையினை வழங்குவதனையே விரும்புவர். எவ்வாறாயினும், இதற்கு முன் எவரும் பெற்றிறாத மோசமான பொருளாதார நெருக்கடிகளை எமது அரசாங்கம் வழியுரிமையாகப் பெற்றுள்ளது. நாம் சிக்குண்டுள்ள கடன்பொறியிலிருந்து எம்மை விடுவித்துக் கொள்வதற்கு ஒரு தொடரான போராட்டத்திற்கு முகங்கொடுப்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரிடமிருந்து இது தொடர்பில் நான் பெற்றுக்கொள்ளும் வழிகாட்டல்கள் மதிப்பிடப்பட முடியாதவை. இச்சந்தர்ப்பத்தில் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் கருத்தொன்றை இங்கு நினைவுகூர விரும்புகின்றேன். அவர் "இந்த யுத்தத்தை அடுத்த இராணுவ தளபதிக்கு விட்டுச் செல்லமாட்டேன்"என கூறினார். இந்த சபைக்கும் எமது மக்களுக்கும நாங்கள் உறுதியாக கூற விரும்புவது யாதெனில் எமது அரசாங்கம் இந்த பொருளாதார யுத்தத்தை எமது எதிர்கால சந்ததிகளுக்கு விட்டுச் செல்லாது என்பதேயாகும்.

527.எமது அரசாங்கமானது கடந்த வருடம் 8 ஆம் திகதி சுபீட்சத்தையும் நல்லாட்சியையும் வேண்டி மக்கள் வழங்கிய ஆணைக்கேற்ப அதனைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஒரு நீண்ட பயணத்தை ஆரம்பித்துள்ளோம். இதற்கு அனைவரினதும் ஒத்துழைப்பு இன்றியமையாததாகும். எனக்கு ஒன்றைக் கூற விடுங்கள். நாங்கள் அனைவரும் வித்தியாசமான கருத்துக்களைக் கொண்டுள்ளோம். அதற்கு நாம் உரித்துடையவர்கள். அதுதான் ஜனநாயகத்தின் சிறப்பு. எமக்கு வாக்களித்த எம்மக்களுக்கான எமது இறுதியான பொறுப்பு என்னவெனில் நாங்கள் எதிர்காலத்தை நோக்கிச் செல்வதா? அல்லது இறந்த காலத்தில் புரள்வதா? என்று தீர்மானிக்க வேண்டியுள்ளது. இறந்த காலத்தை பற்றி அலட்டிக் கொண்டிருப்பதன் ஆபத்து பற்றி வின்சன்ட் சேர்ச்சில் கூறுகையில்,

"நாங்கள் இறந்த காலம் மற்றும் நிகழ்காலம் தொடர்பில் ஒரு சச்சரவில் ஈடுபட்டால் நாங்கள் எதிர்காலத்தை இழப்பதைக் காணலாம்"

இங்கு இருக்கும் யாவரும் எதிர்காலத்தை இழக்க விரும்ப மாட்டோம். ஆகவே அனைத்து மக்களுக்கும் மற்றும் எதிர்கால சந்ததியினருக்கும் ஒரு பாதுகாப்பான எதிர்காலத்தை உருவாக்குவதற்கு நாம் ஒன்றிணைந்து செயற்படுவோம்.

528.ஜனாதிபதி,பிரதமர், எனது அமைச்சரவைச் சகாக்கள், இங்கு சமூகமளித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் இந்த வரவு- செலவுத்திட்டத்தினை தயாரிப்பதற்கு பங்களிப்புச் செய்த திறைசேரியின் செயலாளர் மற்றும் பொது திறைசேரியின் அலுவலர்கள் அனைவருக்கும் எனது நன்றியறிதலை தெரிவித்துக்கொள்கின்றேன். எமது கோரிக்கைக்கிணங்க இதிலுள்ள பல முன்மொழிவுகளை தந்துதவிய அனைருக்கும் எனது சிறப்பான நன்றிகள் கூற விரும்புகின்றேன்.

(முற்றும்)

# ஜெயலலிதா மரணத்தின் மர்மங்கள்!

ஜெயலலிதாவின் தாயார் சந்தியா ஆசை ஆசையாய் கட்டிய வீடுதான் 'வேதா இல்லம்' வீட்டைக் கட்டி திறப்பு விழா காண்பதற்குள் சந்தியா இறந்து போனார். தன் அம்மாவின் நினைவாக அந்த வீட்டுக்கு 'வேதா இல்லம்' என்று பெயர் சூட்டினார் ஜெயலலிதா. சந்தியா என்பது சினிமாவுக்காக வைத்துக் கொண்ட பெயர். வேதா தான் அவரது பெற்றோர் வைத்த பெயர்!

அந்த 'வேதா இல்லத்தில்' இதோ இன்னொரு கண்ணீர்க் காட்சி. இப்படி ஒரு காட்சியை போயஸ் கார்டன் இவ்வளவு சீக்கிரம் எதிர்பார்த்து இருக்காது. ஜெயலலிதா ராணியாக வாழ்ந்த வீட்டில் உயிரற்ற சடலமாகக் கொண்டு போய் இறக்கப்பட்டார். அந்த வீட்டுக்கு என்ன ராசியோ தெரியாது.

'ஜெயலலிதா காலமாகிவிட்டார்' என்ற அறிக்கை அப்பலோ வைத்தியசாலையில் இருந்து வருவதற்கு இரண்டு மணி நேரத்துக்கு முன்பே போயஸ் கார்டனில் பரபரப்பு ஆரம்பித்துவிட்டது. திடீரென நூற்றுக்கணக்கில் அங்கு பொலிஸார் குவிக்கப்பட்டனர். வீதியின் இரு புறமும் தடுப்புகளை வைத்து கூட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டு இருந்தனர். போயஸ் கார்டனுக்குள் நுழையும் வீதிகளுக்குள் ஆட்கள், கார்கள் நுழையாதவாறு தடுக்கப்பட்டது. கார்டன் ஊழியர்கள், முக்கியஸ்தர்கள், பொலிஸ் வைத்திருந்த பட்டியலில் பெயர் உள்ளவர்களை மட்டுமே அந்த வட்டாரத்துக்குள் அனுமதித்தனர். நடுச்சாமம் 12.54 மணிக்கு அம்புலன்ஸ் ஒன்றுவர... தொண்டர்கள் அதைச் சூழ்ந்துகொண்டனர். அந்த வாகனம் போயஸ் கார்டன் வீட்டுக்குள் சென்றது. அடுத்த 10 ஆவது நிமிடத்தில் கார்டனில் இருந்து வெளியே சென்றது. (இந்த வாகனத்தில்தான் பின்னர் ஜெயலலிதாவின் உடலை ஏற்றி வந்தார்கள்) 'அப்பலோவில் இருந்து அம்புலன்ஸை கார்டனுக்கு முதலில் அனுப்பி, பின்னர் கார்டனில் இருந்து அப்பலோவுக்கு ஏன் அனுப்பினார்கள்?' என்பதும் சந்தேகத்துக்கு உரியதாக இருக்கிறது. அப்பலோ வைத்தியசாலையில் இருந்து ஜெயலலிதாவை சுமந்து கொண்டு அதே அம்புலன்ஸ் மீண்டும் போயஸ் கார்டனுக்கு வந்தது. அப்போது நேரம் அதிகாலை 2.30 மணி.

அந்த நேரத்தில் அ.தி.மு.க தொண்டர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டது. இதையடுத்து, தடியடி நடத்தி கூட்டத்தைக் கலைத்துக் கொண்டு இருந்தனர். "கடைசி வரை எங்க அம்மாவைப் பார்க்க முடியாம செஞ்சுட்டீங்களே பாவிகளா" என பொலிஸாரைப் பார்த்து, சிலர் ஆவேசமாகக் கூறிக் கொண்டு இருந்தனர்.

ஜெயலலிதா அண்ணன் மகள் தீபா அந்த இடத்துக்கு வந்தார். தொண்டர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டு, 'எங்க அம்மா மாதிரியே இருக்க!' என கட்டிப்பிடித்து அழத் தொடங்கினர்.




ஆனால், அவரை உள்ளே அனுமதிக்க பொலிஸார் மறுத்து விட்டனர். பொலிஸ் 'தடுப்புக்கேற்' அருகே காலை வரையில் நின்றுகொண்டு இருந்தார் தீபா. இளவரசியின் உறவினரும் கடந்த அ.தி.மு.க ஆட்சியில் கோலோச்சி பின்னர் கட்சியை விட்டு நீக்கப்பட்டவருமான ராவணன் வந்தார். அவரையும் உள்ளே அனுமதிக்க பொலிஸார் மறுத்து விட்டனர்.

முதலில் மிரட்டிப் பார்த்த ராவணன் பின்பு கெஞ்சியும் பார்த்தார். பட்டியலில் அவர் பெயர் இல்லாததால் உள்ளேவிட முடியாது எனக் கறாராகச் சொல்லி விட்டனர் பொலிஸார். தேனி தங்கத் தமிழ் செல்வன் வந்தார். அவரையும் அந்த வீதிக்குள் விடவில்லை.

முட்டிப் பார்த்துவிட்டு அமைதியாகி விட்டார் அவர். அடுத்து வந்த செங்கோட்டையனை உள்ளே அனுமதிக்க மறுத்துவிட, "நான் கட்சியின் சீனியர், நான் எம்.எல்.ஏ. என்னையே உள்ள விட மாட்டேன்றீங்க... இது எல்லாம் யார் சொல்லி செய்றீங்கன்னு தெரியும். யார் யாரை அனுமதிக்கணும்னு உங்களுக்குப் பட்டியல் கொடுத்தது யாரு?" எனக் கேட்டு டென்ஷனானார். அப்போது வந்த செந்தில் பாலாஜியை எந்தக் கேள்வியும் இல்லாமல் பொலிஸார் அனுமதித்தனர். பின்னர் போயஸ் கார்டன் உள்ளே இருந்து, 'செங்கோட்டையனையும், தங்கத் தமிழ் செல்வனையும் உள்ளே விடுங்கள்' என்று அனுமதி தந்தார்கள். அவர்கள் இருவரும் அனுமதிக்கப்பட்டனர். அப்போதும் ராவணனை உள்ளே விட வில்லை. அடுத்தடுத்து வந்த எம். எல். ஏக்கள் எல்லோரையும் அடையாள அட்டையைக் காட்டிய பிறகு தடை இல்லாமல் அனுமதித்தனர்.



இரவு 2.30 மணியளவில் போயஸ் கார்டன் வீதியில் ஜெயலலிதாவின் உடல் அம்புலன்ஸில் கொண்டு வரப்பட்டது. அதற்கு அடுத்த வாகனத்தில் சசிகலாவும் இளவரசியும் இருக்க, அதற்குப் பின்னால் சசிகலாவின் உறவினர்களும் வந்தனர். பொலிஸ் வானில் அமைச்சர்களும் கட்சியின் சீனியர்களும் வந்தனர்.

2.40 மணிக்கு போயஸ் கார்டனுக்குள் அம்புலன்ஸ் கொண்டு செல்லப்பட்டது. சசிகலா, இளவரசி, அவருடைய மகன், மகள், டாக்டர் வெங்கடேஷ், டாக்டர் சிவகுமார், டி.டி.வி. தினகரன் குடும்பத்தினர், திவாகரன், அவருடைய மகன் தவிர மற்ற அனைவருமே வேதா இல்ல வாசலில் நிறுத்தப்பட்டனர். உள்ளே அனுமதிக்கப்படவில்லை. அதிகாலை 3.30 மணிக்கு ராஜாஜி ஹோலுக்குக் கொண்டு செல்ல வேண்டும் என முதலில் கூறியிருந்தனர். ஆனால், அதிகாலை 4.30 மணியளவில் தான் உடல் கொண்டு செல்லப்பட்டது. சுமார் இரண்டு மணி நேரம் வேதா இல்லத்தில் ஜெயலலிதாவின் உடல் வைக்கப்பட்டு இருந்தது.

"இவர்கள் செல்வதற்கு முன்னதாக ஜெயலலிதாவின் அண்ணன் மகள் தீபக், போயஸ் கார்டன் வீட்டுக்குள் இருந்தார். சசிகலாவின் ஆஸ்தான புரோகிதர் தேவாதியும் உள்ளே இருந்துள்ளார்.

உடலை வீட்டில் உள்ள அவரது அறைக்குக் கொண்டு சென்று அங்கே சிறிது நேரம் வைத்திருந்தார்கள். அப்போது அனைவரையும் சசிகலா வெளியில் போகச் சொல்லிவிட்டு... அவர் மட்டுமே இருந்துள்ளார். பிறகு கண்ணீருடன் அந்த அறையைவிட்டு வெளியே வந்த சசிகலா, மற்றவர்களை அந்த அறைக்குள் அனுமதித்துள்ளார். வீட்டின் பூஜை அறைக்கு முன்பாக சில சடங்குகள் செய்யப்பட்டு உள்ளன. இதனை குருக்கள் தேவாதியும் ஜெயலலிதாவின் அண்ணன் மகன் தீபக்கும் செய்துள்ளனர். அதன் பிறகு வீட்டின் ஹோலுக்கு உடலைஎடுத்து வந்தார்கள். அப்போது மற்ற உறவினர்கள் உடல் அருகே அனுமதிக்கப்பட்டு உள்ளனர்.

கார்டன் ஊழியர்களும் அங்கே வைத்து அஞ்சலி செலுத்த அனுமதிக்கப்பட்டார்கள். ஜெயா டிவி. ஊழியர்களும் பொலிஸாரும் அப்போது அனுமதிக்கப்பட்டனர்' என்று சொல்கிறார்கள்.

இத்தனை நாளும் சிங்கம் இருந்த குகையாக இருந்தது அந்த வீடு. இனி...?

**காட்சிகள் விரியும்**

**ஜூனியர் விகடன்**

1971 ஒக்டோபர் 31 ஆம் திகதி காலை பத்து மணி... வழக்கம் போல ஷூட்டிங்குக்குப் புறப்பட்டேன். அம்மாவிடம் சொல்லிக் கொண்டு புறப்படுவதுதான் வழக்கம். இடைவேளையின்போது வீட்டுக்கு வந்தேன். பிற்பகல் ஒன்றரை மணி இருக்கும்.

வீடு வெறிச்சோடி காணப்பட்டது... ஏதோ ஒரு சம்பவம் நடந்திருக்கிறது என்பதைச் சொல்லாமல் சொல்லியது. சமையல்காரன் ஓடி வந்தான். 'என்ன சமாசாரம்? யாரும் இல்லையே? அம்மா எங்கே?' என்று கேட்டேன். 'திடீரென்று அம்மாவுக்கு உடம்பு சரியில்லாமல் போய்விட்டது. வைத்தியசாலைக்கு அழைச்சிட்டுப் போயிருக்காங்க' என்று தயங்கிச் சொன்னான் அவன்.



வாசலில் நின்ற நான் உள்ளே போகவில்லை. காரை அப்படியே அந்த வைத்தியசாலைக்கு ஓட்டச் சொன்னேன். அங்கே அம்மா படுத்திருக்க, அவரைச் சுற்றிலும் டாக்டர்கள் பலர் நின்று சோதனை செய்து கொண்டிருந்தார்கள். படபடப்பால் எனக்கு முதலில் பேச்சே எழவில்லை. அன்று ஷூட்டிங்கை இரத்து செய்துவிட்டு அங்கேயே இருந்தேன். அம்மா பேசத் தொடங்கினார்கள். அம்மா என்னை படப்பிடிப்புக்குப் போகச் சொன்னார்கள். நான் போக மறுத்தேன். மாலையில் ரொம்பவும் உற்சாகமாக இருந்தார்கள். இரவு 10 மணிக்கு என்னை வீட்டுக்குப் போகும்படி சொல்லிவிட்டார்கள்.

விடியற்காலை மூன்று மணிக்கு டெலிபோனில் 'நிலைமை கவலைக்கிடம்' என்றார்கள். பறந்தேன் வைத்தியசாலைக்கு.

நவம்பர் முதல் திகதி என் தாயின் நிலை மோசமாகியது. ஒட்சிசன் செலுத்தியும் பலனில்லை. பிற்பகலில் என்னைவிட்டு ஒரேயடியாகப் பிரிந்துவிட்டார்கள்..."

இப்படி தன் 'அம்மா' சந்தியா மறைவு பற்றி எழுதினார் ஜெயலலிதா.

# அலெப்போவைக் கைப்பற்ற ஐந்து ஆண்டுகளாக நடந்த போர் முடிவுக்கு வந்தது?



மேற்கு ஆசிய நாடுகளில் ஒன்றான சிரியாவில் கடந்த 2011ஆம் ஆண்டு முதலே உள்நாட்டுப்போர் நடந்து வருகிறது. ஜனாதிபதி பஷார் அல் ஆசாத்தின் படைக்கு எதிராக கிளர்ச்சியாளர்கள் பல இடங்களில் தாக்குதல்களை தொடுத்து வருகின்றனர். இவர்கள் பல பகுதிகளை கைப்பற்றி தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர்.

மற்றொரு புறம் ஐ.எஸ். அமைப்பினரும் சிரிய அரசு படைகளுக்கு எதிராக சண்டையிட்டு வருகின்றனர். அவர்களுக்கு எதிராக சிரிய இராணுவத்துடன் சேர்ந்து அமெரிக்க மற்றும் ரஷ்ய படைகளும் சண்டையிட்டு வருகின்றன.

சிரியாவின் 2ஆவது பெரிய நகரமாக கருதப்படும் அலெப்போவின் மேற்கு பகுதி இராணுவத்தின் வசமும் கிழக்குப் பகுதி கிளர்ச்சியாளர்கள் வசமும் இருந்து வருகிறது. இந்த மாவட்டத்தை கைப்பற்றும் நோக்கில் சிரியப் படைகள் தாக்குதலை தொடங்கி உள்ளன. கடந்த மாதம் 15ஆம் திகதி முதல் நடந்து வரும் இந்த தாக்குதலில் நேற்று முன்தினம் காலை வரை 90 சதவீத பகுதியை இராணுவம் மீட்டு உள்ளது.கிழக்கு அலெப்போ நகரின் பெரும்பகுதி இடிந்து தரைமட்டமாகிவிட்டது. அலெப்போ நகருக்கான போரினால் ஏற்பட்ட மனித உயிர்ச் சேதம் மிக அதிகமாக இருந்துள்ளது.

நகரில் எஞ்சியிருந்த கிளர்ச்சிப் போராளிகள் நகரை விட்டு வெளியேற அனுமதிக்க போர் நிறுத்தம் ஒன்று அறிவிக்கப்பட்டதிலிருந்து கடந்த சில மணி நேரங்களாக அங்கு மோதல்கள் நடக்கவில்லை என்று நகரவாசிகள் தெரிவித்தனர்.

இராணுவ நடவடிக்கை முடிந்துவிட்டது என்று ரஷ்யா கூறியிருக்கிறது. சிரியப் படைகள் கிளர்ச்சியாளர்கள் வசம் இருந்த கடைசி சில பகுதிகளையும் தம் கட்டுப்பாட்டில் எடுத்திருக்கின்றன என்று ரஷ்யா கூறுகிறது.

எதிர்வரும்சிலமணிநேரங்களில்,கடுமையாக காயமடைந்தவர்கள், பொதுமக்கள் மற்றும் கிளர்ச்சியாளர்கள் ஆகியோரை போர்ப்பகுதியிலிருந்து வெளியே கொண்டு செல்ல பேருந்துகள் பயன்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

# ஐதராபாத்தில் உறவுப்பெண்ணின் பெயரில் ஜெயலலிதா உயில் எழுதியதாக தகவல்



மறைந்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா ஐதராபாத்தில் தனது உறவுப் பெண்ணின் பெயரில் உயில் எழுதி வைத்திருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

மறைந்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் கோடிக்கணக்கான சொத்துக்களுக்கு யார் வாரிசு என்ற எதிர்பார்ப்பு நாடு முழுவதும் நிலவிவருகிறது.

இந்த நிலையில் ஜெயலலிதாவின் உயில் ஐதராபாத் மேச்சல் என்ற பகுதியில் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்தில் இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த உயில் 2000ஆம் ஆண்டு ஜூலை 14ஆம் திகதி பதிவு செய்யப்பட்டு உள்ளது. ஜெயலலிதாவுக்கு சொந்தமான ஐதராபாத் புறநகர் பகுதியான பேட்பஷிராபாத் பகுதியில் ஜெ.ஜெ.கார்டன் உள்ளது. இந்த முகவரியில் உயில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

எந்தெந்தச் சொத்துக்கள் இந்த உயிலில் இடம் பெற்றுள்ளன என்ற விபரம் கூறப்படவில்லை. ஜெயலலிதா தனது இரத்த சொந்தத்தில் உள்ள உறவுப்பெண் ஒருவரின் பெயரில் இந்த உயிலை எழுதி வைத்திருப்பதாக சார் பதிவாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. அவரது பெயரையும் சார் பதிவாளர் அலுவலகம் வெளியிடவில்லை.

சம்பந்தப்பட்ட பெண் நேரில் வந்து தனது பெயரை ஆதார பூர்வமாக தெரிவித்தால் மட்டுமே அவரிடம் இந்த உயில் ஒப்படைக்கப்படும் என்று சார்பதிவாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கு நீதிமன்றில் நடந்த போது ஜெயலலிதா எழுதி வைத்திருந்த உயிலுடன் சார் பதிவாளர் பலமுறை சி.பி.ஐ. நீதிமன்றத்திலும் ஆஜராகியுள்ளார்.

1965ஆம்ஆண்டுக்குமுன்பு பல தெலுங்கு படங்களில் ஜெயலலிதா நடித்தார். அப்போது ஐதராபாத் பேட்பஷிராபாத் பகுதியில் ஜி.டி.மெட்லா, ஹோம்பள்ளி ஆகிய இடங்களில் 4 ஏக்கர், 7 ஏக்கர் பரப்பளவில் தோட்டம் வாங்கினார். இந்த தோட்டத்துக்கு ஜெ.ஜெ. கார்டன் என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்த தோட்டத்தை சுற்றி சுவர் கட்டப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் இந்த தோட்டத்தில் காவலாளி கிருஷ்ணன் என்பவர் விவசாயம் செய்து வந்தார். அப்போது அங்கு வாழை, மா, நெல் போன்றவற்றை பயிரிட்டார்.

தற்போது இந்த தோட்டத்தில் ராமகிருஷ்ண ராஜு என்பவர் காய்கறி மற்றும் எலுமிச்சை போன்றவற்றை விளைவித்து வருகிறார். இதற்காக குத்தகை போல ஆண்டுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ 25 ஆயிரம் கொடுத்து வந்தார்.

இந்த தோட்டத்தில் உள்ள விருந்தினர் இல்லத்தை தமிழகத்தை சேர்ந்த குடும்பத்தினர் பராமரித்து வருகிறார்கள். ஆரம்பகாலத்தில் வருடத்துக்கு ஒரு முறை ஜெயலலிதா இந்த தோட்டத்துக்கு சென்று பார்ப்பதுண்டு. அப்போது பேட்பஷிராபாத்தில் உள்ள சிவன் கோவிலுக்கும் அவர் சென்று தரிசனம் செய்வார். கடைசியாக அவர் 2007ஆம் ஆண்டு ஜெ.ஜெ. கார்டனுக்கு வந்துள்ளார். அதன் பிறகு அவர் வரவில்லை.

இதேபோல தெலுங்கு படங்களில் நடித்த போது ஐதராபாத் ஸ்ரீநகர் காலனியில் ஒரு வீட்டையும் ஜெயலலிதா வாங்கியுள்ளார். சினிமாவில் நடித்த போது அவர் இந்த வீட்டுக்கும் வந்து தங்குவதுண்டு. அரசியலில் நுழைந்த பிறகு அவர் இங்கு வரவில்லை. கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு இந்த வீட்டை ஒரு தனியார் நிறுவனத்துக்கு வாடகைக்கு கொடுத்துள்ளார். (இ-10)

# ஜெயலலிதாவின் வைத்திய சிகிச்சை குறித்த அனைத்து ஆவணங்களையும் வெளியிடவும்

## உச்ச நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

தமிழக முதலமைச்சராகவும், அ.தி.மு.க. பொதுச் செயலாளராகவும் இருந்த ஜெயலலிதா கடந்த 5ஆம் திகதி காலமானார்.

இதையடுத்து அவரது உடல் மெரீனா கடற்கரையில் எம்.ஜி.ஆர்.சமாதிக்கு அருகே அடக்கம் செய்யப்பட்டது.

ஜெயலலிதா மறைவு தமிழக மக்களுக்கு பெரும் மன வேதனையை அளித்துள்ளது. குறிப்பாக அ.தி.மு.க.வினர் மனதளவில் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால், மெரீனா கடற்கரையில் ஜெயலலிதா உடல் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில், இரவும் பகலும் அலை அலையாய் திரண்டு வந்து பொதுமக்கள் கண்ணீர் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் ஜெயலலிதாவின் மரணம் குறித்து



பல கேள்விகளுக்கு விடை இல்லாமல் உள்ளது என்று நடிகை கௌதமி பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதினார். இதுபோல் ஜெயலலிதாவின் சொந்தங்களும் கேள்வி எழுப்பி வருகின்றன.

ஜெயலலிதா இறப்பு குறித்து சிபிஐ விசாரணை கோரி உச்ச நீதிமன்றில் தமிழ்நாடு தெலுங்கு யுவசக்தி அமைப்பு சார்பில் வழக்கு தொடரப்பட்டு உள்ளது.ஜெயலலிதா மருத்துவ சிகிச்சை தொடர்பாக அனைத்து ஆவணங்களையும் உச்ச நீதிமன்றில் தாக்கல் செய்ய தமிழக அரசுக்கு உத்தரவிடக்கோரி மனுவில் கோரிக்கை விடப்பட்டு உள்ளது. (இ-10)

# உலகில் அதிகாரமிக்கவர்களில் ஆதிக்கம் செலுத்துகிறார் புடின்

## மோடிக்கு 9 ஆவது இடம்

உலகில் அதிகாரம் மிக்கவர்கள் வரிசையில் ரஷ்ய ஜனாதிபதி புடின் முதலிடத்திலும் இந்தியப் பிரதமர் மோடி 9 ஆவது இடத்திலும் உள்ளார் என்று போர்ப்ஸ் பத்திரிகை நடத்திய ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் இருந்து "போர்ப்ஸ்" எனும் மாதம் இரு தடவை வெளியாகும் வணிக இதழ் உலகப்புகழ் பெற்றது.

இந்த இதழ் அடிக்கடி உலகப் பணக்காரர்கள், உலகின் செல்வாக்கு மிக்க வி.ஐ.பி.க்கள், உலக பிரபலங்கள், உலகின் தலைசிறந்த நகரங்கள் என்று பல்வேறு துறைகளில் ஆய்வு செய்து பட்டியல்களை வெளியிட்டு வருகிறது. அந்தப் பட்டியல்கள் உலக மக்களிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளன.

அந்த வரிசையில் போர்ப்ஸ் இதழ் உலகில் அதிகாரம் மிக்க சக்தி கொண்ட தலைவர்கள் பற்றிய ஆய்வை நடத்தியது. அதில் உலகின் பல்வேறு நாட்டு தலைவர்கள் 74 பேர் இடம்பிடித்துள்ளனர்.

இந்தப் பட்டியலில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் முதலிடத்தைப் பிடித்துள்



ளார். உலகின் சக்தி மிக்க தலைவர்களில்புடின் 4 ஆவது ஆண்டாக முதலிடத்தைப் பிடித்து இருப்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக தேர்வு செய்யப்பட்டுள்ள டொனால்டு ட்ரம்ப் 2ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். ஜேர்மனி பெண் ஜனாதிபதி ஏஞ்சலா மார்க்கலுக்கு மூன்றாவது இடம் கிடைத்துள்ளது.

சீன ஜனாதிபதிக்கு 4ஆவது இடம், போப் ஆண்டவர் பிரான்சிஸ்க்கு 5ஆவது இடம் கிடைத்துள்ளது. மைக்ரோசொப்ட் நிறுவனர் பில்கேட்ஸ் 7ஆவது இடத்திலுள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி உலக அதிகாரம் மிக்கவர்கள் வரிசையில் 9ஆவது இடத்தில் உள்ளார். இந்தியாவில் தொடர்ந்து மக்களிடம் அதிக செல்வாக்குடன் மோடி இருப்பதாக போர்ப்ஸ் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.


ரிலையன்ஸ் நிறுவன அதிபர் முகேஷ் அம்பானி 38 ஆவது இடத்தில் உளளார். (இ-10)

# தேசிய தினக் கொண்டாட்டத்தை திடீரென கைவிட்டது கட்டார் அரசு

ஆண்டுதோறும் மிகப் பிரமாண்டமாக முன்னெடுக்கப்படும் தேசிய தினக் கொண்டாட்டங்களை அரேபிய நாடான கட்டார் கைவிட்டுள்ளது.

மிகப்பெரும் அவலங்களுக்கு அலப்போவில் முகம் கொடுத்திருக்கும் மக்களுடனான தமது கூட்டொருமைப்பாட்டை வெளிப்படுத்தும் நடவடிக்கையாக இவ் அறிவித்தலை கட்டார் அரசதரப்பு வெளியிட்டுள்ளது.

அலப்போவில் சிக்குண்டிருக்கும் பொதுமக்களின் உயிர்களைத் துச்சமாக மதித்து சிரிய அரச படையினர் தமது தாக்குதல்களை மேற்கொண்டு வருவதைக் கண்டிக்கும் ஒரு நடவடிக்கையாக இது கருதப்படுகிறது.



கட்டார் தனது தேசிய தினத்தை டிசெம்பர் 18 ஆம் திகதி கொண்டாடி வருகிறது. தேசிய தினத்தன்று பேரணிகள், பல்வேறு கலாசார நிகழ்வுகள், வாணவேடிக்கைகள் என மிகப் பெருமெடுப்பில் கொண்டாடுவது வழக்கமாகும்.

தேசிய தினக் கொண்டாட்டங்களை கைவிடும் செய்தியை கட்டார் அரண்மனை வட்டாரங்கள் தெரிவித்திருப்பதாக கட்டார் தேசிய செய்தி நிறுவனம் அறிவித்துள்ளது. (இ-3)

# தீபாவை தலைமையேற்க அழைக்கும் கட்டவுட்டுகளால் தமிழகத்தில் பரபரப்பு






(சென்னை)

ஜெயலலிதாவின் அண்ணன் மகளான தீபாவை அ.தி.மு.க. தலைமையேற்க வருமாறு அழைத்து பெரம்பலூரில் கட்டவுட்டுகள் வைக்கப்பட்டது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

தமிழக முதல்வராகவும், அ.தி.மு.க. பொதுச்செயலாளராகவும் பதவி வகித்த ஜெயலலிதா மரணமடைந்ததையடுத்து, தமிழக முதல்வராக ஓ.பன்னீர்செல்வம் பொறுப்பேற்றார். கட்சியின் பொதுச்செயலாளர் பொறுப்பை சசிகலா ஏற்க வேண்டும் என கட்சியின் நிர்வாகிகள் அழைப்பு விடுக்க... இதற்கு ஆதரவாகவும், எதிர்ப்பாகவும் குரல்கள் எழத்தொடங்கியுள்ளன.

இந்நிலையில், ஜெயலலிதாவின் இரத்த வாரிசான தீபா தலைமையில் கட்சி செயற்பட வேண்டும் என்ற கோரிக்கை திடீரென எழுந்துள்ளது. இந்நிலையில், "மக்களின் சின்ன அம்மா, ஜெ.தீபா தலைமையில் அணி திரள்வோம்" என பெரம்பலூரில் கட்டவுட்டுகள வைத்து பரபரப்பை கிளப்பியுள்ளார் பெரம்பலூரைச் சேர்ந்த கணணன்.

அம்மா இறந்ததில் என்னை போன்ற பல அடிமட்ட தொண்டனுக்கு பல்வேறு சந்தேகங்கள் எழுந்து கொண்டே இருக்கின்றன. அம்மாவால் கஷ்டப்பட்டு வளர்க்கப்பட்ட கட்சி இது. ஒரு சிலர் இந்த கட்சியை கைப்பற்ற நினைக்கிறார்கள். அம்மாவால் ஒதுக்கப்பட்டவர்கள் எல்லாம் அம்மாவின் சடலத்தை சுற்றி நிற்கிறார்கள். அம்மாவின் அண்ணன் மகள் தீபாவை யாரும் நெருங்க விடவில்லை.

இரத்த சொந்தமான தீபாவை உள்ளே விடாததற்கு என்ன காரணம்? அம்மாவின் சொந்தங்களை ஏன் ஒதுக்கி விட்டார்கள்? அதுமட்டுமல்லாமல் அவசர அவசரமாக எம்.எல்.ஏக்கள் கூட்டத்தை கூட்டி அனைவரிடமும் கையெழுத்து வாங்கவேண்டிய அவசியம் என்ன?

இந்த அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள் அம்மாவிடமிருந்து எவ்வளவு சலுகைகளை பெற்றிருப்பார்கள். ஆனால் அம்மா இறந்து பத்து நாட்கள்கூட முடியவில்லை. அதற்குள் கட்சிக்குள் எந்த சம்பந்தமும் இல்லாத சசிகலாவை கட்சியின் பொதுச்செயலாளராக பொறுப்பேற்க ஏன் அழைக்க வேண்டும்? என கட்டவுட் வைத்த கண்ணன் கேள்வியெழுப்பியுள்ளார். (இ-10)

# ஜப்பானில் அமெரிக்க ராணுவ விமானம் விபத்துக்குள்ளானது

அமெரிக்காவின் ஒஸ்பிறிரக விமானமொன்று, ஜப்பானின் ஒக்கிநவா தீவு பகுதியில் விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

இதனையடுத்து ஒஸ்பிறிரக இராணுவ விமானங்களின் சேவைகளை அமெரிக்க கடற்படை இடைநிறுத்தியுள்ளது.

நேற்று முன்தினம் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதுடன், விமானத்தில் பயணித்த ஐந்து விமானப் பணியாளர்கள் காயமடைந்துள்ளனர்.

அமெரிக்க இராணுவத்தளம் மற்றும் ஒஸ்பிறிரக விமானங்களின் பாதுகாப்பு தரம் குறித்து முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில், இந்தச் சம்பவம் உள்ளூர் மக்கள் மத்தியில் ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஹெலிகொப்டர் மற்றும் விமானத்தின் திறனைக் கொண்ட குறித்த இராணுவ விமானம், விபத்துக்குள்ளாகும் சம்பவங்கள் உலகளாவிய ரீதியில் இதற்கு முன்னர் பதிவாகியுள்ளன.

இறுதியாக கடந்த ஆண்டு மே மாதம் ஹாவாய் தீவுகளில் ஏற்பட்ட விபத்தில் இரண்டு கடற்படையினர் பலியாகியிருந்தனர்.

இதுவொரு துரதிர்ஷ்டவசமான விபத்து எனக் குறிப்பிட்ட அமெரிக்க பாதுகாப்பு தலைமையக பேச்சாளர் கப்டன் ஜெஃப் டேவிஸ், இந்த சம்பவம் குறித்து விசாரணை முன்னெடுக்கப்படுவதாக தெரிவித்தார்.

கடந்த மே மாதம் உள்ளூர் பெண் ஒருவரை பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தி, கொலை செய்தமை தொடர்பில் அமெரிக்க இராணுவத் தளத்தில் பணியாற்றிய ஊழியர் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்த சம்பவத்தின் பின்னர் அமெரிக்க இராணுவம் மீதான எதிர்ப்புக்கள் அண்மைக்காலமாக வலுவடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

# இறந்து 55 நாட்கள் ஆன தாய்க்கு பிறந்த குழந்தை

## வைத்தியர்கள் சாதனை

மூளைச்சாவு அடைந்த கர்ப்பிணி பெண்ணை வைத்தியசாலையிலேயே 55 நாட்கள் வைத்து அவர் வயிற்றில் இருந்த குழந்தையை உயிரோடு எடுத்து வைத்தியர்கள் சாதனை படைத்துள்ளனர்.

போலாந்து நாட்டைச் சேர்ந்த 41 வயதான பெண் கர்ப்பமாக இருந்தார். அதே சமயத்தில் Brain Tumor நோயும் அவருக்கு இருந்துள்ளது.

நோய் முற்றியதால் கடந்த நவம்பர் மாதம் 17 வார கர்ப்பத்துடன் அவர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்ந்துள்ளார்.

அவரை எப்படியும் காப்பாற்ற முடியாது என தீர்மானித்த வைத்தியர்கள் அவர் வயிற்றில் உள்ள குழந்தையையாவது காப்பாற்ற முடிவு செய்தனர்.

பின்னர் பல்வேறு மருத்துவ யுக்திகளை கையாண்ட வைத்தியர்கள் சரியாக அந்த பெண் இறந்து 55 நாட்கள் ஆன பின் சிசேரியன் மூலமாக அவர் வயிற்றில் இருந்த குழந்தையை உயிருடன் எடுத்தனர்.

பிறக்கும் போது 1 கிலோ எடை மட்டுமே இருந்த குழந்தை பின்னர் ஐசியூ வார்டில் பல மருத்துவ சிகிச்சைக்கு பின்னர் 3 கிலோ எடையாக தற்போது உள்ளது.

குழந்தைக்கு Wojtek என பெயர் வைத்துள்ள அவர தந்தை குழந்தையை பத்திரமாக பராமரித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

# வடகொரியாவில் கொடூரம்



வடகொரியாவில் சிறுவர்களை கடும் வெயிலில் இரும்பு தண்டவாளப் பாதைகளில் உள்ள பழுதுகளை சரிசெய்ய வைப்பது, கற்களை உடைக்க வைப்பது போன்ற வேலைகளை கட்டாயப்படுத்தி ஈடுபடுத்தும் செயல் பார்போரை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

வட கொரியாவின் தற்போதைய ஜனாதிபதியாக உள்ளவர் கிங் யாங் உன். இவர் அண்மையில் உலக நாடுகளை அச்சுறுத்தும் வகையில் ஏவுகணைகள் மற்றும் அணுஆயுத சோதனைகளை மேற்கொண்டு வருகிறார்.

இதுவரை மூன்று சோதனைகளை செய்துள்ள அந்த அரசு நான்காவது அணு ஆயுத சோதனையை வரும் ஜனவரி மாதம் தொடங்க உள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் வட கொரியாவில் சுமார் ஐந்து முதல் 9 வயது வரை உள்ள சிறுவர்கள் ஏராளமானோர் கடும் வெயிலில் அங்குள்ள ரயில்வே தண்டவாளங்களில் உள்ள பழுதுகளை சரி பார்க்கும் வேலையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

மேலும் அவர்கள் அங்குள்ள மலைகளை சிறிது சிறிதாக சுத்தியல் கொண்டு பெயர்த்து எடுக்கும் சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. நாள் ஒன்றிற்கு அவர்கள் பத்து மணி நேரம் வரை வேலை செய்வதாக கூறப்படுகிறது.

இச் சிறுவர்கள வேலை செய்யும் இடம் அந்த நாட்டு ஜனாதிபதி இருக்கும் பகுதிக்கு அருகில் உள்ளதாக, கூறப்படுகிறது.

இதில் ஒரு சில சிறுவர்கள் வேலை செய்யும் போது வலி தாங்க முடியாமல் அழும் காட்சி பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. இது வட கொரியாவின் சர்வாதிகாரம் என்றும் மனித உரிமை மீறல்கள் என்றும் பலரும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். (இ-10)

# உள்நாட்டில் தயாரித்த ஏவுகணையை பரிசோதனை செய்தது பாகிஸ்தான்



(இஸ்லாமாபாத்)

உள்நாட்டில் தயாரித்து மேம்படுத்திய ஏவுகணை ஒன்றை பாகிஸ்தான் இராணுவம் நேற்று, வெற்றிகரமாக சோதனை செய்தது.

அதிகப்படியான இந்திய நகரங்களை குறிவைக்கும் வகையில் சுமார் 700 கி.மீ. இலக்குகளையும் துல்லியமாக தாக்கி அழிக்கும் திறன் கொண்ட ஏவுகணையை பாகிஸ்தான் இராணுவம் நேற்று வெற்றிகரமாக சோதனை செய்தது. இந்த ஏவுகணை உள்நாட்டிலேயே வடிவமைத்து, மேம்படுத்தப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

பாபர் ரக ஏவுகணை வரிசையில் வெர்சன்-2 என அழைக்கப்படும் இந்த ஏவுகணை ஏற்கனவே அந்நாட்டு பயன்பாட்டில் இருந்து வரும் பாபர் ஏவுகணையின் மேம்படுத்தப்பட்டதாகும். அதி நவீன காற்றியக்கவியல் மற்றும் மின்னணுவியல் முறைகளை கொண்டிருப்பதால் தரை மற்றும் கடலில் உள்ள எவ்வித இலக்குகளையும் துல்லியமாக தாக்கி அழிக்க முடியும்என அந்நாட்டு இராணுவ செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு ஆயுதங்களை ஏந்திச்செல்லும்திறன் கொண்ட இந்த ஏவுகணை குறைந்த உயரத்தில் பறப்பதோடு சில வகை ஸ்டெல்த் அம்சங்களையும் கொண்டுள்ளது என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. GPS வழிகாட்டுதல் இல்லாமலும் இலக்குகளை மிக துல்லியமாக தாக்கி அழிக்கும்படி பல்வேறு ஊடுருவல் தொழில்நுட்பங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பாபர் ரக ஏவுகணைகள் பாகிஸ்தானுக்கு பாதுகாப்பு வழங்குவதில் முக்கிய பங்கு வகிக்கும் என அந்நாட்டு இராணுவ அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஏவுகணை சோதனையின்போது பாகிஸ்தான் இராணுவத்தை சேர்ந்த உயர் அதிகாரிகள் பலரும் உடனிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஏவுகணை சோதனை வெற்றி பெற்றிருப்பதை தொடர்ந்து பாகிஸ்தான் பிரதமர் மற்றும் குடியரசு தலைவர், ஏவுகணையை உருவாக்கிய விஞ்ஞானிகளுக்கு பாராட்டு தெரிவித்தனர். இத்துடன் பாகிஸ்தான் இராணுவத்தின் உயர் அதிகாரிகளும் விஞ்ஞானிகளுக்கு பாராட்டுக்களை தெரிவித்துள்ளனர். (இ-10)

# இலங்கையில் தொழில் பற்றாக்குறை இல்லை

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு


நாட்டின் புதிய பரம்பரையை தொழில் மற்றும் தொழில்நுட்ப அறிவுடன் கூடிய மனித வளமாக கட்டியெழுப்புவதற்கு தேவையான வழிகாட்டல்கள் மற்றும் வளங்களை குறைவின்றி பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

தற்போது நாட்டில் ஏற்பட்டிருப்பது, தொழில் பற்றாக்குறை இல்லை என்றும் தொழிற்துறைக்கு அவசியமான தகுதியுள்ளவர்களின் பற்றாக்குறையே என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஹிக்கடுவ, சீனிகம ஸ்ரீ ஜனரதன தொழில் மற்றும் தொழிற்கல்வி பயிற்சி நிலையத்தை மாணவர்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்ற போது, அங்கு கலந்துகொண்டு உரையாற்றுகையில் ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

கொழும்பு, ஹுணுபிட்டி கங்காராம விகாரையின் விகாராதிபதி கலபட ஞானீஸ்சர தேரரின் பிறந்த தினத்தை முன்னிட்டு இந்த பயிற்சி நிலையம் மாணவர்களுக்கு வழங்கப்பட்டதாக ஜனாதிபதி இங்கு கூறினார்.

இந்த நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அமைச்சர்கள் பலரும் பங்கேற்றிருந்தனர். (இ-10)




# சீனாவுக்கு காணிகளை வழங்குவதற்கு எதிர்ப்பு

## அம்பாந்தோட்டையில் வெடிக்கும் போராட்டம்



அம்பாந்தோட்டையில் 15 ஆயிரம் ஏக்கர் காணிகளை சீனாவுக்கு குத்தகைக்கு வழங்கும் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டங்கள் ஆரம்பமாகியுள்ளன.

சீன முதலீட்டாளர்களுக்கு நிலங்களை வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று முன்தினம் அம்பாந்தோட்டை சித்ரகல சந்தியில் பெருமளவு பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அம்பாந்தோட்டை நகரம் மற்றும் துறைமுகத்துக்குச் செல்லும் வீதிகளை மறித்து இவர்கள் நடத்திய போராட்டத்தினால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

அதேவேளை, இரண்டு வாரங்களுக்கு முன்னர், நில அளவைத் திணைக்கள அதிகாரிகளும், மாவட்டச் செயலக அதிகாரிகளும் பேரகமவுக்கு சென்றிருந்த போது, அவர்களுக்கு பொதுமக்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர்.

தாம் பல பத்தாண்டுகளாக வாழுகின்ற நிலங்களை சீனர்களுக்கு விற்கப் போவதில்லை என்று அவர்கள் கூறியிருந்தனர்.

இந்த நிலையிலே, நேற்று முன்தினம் அம்பாந்தோட்டையில் வீதிமறியல் போராட்டம் இடம்பெற்றுள்ளது.

இதற்கிடையே, அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீன நிறுவனத்துக்கு 99 ஆண்டு குத்தகைக்கு வழங்கும் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, தொடர்ந்து பணியாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-10)

# மதவாதிகளைக் கண்டறிய விசேட குழுவை நியமிக்கவும்

## பொதுபல சேனா கோருகிறது

(கொழும்பு)

**மதவாதத்தை பரப்புவோர் தொடர்பில கண்டறிவதற்காக, விசேட குழுவொன்றை நியமிக்க, அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுபல சேனாவின் நிறைவேற்றுப் பணிப்பாளர் டிலந்த விதானகே வலியுறுத்தியுள்ளார்.**




பொதுபல சேனா தலைமையகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுபலசேனா அமைப்பைத் தடை செய்யுமாறும் ஞானசார தேரரைக் கைது செய்யுமாறும், சில இனவாதிகள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர். இதனை முழுமையாக ஆராய்ந்து பார்க்காத அரசியல்வாதிகள், அவர்களின் கூற்றுக்கு ஏற்றால் போல் கருத்து தெரிவித்து வருகின்றனர். இருந்தும் எமது அமைப்பை இதுவரை தடை செய்ய உத்தியோக பூர்வ நடவடிக்கைகளை யாரும் முன்னெடுத்ததில்லை. காரணம் அனைவருக்கும் தெரியும், எமது அமைப்பு சட்ட விரோதமான செயற்பாடுகளை முன்னெடுத்ததில்லை. தவறாக நடைபெறும் சம்பவங்களுக்கு எதிராகவே கிளர்ந்தெழுகின்றோம். நாம் முஸ்லிம்களுக்கோ, தமிழர்களுக்கோ எதிரானவர்கள் அல்லர். உலமா சபையின் செயற்பாடுகளுக்கே நாம் எதிர்ப்பு தெரிவிக்கின்றோம். முஸ்லிம்களின் விவகாரம் தொடர்பில் நாம் ஒன்றும் புதிய கருத்துக்களை தெரிவிக்கவில்லை. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சிக் காலத்தில் எதற்கெல்லாம் தடை விதித்தாரோ, செய்ய அனுமதி வழங்காமல் இருந்தாரோ அவற்றையே நாம் இன்று வலியுறுத்தி வருகின்றோம். இதை சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட சிலர், எம்மை இனவாதிகள் எனத் தெரிவிக்கின்றனர்.

யார் முதலில் இனவாதிகள் என்பதை இந்த அரசாங்கம் தெரிந்துகொள்ள வேண்டும். அனைத்து மதங்களுக்கும் சமமான, அனைத்து மதம் சார் விடயங்களை ஆராய, விசேட குழுவொன்றை நியமிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# சம்பள அதிகரிப்பு இல்லையேல் இளைஞர்கள் நாட்டை விட்டு வெளியேறுவர்-பிரதமர் அச்சம்



(கொழும்பு)

சம்பளம் அதிகரிக்கப்படாவிட்டால் வேலையற்ற இளைஞர், யுவதிகள் நாட்டைவிட்டு வெளியேறி விடுவார்கள் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எச்சரித்துள்ளார்.

தொழிற்பயிற்சி நிலையமொன்றை நேற்று முன்தினம் திறந்து வைத்து உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தொழிற் பயிற்சிகளை வழங்குவதன் ஊடாக மாத்திரம் தொழிலாளர்களின் தொழிற் பாதுகாப்பு உறுதிசெய்யப்பட்டு விடாது என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

தென்பகுதி கரையோரப் பிரதேசமான சீனிகமவில் நேற்று முன்தினம் ஜினரத்தன தொழிற்பயிற்சி நிலையம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது.

ஹுணுப்பிட்டிய கங்காராம விகாரையின் விகாராதிபதியான கலபட ஞானீஸ்சர தேரரின் பிறந்த தினத்தை முன்னிட்டே இந்த தொழிற்பயிற்சி நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாட்டில் நல்லிணக்க செயற்பாடுகளை அடுத்து இனங்களுக்கிடையில் ஒற்றுமை கட்டியெழுப்பப்பட்டு வருவதாகத் தெரிவித்த பிரதமர் நல்லிணக்கத்தின் ஊடாகவே நாட்டில் தற்போது அரசியல் ரீதியாகவும் ஸ்திரமான நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அதேவேளை, இதன் ஊடாக நாட்டின் பொருளாதாரத்திலும் பாரிய அபிவிருத்தியை அடைய முடியும் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ள பிரதமர் பல்வேறு துறைகளில், பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் இன்மை பெரும் குறைபாடாக இருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-10)

# அம்பாந்தோட்டை துறைமுக விவகாரம் குறித்து கடற்படையினர் தயாரித்த அறிக்கை பாதுகாப்புச் செயலரிடம் கையளிப்பு



அம்பாந்தோட்டை துறைமுகத்தில், கடந்த சனிக்கிழமை ஊடகவியலாளர் ஒருவர் இலங்கை கடற்படைத் தளபதியால் தாக்கப்பட்டதாக குற்றம்சாட்டப்படும் சம்பவம் தொடர்பாக, இலங்கை கடற்படை அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளது.

வேலை நிறுத்தம் செய்யும் துறைமுகப் பணியாளர்களால் தடுத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு வெளிநாட்டுக் கப்பல்களை விடுவிக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போது, ஊடகவியலாளர் ஒருவர் இலங்கை கடற்படைத் தளபதியால் தாக்கப்பட்டதாக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பாக அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி, கடந்த ஞாயிற்றுக்கிழமை இலங்கை கடற்படைக்கு உத்தரவிட்டிருந்தார்.

இதற்கமைய, அம்பாந்தோட்டை துறைமுகத்தில் நடந்த சம்பவங்கள் தொடர்பான விரிவான அறிக்கையை இலங்கை கடற்படை நேற்று தம்மிடம் கையளித்தது என்று, பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

முதலில் இந்த அறிக்கையைத் தாம் படிக்க வேண்டும் என்றும், அதற்குப் பின்னர் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# துறைமுக ஊழியர்களை பதவி நீக்க வேண்டாம்

## ஜனாதிபதியிடம் மகிந்த கோரிக்கை



(கொழும்பு)

அம்பாந்தோட்டை மாகம்புர துறைமுகத்தின் ஊழியர்களை பதவி நீக்கம் செய்ய வேண்டாம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம், தான் வேண்டுகோள் விடுத்துள்ளதாக முன்னாள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



இது தொடர்பில் பிரதமருடன் கலந்துரையாடி தீர்வொன்றைப் பெற்றுத் தருவதாக ஜனாதிபதி குறிப்பிட்டதாகவும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள மாகம்புர துறைமுக ஊழியர்கள் கடமைக்கு சமுகமளிக்காது போனால், சுயமாக தமது தொழிலிலிருந்து விலகியவர்களாக கருதப்படுவார்கள் என துறைமுக அமைச்சர் அர்ஜுன ரணதுங்க அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

# முஸ்லிம்களுடனான பிரச்சினையை ஒத்திவைத்தது பொதுபல சேனா

## தேசிய பிரச்சினையில் கவனம் செலுத்தவுள்ளதாம்

முஸ்லிம் மக்களுடனான பிரச்சினையை சிறிதுகாலம் நிறுத்திவிட்டு தேசிய ரீதியில் எழுந்துள்ள அம்பாந்தோட்டை துறைமுகத்தை விற்பனை செய்யும் அரசாங்கத்தின் தீர்மானத்திற்கு எதிராக களத்தில் குதிக்க தீர்மானித்துள்ளதாக பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம்களுடனான மற்றும் மதங்களுக்கு இடையிலான பிரச்சினையை உருவாக்குகின்ற தரப்பினர் ஜனாதிபதியிடம் சென்று தமக்கு எதிராக முறையிட்டிருக்கின்ற போதிலும் அப்படிப்பட்ட பிரச்சினையை உருவாக்குவதும் அவர்களே என்றும் குற்றம் சுமத்தினார்.

கொழும்பு - கிருலப்பனையில் அமைந்துள்ள பொதுபல சேனா அமைப்பின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர் சந்திப்பொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதில் கலந்து கொண்ட அந்த அமைப்பின் பொதுச் செயலாளரான ஞானசார தேரர் கருத்துக்களை வெளியிட்டார்.

"அண்மையில் ஜனாதிபதியை சந்தித்த முஸ்லிம் அமைப்புக்களும், சிவில் பிரதிநிதிகளும் உடனடியாக ஞானசார தேரரை கைது செய்யும் படியும், பொதுபல சேனா அமைப்பை தடைசெய்யுமாறும், இவர்களே பிரச்சினைக்கு காரணம் என்றும் முறையிட்டிருந்தனர் என்பதை ஊடகங்கள் மூலம் அறிந்து கொண்டேன். இந்தப் பிரச்சினையை உருவாக்குவது நாங்கள் என்றால் சட்டத்தின்படி எம்மைக் கட்டிப்போட்ட பின்னரும் பிரச்சினைக்கு சமாதான முறையில் தீர்வு காணப்படுமாயின் அந்த அர்ப்பணிப்பையும் செய்வதற்கு நாம் தயார்.

எனினும் துரதிர்ஷ்டவசமாக பிரச்சினையை உருவாக்கும் சிலர் அந்தப் பிரச்சினையை வெளிக்கொணரும் எம்மீதே குற்றச்சாட்டு சுமத்தப்படுகிறது. எனவேதான் மீண்டும் நாட்டில் மதப் பிரச்சினை தொடர்பில் சிறிது காலத்திற்கு நிறுத்திவிட்டு தேசிய ரீதியிலான பிரச்சினை குறித்து மக்களது கவனத்தை திருப்பவும், ஊடகங்கள் மூலம் கருத்துக்களுக்கு உட்படுத்துவதற்கும் இணையத்தளத்திலும், முகப்புத்தகத்திலும் உள்ள நமது தேசப்பற்றாளர்களின் உதவியுடன் களமொன்றை அமைக்க வேண்டும். நல்லிணக்கத்திற்கு பாதிப்பு ஏற்படும் விடயங்கள் தொடர்பில் மகாநாயக்கர்களுக்கு அறிவித்தோம்.

மறுபுறத்தில் ஜனாதிபதியை சந்தித்து குறித்த பிரிவினருக்கு முன்பாக எமது அனைத்துப் பிரச்சினைகளையும் நேரடியாக தெரிவித்தோம். எனவே தீர்வை வழங்கும் பொறுப்பு அவர்களிடம் காணப்படுகிறது.

நாம் கட்டிக்காத்த நாட்டு சொத்துக்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்வதற்கான தற்போது மோசமான அளவிற்கு திட்டமொன்றை சூட்சுமமான முறையில் வகுத்து வருவது குறித்து அறியக்கிடைத்தது.

இந்த அரசாங்கத்தை வழிநடத்துவது யார் என்பது தெரியவில்லை. அம்பலாங்கொடையில் உள்ள பொம்மலாட்டத்தைப் போன்றே அரசாங்கத்தின் நிலை உள்ளது. அம்பாந்தோட்டை துறைமுகத்தின் பகுதியை சீனாவிற்கு விற்பனை செய்ய விருப்பதாக அறியக்கிடைத்துள்ளது. 1000 மில்லியன் டொலருக்கு விற்பனை செய்து, அந்தப் பணத்தை தம்புள்ளையிலிருந்து ஹபரணை வரை ரயில் பாதையை அமைக்க வழங்கவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

அதுமட்டுமல்ல அம்பாந்தோட்டையில் 15 ஆயிரம் ஏக்கர் காணியையும் அவர்களுக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று கொழும்பு துறைமுகத்தின் கிழக்குப் பகுதியை இந்தியாவிற்கு வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. காங்கேசன்துறை துறைமுகம் மீது இந்தியா கழுகுப் பார்வை செலுத்தி வருகிறது.

திருகோணமலை துறைமுகத்தில் அமெரிக்காவின் போர்க்கப்பல் ஒன்றும் நங்கூரமிடப்பட்டுள்ளது. நாட்டின் துறைமுகமானது இருதயமாக உள்ளது. எனவே அதனை கடன் செலுத்தும் போர்வையில் விற்பனை செய்யும் முயற்சியை தடுத்து நிறுத்த வேண்டும்.

இதற்கு தேசப்பற்று அமைப்புக்களும், சிங்கள இனவாத பிக்குகள், இளைஞர்கள், முகப்புத்தகத்தில் இனவாதப் பதிவுகளை செய்யும் பிரிவினர், தேசப்பற்றுள்ள தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரையும் அழைக்கின்றோம். மதப் பிரச்சினையை பின்னர் தீர்த்துக் கொள்வோம். அதற்கான அடித்தளமும் இடப்பட்டுவருகிறது.

எனவே துறைமுகத்தை அல்லது அதன் பகுதியை விற்பனை செய்யும் முயற்சியை தோற்கடிக்க ஒன்றிணையுமாறு கோரிக்கை விடுக்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# தலதா மாளிகையில் தஜிகிஸ்தான் ஜனாதிபதி





(கண்டி)

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள தஜிகிஸ்தான் ஜனாதிபதி எமோலி ரமோன் நேற்று முன்தினம் கண்டி தலதா மாளிகைக்கு விஜயம் செய்தார்.

தலதா மாளிகைக்கு சென்ற தஜிகிஸ்தான் ஜனாதிபதியை மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க மற்றும் தியவடன நிலமே பிரதீப் நிலங்க ஆகியோர் வரவேற்றனர்.

இதேவேளை, தஜிகிஸ்தான் ஜனாதிபதி புனித தந்த தாதுவை தரிசித்ததுடன் தலதா மாளிகையின் அருங்காட்சியகத்தையும் பார்வையிட்டார். (இ-10)

## இன்று ஒரு தகவல்

# தப்புப் பண்ணிட்டேன்

நம் மீது ஒரு குற்றச்சாட்டுப் பந்து வந்து விழுந்ததும் மறுகணமே அதை யார் மீது தூக்கி எறியலாம் என்பதில் தான் நம் கவனம் போகிறது.

ஐயய்யோ! நான் செய்யவே இல்லை. எனக்கு இதைப் பத்தித் தெரியவே தெரியாது! என்று ஒரேயடியாக சிக்ஸர் அடிக்கிறவர்களும் உண்டு.

கையுங்களவுமாகச் சிக்கினாலொழிய எத்தனை பேர் தங்களுடைய குற்றத்தை ஒப்புக் கொள்ள முன் வருகிறார்கள்?

மிக மிக அபூர்வமே!

அந்தத் தவறில் நமக்கும் சிறு பங்கு உண்டு என்பதை உலகிடம் ஒப்புக்கொள்ள மட்டுமல்ல. மனச்சாட்சியளவில் கூட உணரக் கூட மறுக்கிறோம்.

உடனே தப்பிக்க நான்கு காரணம் சொல்கிறோம். அல்லது சாக்குப்போக்குத் தேடுகிறோம். ஏமாளி யார் என்று பார்த்து அவர் தலையில் சுமையைத் தூக்கி வைத்துவிடுகிறோம்.

எக்குத் தப்பாக மாட்டிக் கொண்டால் கூட என் நேரம் சரியில்லை நான் வேண்டுமென்று செய்யவில்லை என்று பேசுகிறோம். அந்தக் கடைசி நிமிடம் கூட நான் செய்தது தவறு தான் என்று ஒப்புக் கொள்ள ஏனோ மனம் வருவதே இல்லை.

பெரிய குற்றம் என்றில்லை. சாதாரண விடயங்களில் கூட நாம் தப்பித்துக் கொள்ளும் குணத்தையே அதிகம் பயன்படுத்துகிறோம். இது ஒரு கேடயம் என்பதாகவே நாம் நம்புகிறோம்.

ஆனால் அக்கேடயம் நம்மைத் தாக்கிப் பாதிக்கக் கூடிய ஒரு மோசமான ஆயுதம் என்பதைக் காலம் உணர்த்தாமல் விடுவதில்லை. வெளியூர் நண்பர் ஒருவர். இவருக்கு ஓர் ரயில் டிக்கெட் வேண்டும் என எழுதினார். இவர் ஆபீஸ் பையனை அனுப்பி டிக்கெட் வாங்கினார். பயணியோ படு குண்டு. வாங்கப்பட்டதோ டூ டயர்! பயணியால் ஏற முடியாது. அவர் எழுதிக் கேட்டதோ த்ரீ டயர்.

டிக்கெட் வாங்கச் சொன்னேனே தவிர டூ டயரா? த்ரீ டயரா? எனப் பையனிடம் சொல்லி அனுப்பாதது என் தவறுதான் என்று இவர் ஒப்புக் கொண்டிருந்தால் பயணிக்கு அலுப்பும் சலிப்பும் அவ்வளவு வந்திருக்காது. பையனை அனுப்பிய உள்ளூர் நண்பர் தவறை ஒப்புக் கொள்ளாமல் அதையும் இதையும் சொல்ல, பயணிக்கு எரிச்சல் அதிகமாகி விட்டது. அடுத்த பயணத்தின் போது வேறு ஒருவருக்கு டிக்கெட் எடுத்துத் தர எழுத அது முதலாமவருக்குத் தெரிய வர நட்பில் விரிசல்!

தவறுகளை ஒப்புக்கொள்ளாத போது, சம்பந்தப்பட்டவர்களுக்குத் தவறு நடந்துவிட்டது என்பது போக,

-குற்றத்தை இவர் உணர்ந்ததாகத் தெரியவில்லையே!

- நம்மை ஏமாற்றிவிட முடியும் என்று இன்னமும் நினைக்கிறாரே!

- நம்மை இவர் முட்டாள் என்றல்லவா எண்ணுகிறார்?

என்கிற எண்ணங்களும் சேர்ந்து கொள்கின்றன. இந்த எண்ணங்கள் தண்டனையை அல்லது விளைவுகளைப் பன்மடங்காக்குமே தவிர, ஒரு போதும் குறைப்பதில்லை.

மாறாக, தவறுகளை உணர்கிறார் பாவம் என்ற எண்ணமோ மனத்தில் ஈரக்கசிவை உண்டு பண்ணுகிறது.

இப்படி இரக்கத்தை உண்டு பண்ணினால் பரவாயில்லை. அதனாலென்ன என்கிறார்கள் பாதிக்கப்பட்டவர்கள். இல்லை எனச் சாதிக்கும் போதோ பழைய சமாச்சாரங்களையோ சேர்த்துக் கிளறுகிறார்கள்.

தப்புப் பண்ணிட்டேன் என்று ஒப்புக் கொள்கிற போது மனப்பாரம் குறைகிறது; குறைகளைக் களைய வேண்டும் என நாமே உணரத் தலைப்படுகிறோம்.

இது மற்றவர்களால் பெரிதும் விரும்பப்படும் குணமாகும்.

**லேனா தமிழ்வாணன்**

# மைசூர் முதல் '81 போயஸ் கார்டன்' வரை...

# ஜெயலலிதா டயரி குறிப்புக்கள்






"நீங்கள் தேடுவது, உங்களைத் தேடிக்கொண்டிருக்கிறது" என்பார் ரூமி. ஆனால், அம்மு விடயத்தில் அவர் தேடாதது எல்லாம் வாழ்க்கை முழுவதும் அவரை அதி தீவிரமாகத் தேடிக் கொண்டிருந்தது. இதற்கு என்ன காரணம்... ஏன் வேண்டாமென்றாலும், அவரை வாய்ப்புத் துரத்தியது...? சந்தியாவின் பதில் இப்படியானதாக இருக்கிறது. "அம்முவுக்கும் படிப்பில்தான் மிகுந்த விருப்பம். அப்படி இருந்தும் அம்மு நடிப்புத் துறைக்கு வந்துவிட்டாள் என்றால், அதை விதியின் வலிமை என்றுதானே கூற முடியும்?" என்றார் சந்தியா ஒரு நேர்காணலில். அவர் வேண்டுமானால், விதி மீது பழிபோட்டுக் கொள்ளட்டும். ஆனால், விதி மட்டும் அம்முவின் வாழ்வை வடிவமைக்கவில்லை, சந்தியாவும் சேர்ந்துதான் வடிவமைத்திருக்கிறார். தன் உள்ளுணர்வு சொல்லும் பாதையில் அம்மு செல்லவில்லை... அவர் சென்றது சந்தியா காட்டிய வழியில் தான்.

**எதிர்ப்புத் தெரிவித்த தாத்தா...அடம்பிடித்த அம்மு!**

'சின்னட கொம்பே' திரைப்படம் திரைக்கு வருவதற்கு முன்பே சில காட்சிகளைப் பார்த்திருக்கிறார் இயக்குநர் ஸ்ரீதர். நாடகத் துறையில் கோலோச்சிய வை.ஜி.பார்த்த சாரதியை, ஜனாதிபதியின் மகன் சங்கர் கிரியை, பிரம்மாண்ட இயக்குநர் பந்தலுவைக் கவர்ந்த அம்முவின் நடிப்பு ஸ்ரீதரையும் கவர்ந்திருக்கிறது. ஹூம்... கவராமல் போனால்தானே ஆச்சரியம். ஆன்மாவிலிருந்து கலையை வெளிப்படுத்துபவரை யாருக்குத்தான் பிடிக்காமல் போகும்...? சந்தியாவை அணுகுகிறார். "நான் எடுக்கப்போகும், 'வெண்ணிற ஆடை' படத்தில் அம்முவை கதாநாயகியாக நடிக்கவைக்க விரும்புகிறேன்... உங்களுக்குச் சம்மதமா?" அந்தச் சமயத்தில் உச்சத்தில் இருந்த ஓர் இயக்குநர் கேட்கிறார். மறுக்க விருப்பமில்லை தான்... இருந்தாலும் ஒரு சிறு குழப்பம். தனக்கு வேண்டப்பட்டவர்கள் எல்லோரிடமும் கேட்கிறார். இறுதியாகத் தன் அப்பாவிடமும்.

"அம்முவை நடிக்கவைக்க வாய்ப்புத் தொடர்ந்து வருகிறது... நான் என்ன



செய்யட்டும்...?" என்று கம்மியக் குரலில் கேட்கிறார் சந்தியா. அவருக்குத் தெரியும் தானே, தான் நடிப்பதே அப்பாவுக்குப் பிடிக்கவில்லை என்பது!

சந்தியாவை நடிக்க கேட்டபோது தயாரிப்பாளர் கெம்ப்ராஜ்ஜுவுக்கு ரெங்கசாமி, என்ன பதிலைச் சொன்னாரோ... அதையே தான் இன்னும் உரிமையாக... இன்னும் கோபமாகச் சொல்கிறார். "அம்மு நன்றாகப் படிக்கிறாள். நீயும் உன் தங்கையும் (வித்யாவதி) சினிமாவில் நடிப்பது போதாதா? அம்முவையும் ஏன் சினிமாத் துறைக்கு இழுக்கிறாய்?" என்கிறார் காட்டமாக.

ஆனால், சந்தியா முன் முடிவுடன் தான் இந்தக் கேள்வியையே கேட்டார். ஆம், அவர் முன்பே முடிவு செய்துவிட்டார், அம்முவைத் தொடர்ந்து நடிக்கவைப்பது என்று.

சந்தியா முடிவு செய்தால் மட்டும் போதுமா...? அம்முவின் முடிவுதானே முக்கியம்...! ரெங்கசாமியின் வார்த்தைகளை வேண்டுமானால் புறந்தள்ளலாம். ஆனால், அம்மு முடியாது என்று சொலலிவிட்டால்... என்ன செய்வது? குழப்பத்துடனே அம்முவிடம் தேன் தடவிய வார்த்தைகளில் கேட்கிறார் சந்தியா, "அம்மு தொடர்ந்து நடிக்க வாய்ப்பு வருகிறது... எனக்கு நன்கு புரிகிறது உனக்குப் படிப்பின் மீதுதான் விருப்பம் என்று... ஆனால், தொடர்ந்து வரும் வாய்ப்பை நாம் அவமதிப்பது துரதிர்ஷ்டத்தை நாமே அழைப்பது போல்... என்ன சொல்கிறாய்?"

அம்மு, அந்தச் சமயத்தில் அழுது அடம்பிடித்துத் தான் விட்டார். ஆம், எப்போதும் அம்மாவை எதிர்த்துப் பேசாத அம்மு, முதன் முறையாக கோபமாக எதிர்த்துப் பேசுகிறார். "முடியாது... என்னால் முடியவே முடியாது..." என்று வீட்டில் ஒரு சூறாவளியையே உண்டாக்கிவிட்டார். அப்போது அவர் அந்த அளவுக்குப் பிடிவாதமாக இருந்ததற்கு ஒரு காரணமும் இருக்கிறது. ஆம், அந்தச் சமயத்தில்தான் மெட்ரிக் பாடசாலை ரிசல்ட்டும் வந்து இருந்தது. பரீட்சையில் நிறைய மார்க்குகள் வாங்கியிருந்த அம்முவுக்கு மேற்படிப்புக்குச் சிறப்பு ஸ்கொலர்ஷிப்பும் கிடைத்து இருந்தது. அம்மு இந்த வாய்ப்பைவிடத் தயாராக இல்லை. சந்தியாவும் விட்டுத் தர தயாராக இல்லை.

அம்மு ஒரு முடிவுக்கு வருகிறார். 'ஏன் இரண்டு குதிரைகளிலும் ஒரே நேரத்தில் பயணம் செய்யக் கூடாது... செய்துதான் பார்ப்போமே...?'.

மேற்படிப்பைத் தொடர்ந்துகொண்டே, சினிமாவில் நடிக்க முடிவு செய்கிறார். அதற்கு சந்தியாவும் சம்மதிக்கிறார்.

**இப்படியாகத்தான் மேற்படிப்பைக் கைகழுவினார்!**

அந்தச் சமயத்தில் ஒரு வழக்கம் இருந்திருக்கிறது. சர்ச் பார்க் பாடசாலையில் படித்த பெரும்பாலான மாணவிகளும் ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரியிலேயே சேர்வார்களாம். ஜெயலலிதாவும் ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரியிலேயே சேர விரும்பியிருக்கிறார். விரும்பினால் மட்டும் போதுமா...? என்னதான் பெரிய அந்தஸ்த்தில் இருந்தாலும், கல்லூரியில் சேர்வதென்றால் அடிப்படையான சில விடயங்களைச் செய்ய வேண்டும் அல்லவா...? விண்ணப்பம் வாங்க வேண்டும், விருப்பமான பாடப்பிரிவை தேர்வு செய்ய வேண்டும், குறிப்பிட்ட நாளில் விண்ணப்பத்தை கல்லூரித் தேர்வுக் குழுவிடம் அளிக்க வேண்டும்... இந்தக் காலத்து அமைச்சர்களின் பினாமிகள் நடத்தும் கல்லூரிகளில் வேண்டுமானால், இதுவெல்லாம் தேவையில்லாமல், பணமே மட்டுமே பிரதானமானதாக இருக்கலாம். ஆனால், அப்போது அப்படி இல்லை. கடுமையான கட்டுப்பாடுகள் இருந்திருக்கின்றன. அம்முவோ தொடர்ந்து படப்பிடிப்பில் இருந்து இருக்கிறார். அவரால் கல்லூரிக்குச் சென்று விண்ணப்பத்தை வாங்கி, பிடித்த பாடத்தை அதில் தேர்வு செய்வது என்பது இயலாத காரணமாக இருந்திருக்கிறது. அந்தச் சமயத்தில் அவருக்கு உதவியவர், அவரின் பாடசாலைத் தோழி ஸ்ரீமதி.

அம்மு அவரிடம், "எனக்காக விண்ணப்பம் வாங்கி, நீ என்ன பாடத்தைத் தேர்வு செய்கிறாயோ அதே பாடத்தை எனக்கும் தேர்வு செய்து விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து கல்லூரியில் கொடுத்துவிட முடியுமா...?" என்று கேட்க, ஸ்ரீமதியும் சம்மதித்திருக்கிறார்.

கல்லூரியில் இடம் கிடைக்கிறது. ஆமாம், முதல் மதிப்பெண் எடுத்த ஒருவருக்கு எந்தக் கல்லூரி தான் இடம் தர மறுக்கும்...?

கல்லூரி திறக்கிறது. ஒரு



நாள் சுசிலா மேரி என்ற பேராசிரியை பாடம் எடுத்துக்கொண்டிருக்கிறார். படப்பிடிப்பிலிருந்து நேராகக் கல்லூரிக்கு வந்த அம்முவின் கைகளில் எந்தப் புத்தகமும் இல்லை. அந்தப் பேராசிரியைக்கு அம்மு குறித்து எதுவும் தெரிந்திருக்கவில்லை. கண்டிப்பான பேராசிரியையான அவர், அம்முவின் கைகளில் எந்தப் புத்தகமும் இல்லாததைப் பார்த்துக் கடும் கோபம் அடைந்து, சில கேள்விகளைக் கேட்டு இருக்கிறார். அம்மு அமைதியாக நிற்க, அந்தப் பேராசிரியை கோபமாக, "பொம்மை மாதிரி ஆடை உடுத்துவதற்கா கல்லூரிக்கு வருகிறாய்...?" என்று எரிந்து விழுந்து இருக்கிறார். அம்முவுக்கு சங்கடமாகிவிட்டது. அமைதியாக வகுப்பில் அமர்கிறார். நல்ல வேளையாக, சிறிது நேரத்தில் மதிய உணவு இடைவேளை வருகிறது. அப்போது வீட்டுக்குச் சென்றவர், பின் எப்போதும் கல்லூரி திரும்பவேயில்லை...!

ஸ்ரீமதி அம்முவை சந்தித்து, " என்ன ஆனது... ஏன் கல்லூரிக்கு அதன்பின் வரவில்லை" என்று கேட்டதற்கு, "என்னால் அதுபோன்ற ஓர் இறுக்கமான இடத்தைச் சமாளிக்க முடியாது என்று நினைக்கிறேன்" என்று அம்மு கூற " சரி... வேறு ஏதாவது கல்லூரியில் சேர்" என்று ஆலோசனை வழங்கிய ஸ்ரீமதியிடம், "இல்லை... எந்த வேலையையும் என்னால் அரை மனதுடன் செய்ய முடியாது. இனி நடிப்புத்தான் என்று முடிவு செய்து விட்டேன்" என்று கூறியுள்ளார்.

அவர் ஜெயலலிதாவாகப் புகழ்பெற்ற பின், அவர் அளித்த ஒரு பேட்டியிலும் இதை நினைவுகூர்ந்து, "சிறு விடயத்துக்கும் முழுமையான உழைப்பைக் கொடுக்க வேண்டும் என்று நினைப்பேன்... அது என் வீட்டு நாய்க்குட்டியைக் குளிப்பாட்டுவதாக இருந்தாலும்கூட.... அங்கு பாதி, இங்கு பாதி என்று என்னால் பயணிக்க முடியவில்லை" என்று குறிப்பிட்டுள்ளார்.

இப்படியாகத்தான் மேற்படிப்பு குறித்த அவரது கடைசி நம்பிக்கையும் தகர்ந்தது.

ரூமியிடம் தொடங்கினேன்... அவரிடமே இந்த அத்தியாயத்தை முடிக்கிறேன்... "உங்கள் ஆன்மா சொல்வதன்படி நீங்கள் எவ்வளவு விரைவாகச் செயற்படுகிறீர்கள் என்பதில்தான் வாழ்வின் மொத்த விடயமும் இருக்கிறது" என்பார் ரூமி.

ஆனால், கெடுவாய்ப்பாக... அம்மு சந்தியாவின் ஆன்மா சொல்வதன்படி செயற்பட்டுக்கொண்டிருந்தார்.

(தொடரும்)

# கசிப்புக்குகை முற்றுகை
## இருவர் கைது



(கரணவாய்)

யாழ்.கொடிகாமம் தவசிக் குளம் பகுதியில் கசிப்பு குகை ஒன்று முற்றுகையிட்டதில் 15 லீற்றர் கசிப்பும் 75 லீற்றர் கோடாவும் மீட்கப்பட்டதாக கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை கொடிகாமம் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் பிரகாரம் குளக்கரை ஒன்றைச் சுற்றி வளைத்ததில் உற்பத்திக்கு பயன்படுத்திய உபகரணங்களும் 15 லீற்றர் கசிப்பும் 75 லீற்றர் கோடாவும் மீட்கப்பட்டது. இதில் இருவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-60)

# பரீட்சை எழுதாமலிருக்க் தந்தையிடம் ரூ.8 மில்லியன் கப்பம் கோரிய மகன்

(கொழும்பு)

80 இலட்சம் ரூபாய் கப்பம் கோரி, இனந்தெரியாத நபர்களினால் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் 17 வயது சிறுவனை, பொலிஸார் நேற்று முன்தினம் புதனகிழமை அதிகாலை மீட்டுள்ளனர்.

தங்கொட்டுவ, கோனவில தெற்கு பிரதேசத்தில் வசிக்கும் சுவர்ணாதிபதி குரனகே கவிஷ்க கிம்ஹான் குரேரா என்ற பாடசாலை மாணவனே, இவ்வாறு கடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப் படுகின்றது. குறித்த மாணவன், பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்பதுடன், தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை எழுதிக் கொண்டிருக்கும் நிலையிலேயே கடத்தப்பட்டிருந்தார்.

தங்கொட்டுவ, கொடெல்ல வித்தியாலய மைதானத்துக்கு, செவ்வாய்க்கிழமை விளையாடச் சென்ற மாணவன், பிற்பகல்ஒருமணியாகியும் வீடு திரும்பாததால் பெற்றோர் தேடிப் பார்த்துள்ளனர். மகனின்தொலைபேசிக்குஅழைப்பு ஏற்படுத்திய போதும், அதற்கு பதில் கிடைக்கவில்லை.

இரவு, தந்தையின் தொலைபேசிக்கு அழைப்பை ஏற்படுத்திய குறித்த மாணவன், அறிமுகமற்ற சிலர் தன்னை கடத்தியிருப்பதாகவும், தான் இருக்கும் இடம் தெரியாதென்றும் கூறியுள்ளார். தன்னை விடுவிப்பதாயின், 80 இலட்சம் ரூபாயினை கடத்தல்காரர்கள் கப்பமாகக் கோருவதாகவும், அம் மாணவன் கூறியுள்ளார்.

இதுகுறித்து, குறித்த மாணவனின் தந்தையால், பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து, பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர். இந்நிலையில், கடத்தப்பட்டதாக கூறப்பட்ட குறித்த மாணவன், புதன்கிழமை அதிகாலை, தங்கொட்டுவ பிரதேசத்தில் உள்ள மூடப்பட்ட எண்ணெய் ஆலையில் வைத்து கண்டுபிடிக்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட போது, அம்மாணவனை எவரும் கடத்தவில்லை என்றும் புதன்கிழமை இடம்பெற்ற கணிதபாட பரீட்சைக்குத் தோற்ற விரும்பாமையினால், தான் கடத்தப்பட்டதாக நாடகமொன்றை அரங்கேற்றியதாகவும் இதற்காக, தன்னுடைய நண்பரொருவரினதொலைபேசியைப்பயன்படுத்திக்கொண்டதாகவும், பொலிஸ் விசாரணைகளின் போது, அம்மாணவன் தெரிவித்துள்ளார். (இ-10)

# மஹிபாலவிற்கு உயர் பதவி



சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் டாக்டர் பாலித மஹிபால, உலக சுகாதார ஸ்தாபனத்தின் தென்கிழக்கு ஆசிய வலய நாடுகளுக்கான தொற்றா நோய், சுற்றுச்சூழல் சுகாதாரம் மற்றும் இடம்பெயர்வு சுகாதாரம் சம்பந்தமாக சர்வதேச ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தியாவின் டில்லியில் உள்ள உலக சுகாதார ஸ்தாபனத்தின் தென்கிழக்கு ஆசிய வலயத்திற்கான அலுவலகத்தில் இதற்கான நிகழ்வு இடம்பெறவுள்ளது.

அதன்படி இந்த வலயத்தில் உள்ள 11 நாடுகளின் பிரதானியாக அவர் பணியாற்றவுள்ளார். சுகாதார துறையில் இவ்வாறான பதவிக்கு நியமிக்கப்படும் முதலாவது நபராக இவர் கருதப்படுகிறார்.

கடந்த 2011ஆம் ஆண்டு சுகாதார பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்ட அவர், சுகாதார சேவையில் 30 ஆண்டுகால அனுபவம் வாய்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-10)

# ராணுவத் தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் சன்ன குணதிலக

இலங்கை இராணுவத்தின் தலைமை அதிகாரியாக, மேஜர் ஜெனரல் சன்ன குணதிலக நியமிக்கப்பட்டுள்ளார்.இலங்கை இராணுவ ஊடகப் பிரிவு இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

இராணுவத் தலைமை அதிகாரியாக இருந்த மேஜர் ஜெனரல் உபய மெடவெல சில நாட்களுக்கு முன்னர் ஓய்வு பெற்றதையடுத்தே, இவர் இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

மேஜர் ஜெனரல் சன்ன குணதிலக,கடந்த நவம்பர் 4ஆம் திகதி தொடக்கம், இராணுவ பிரதி தலைமை அதிகாரியாக பணியாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, இராணுவத்தின் பிரதி தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் ரேனக உடவத்த நியமிக்கப்பட்டுள்ளார் என்று இலங்கை இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது. (இ-10)



# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 929

### குரு

திரும்ப பெற முடியாதவை



உடலை விட்ட உயிர்




பேசி விட்ட வார்த்தை



கடந்து விட்ட நேரம்



இழந்த விட்ட இளமை



நண்பனிடம் கொடுத்த பென்டிரைவ்

### ராதை

கொசுத் தொல்லை தாங்க முடியலையா அதுக்கு நான் சுப்பர் ஐடியா சொல்லவா...



விசத்தை குடிச்சிட்டு படுத்தா... இரத்தத்தில விஷம் ஏறி நம்மள கடிக்கிற கொசுவெல்லாம் குடிச்சிட்டு செத்துரும்ல...?

### ரஜினி

அன்பு நிறைந்த
உள்ளம்தான்
சண்டை போடும்
விலக அல்ல
விலகிடக் கூடாது
என்பதற்காக...



### சங்கவி

குண்டா இருக்கீங்கன்னு சொன்னா மனசு கஷ்டப்படுமேன்னு..



கும்முனு இருக்கீங்கன்னு சொன்னே அதுக்கு போய் ப்ளாக் பன்னிருச்சி...

### ரதி

கணவன் :
இன்னைக்கு ராத்திரி நம்ம வெளியில சாப்பிடுவோமா..?
மனைவி :
ஏன்...?
என் சமையல் உங்களுக்கு அலுத்து போச்சா..?



கணவன் :
இல்ல, இன்னைக்கு பாத்திரம் கழுவுற மூடு இல்ல...

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இந்தியாவுக்குச் செல்லவுள்ளார் இலங். விமானப்படைத் தளபதி



இலங்கை விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் கபில ஜெயம்பதி இந்தியாவுக்குப் பயணம் ஒன்றை மேற்கொள்ளவிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் பயணத்தின் போது, தெலுங்கானா மாநிலத்தில் ஹைதராபாத்தில், உள்ள தண்டிகல் விமானப்படை பயிற்சி நிலையத்தில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை விமானப்படைத் தளபதி பங்கேற்கவுள்ளார்.

நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், இந்த பயிற்சி நிலையத்தில் பயிற்சிகளை முடித்த அதிகாரிகளின் அணிவகுப்பு மரியாதையை இலங்கை விமானப்படைத் தளபதி பார்வையிடுவார்.

இலங்கை விமானப்படைத் தளபதியின் இந்தியப் பயணத்தின் போது, இந்தியாவில் தயாரிக்கப்படும் தேஜஸ் போர் விமானங்களின் திறன் குறித்த மதிப்பீடுகளையும் செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை விமானப்படைக்கு எட்டுப் போர் விமானங்கள் விரைவில் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

சீனா, ரஷ்யா, பாகிஸ்தான், சுவ்டன் ஆகிய நாடுகளின் தயாரிப்புகளுடன் இந்தியாவின் தேஜஸ் போர் விமானங்களும் இலங்கை விமானப்படையின் பரிசீலனையில் இருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

# சிறுத்தையின் தாக்குதலில் சிக்கி உத்தியோகத்தர் காயம்

அகரப்பத்தனை, டொரிங்டன் கல் மதுரை தோட்டத்தில் சிறுத்தையின் தாக்குதலுக்கு உள்ளான 43 வயது நபர், அகரப்பத்தனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில், தோட்ட வெளிக்கள உத்தியோகத்தரான எஸ். தியாகராஜா என்பவரே பாதிப்படைந்துள்ளார். இவர், தனது வளர்ப்பு நாயுடன் வனப்பகுதிக்குச் சென்றபோது, சிறுத்தையின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார். இவரது வளர்ப்பு நாயையும் சிறுத்தை தாக்கியுள்ளது. குறித்த நபர், மயக்கமுற்ற நிலையில் தேயிலைச் செடியின் அடிவாரத்தில் கிடந்ததைக்கண்ட பிரதேச மக்கள், அவரை உடனடியாக வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். மேற்படி நபர், மேலதிக சிகிச்சைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (இ-10)

# தெஹிவளை மிருகக்காட்சிச்சாலை பார்வையாளர்கள் திடீர் அதிகரிப்பு


தெஹிவளை தேசிய மிருகக் காட்சிச்சாலையை பார்வையிடும் பார்வையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த காலங்களோடு ஒப்பிடுகையில் மிருகக் காட்சிச்சாலையை பார்வையிட வருகை தந்தோர் கடந்த வார இறுதி நாட்களில் சுமார் 10 இலட்சத்திற்கும் அதிகமானதாக காணப்படுவதாக அதன் பணிப்பாளர் தம்மிக்கா மல்சிங்க தெரிவித்துள்ளார்.

தூர பிரதேச பார்வையாளர்களின் நலன்கருதி, பல அடிப்படை வசதிகளும் இங்கு ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தேசிய மிருகக்காட்சிச்சாலை தினமும் காலை 8.30 மணி முதல் மாலை 6 மணிவரை பார்வையாளர்களுக்காக திறக்கப்பட்டிருப்பதாக மேலும் அதன் பணிப்பாளர் தெரிவித்தார். (இ-10)

# ஊடக இணைப்பாளர் கௌரவிப்பு



உலக மனித உரிமைகள் தினம் கொழும்பு 07 சுதந்திர சதுக்க மண்டபத்தில் மனித உரிமைகள் அமைப்பினால் கடந்த 10ஆம் திகதி கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் பிரதி அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர், பொலிஸ் பொறுப்பதிகாரி, மதத் தலைவர்கள், மனித உரிமை அங்கத்தவர்களும் கௌரவிக்கப்பட்டனர். இதன் போது யாழ். மாவட்ட ரீதியில் ஊடகவியலாளரான ச.சசிகரன் என்பவருக்கு மனித உரிமை அமைப்பின் பணிப்பாளர் கலாநிதி ஹசீமால் யாழ். மாவட்ட ஊடக இணைப்பாளருக்கான சான்றிதழும் பதக்கமும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. (இ-3)

# இருட்டறையில் எனது வாழ்வு

## 25 வருடங்கள் சிறையிலிருக்கும் நளினியின் வலிகளைச் சுமந்த நெடுந்தொடர்..... 13



"இலங்கையில் இறுதி இனஅழிப்புப் போர் 2007ஆம் ஆண்டு வேகம் எடுக்கத் தொடங்கியது. அதற்கு முந்தைய ஆண்டே அந்தப் போருக்கு ஆபரேசன் பெக்கான் எனப் பெயரே வைத்து விட்டிருந்தார்கள். இதற்கு ஓராண்டு கழித்து 2008இல் தான் இங்கே வேலூர் சந்திப்பு நடந்தது. எனவே எனது சந்திப்புக்கும் இறுதிப் போருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. பிரியங்கா எதிர்பார்த்து வந்தது என்னிடம் இருந்து அவருக்குக் கிடைத்திருந்தால் அவர் திருப்தி அடைந்து இருக்க வேண்டும். அவர் எனது விடுதலைக்கு வழிவகை செய்து இருக்க வேண்டும்."

...பிரியங்கா என்னைச் சந்தித்தது வேறு வேறு விடயங்களை எல்லாம் முடிச்சுப் போட்டு பேச வைத்து விட்டது. அதில் முதலாவது அவர் என்னைச் சந்தித்த பிறகுதான், 'நான் எதையோ சொல்லிவிட்ட பிறகுதான்' இலங்கையில், இன அழிப்பு போர் தீவிரமடைந்து கோரமாக முடிந்தது என்று விஷமத்தனமான பிரசாரத்தை இங்கே சிலர் செய்தார்கள். இந்த பல அதிகாரிகளிடம் பல தகவல்கள் இருந்திருக்கலாம். ஒரு வருடம் புலனாய்வு செய்து குற்றப் பத்திரிகை தாக்கல் செய்திருந்தார்கள், சிறப்பு நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் தீர்ப்பு சொன்னது, பிறகு பல்நோக்கு விசாரணை ஒன்று போடப்பட்டதே, அவர்களும் 15 வருடம் விசாரித்தபடி இருக்கின்றார்களே, இதிலெல்லாம் கிடைக்காத ஒரு தகவலுக்கா பிரியங்கா என்னைத் தேடி அந்தப் போருக்கு 'ஆபரேஷன் பெக்கான்' எனப் பெயரே வைத்து விட்டிருந்தார்கள். இதற்கு ஓராண்டு கழித்து 2008இல்தான் இங்கே வேலூர் சந்திப்பு நடந்தது. எனவே எனது சந்திப்புக்கும் இறுதிப் போருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. பிரியங்கா எதிர்பார்த்து வந்தது என்னிடம் இருந்து அவருக்குக் கிடைத்து இருந்தால், அவர் திருப்தி அடைந்து இருக்க வேண்டும் அவர் எனது



ராஜீவ் காந்தி நினைவிடத்தில் சோனியா, பிரியங்கா

உண்மை தெரியாத சிலரும் வலியின் காரணமாக என்னைத் தவறாகப் பேசினார்கள். சிலர் எரிகிற வீட்டில் பிடுங்கின வரை லாபம் என்று அவதூறு பரப்பினார்கள். சிலர் எனது விடுதலைக்கான ஆதரவினை முழுமையாகத் தடுத்துவிடத் திட்டமிட்டு அந்தப் பழிகளை என்மீது சுமத்தி பிரசாரம் செய்தார்கள். அப்படி பிரசாரம் செய்தவர்கள் நான் அப்படி என்னதான் சொன்னேன் என்றும் சொல்லி இருக்கலாமே? அப்படி என்னதான் என்னிடம் இருந்தது? வெளியில் உள்ள அவர்களுக்குத் தெரியாத விடயமா உள்ளே இருக்கும் எனக்குத் தெரிந்திருக்கப் போகிறது?

எங்களை 60 நாட்கள் பொலிஸ் காவலில் வைத்திருந்தார்கள். வந்திருக்கப் போகிறார்?

அவருக்கு ஏதோ ஒரு அவநம்பிக்கை இருந்திருக்க வேண்டும். நாங்கள் ஒப்புதல் வாக்குமூலத்தை விரும்பிக் கொடுத்திருந்தோம் என்பதை அவர் நம்பவில்லை. பல ஆண்டுகளாக அவருக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். அதன் உண்மைத்தன்மை என்ன என்பதை அறிந்துகொள்வதற்காகக் கூட என்னை சந்தித்திருக்கலாம்.

சோனியாவை சந்தித்த பெங்களூர் ரங்கநாத் சொல்லாத தகவலையா நான் சொல்லி இருக்க முடியும்?

இலங்கையில், இறுதி இன அழிப்புப் போர் 2007ஆம் ஆண்டு வேகம் எடுக்கத் தொடங்கியது. அதற்கு முந்தைய ஆண்டே விடுதலைக்கு வழிவகை செய்து இருக்க வேண்டும். ஆனால், எனக்கு சாதகமாக இருந்த சூழ்நிலைகள் அப்படியே எதிராக அல்லவா மாற்றப்பட்டுவிட்டன. சிறையிலும் எனக்குத் திட்டமிட்ட துன்பங்கள் இழைக்கப்பட்டன. விடுதலையைத் தடுக்க பல பழிகள் சுமத்தப்பட்டன. சிறைக் குற்றம் என ஒரு வழக்கும் ஜோடிக்கப்பட்டது. பின்பு உயர் நீதிமன்றம் அதனைத் தள்ளுபடி செய்தது.

இது தவிர அந்தச் சந்திப்புக்குப் பிறகு சிறையில், எனக்குத் திட்டமிட்ட உளவியல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. ஒன்று நான் பைத்தியம் ஆகிவிட வேண்டும் அல்லது தற்கொலை செய்திட வேண்டும்.

(வலிகள் தொடரும்...)

# மகத்துவம் மிக்கது மார்கழி மாதம்



மாதங்களில் மகிமை மிக்கது மார்கழி. இந்த மாதம் சுப காரியங்கள் செய்வதற்கு நிறைவில்லாதது என்பது தவறாகும்.

வருடத்தை நான்காகப் பிரித்தால் உத்தராயணத்திற்கு முந்த உஷத் காலத்தில் மார்கழி வருகிறது.

தேவர்களுக்கு ஆடி முதல் மார்கழி வரை இரவு காலமாகும்.

தை முதல் ஆனி முடிய பகலுமாக ஒரு நாளாகும்.

எனவே மார்கழி தேவர்களுக்கு இறுதிக் காலமாகும்.

மாணிக்க வாசகர் சைவ சமயத்திற்கு அளித்த அரும் பெரும் சொத்து திருவாசகம்.

திருப்பள்ளி எழுச்சி, திருவெம்பாவை மார்கழி மாதத்தில் அதிகாலையிலேயே ஆலயங்களில் திருப்பள்ளி எழுச்சி ஓதப்படும்.

இந்த 10 பாடல்களிலும் திருப்பெருந்துறை சிவபெருமானை துயிலுணர்ந்து பள்ளியிலிருந்தும் எழுந்தருள்வீராக.

அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே, அறிவரியாய் எமக்கெளியாய், நம்மையும் ஆண்டருள் புரிபவனே, என்னகத்தாய், உலகிற்கு உயிரானாய், ஆட்கொள்ள வல்ல அரமுதே! பள்ளி எழுந்தருளாயோ! என பாடியருளினார்.

தொடர்ந்து உதயத்திலே பாடப்படுகின்ற திருவெம்பாவையிலே ஆதியும் அந்தமும் இல்லாத அரும் பெரும் சோதி எனத் தொடங்கி சோதியான சிவபெருமானை நாங்கள் பாடுவதை கேட்ட பின்பும் நீ தூங்குகின்றாயோ? என அடியெடுத்து 12 ஆவது பாடலில் ஆர்த்த பிறவி துயர்கெட நாம் ஆர்த்தாடும் பெண்ணே, சிவபெருமானது



படைத்தல், காத்தல், அழித்தல் எனும் முத்தொழில் சிறப்பினை எடுத்துக் கூறி பொய்கையிலே நீராடி வணங்கி விளையாடுவோமாக எனவும் போற்றி அருளுக நின் ஆதியாம் பாத மலர் என இறுதிப் பாடலில் பெருமானே காப்பாற்றுக!

ஆதியும் அந்தமுமாயுள்ள பாதங்கள் காக்க! நாங்கள் உய்ந்து பிழைக்க ஆட்கொண்டருளும் பாதங்கள் காக்க என்று நீராடி, மார்கழி நீருக்கு வணங்குவோம் என நிறைவு செய்துள்ளார்.

அடுத்த பொக்கிஷமானது திருவாசகம், திருவாசகத்திற்கு உருகாதோர் ஒருவரில்லை.

திருவாதவூரரின் திருவாசகம் தேன் என வர்ணிக்கப்படுகிறது.

திருவாசகத்தினை மோகன ராகத்தில் இசை வழுவாது ஓதும் போது கேட்போர்க்கு மெய்தான் அரும்பி விதிர் விதித்து விரையார் கழற்கு கை தான் தலை வைத்து கண்ணீர் ததும்புகின்ற நிலை ஏற்படுகின்றதல்லவா? நானே பொய் என் நெஞ்சும் பொய் என் அன்பும் பொய்.

ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே.

தன்னையும் தனது அன்பினையும் இறைவனிடத்தில் பொய்யாக காண்பித்து அழுதால் தொழுதால் இறைவன் அருளுவார் என அற்புதமாக எடுத்துக் காட்டியுள்ளார்.

மார்கழி மாதத்திற்கு மெருகூட்டும் வகையில் சூடிக் கொடுத்த சுடர்க்கொடி தோழி பாவாய் ஆண்டாள் மார்கழி மாதம் முழுவதும் மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளாம் பாடலில் வங்கக் கடல் கடைந்த மாதவனைக் கேசவனை எனவழுத்தி செங்கண் திருமுகத்து செல்வத் திருமாலாய் எங்கும் திருவருள் பெற்று இன்புறுவரெம்பாவாய் என நிறைவு செய்திருக்கிறார்.

திருமாலின் பெருமையை இப் பாடல் மூலம் முன்னெடுத்திருக்கிறார்.

ஈழத்தில் வரலாற்றுச் சிறப்பு மிக்க பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயம், யாழ்ப்பாணம் வண்ணை வெங்கடேஸ்வர வரதராஜப் பெருமாள் ஆலயம், வல்லிபுரம் ஆழ்வார் ஆலயங்களில் அதிகாலை வேளை விசேட திருப்பாவை பூஜை இடம்பெற்று 30 திருப்பாவைப் பாடல்களும் ஓதப்பட்டு வருகின்றது.

மார்கழி மாத வைகுண்ட ஏகாதசி தினத்தில் குறிப்பிட்ட ஆலயங்களில் சுவர்க்க வாசல் தரிசனம் சிறப்பாக நடைபெறும்.

இந்த மாதத்திற்கு மேன்மை தருகின்ற வகையில் இறைவன் உலகத்தினர் உய்யும் பொருட்டு திருவாதிரை நன்னாளில் ஆருத்தர தரிசனம் தந்து அடியவர்க்கு அருட்காட்சி தந்தார்.

மென்மேலும் இம் மாதத்திற்கு சிறப்பூட்டும் வகையிலே தங்கள் வீட்டு வாயில்களிலே சாணத்தால் மெழுகி கோலமிட்டு பிள்ளையார் பிடித்து 31 நாட்களும் வணங்கி வந்து தைப்பொங்கல் தினத்தில் 31 மோதகம் பிடித்து ஆலயங்களில் வழிபாடு செய்து பிடித்த பிள்ளையாரை கடலில் சங்கமமாக்குகின்ற பண்டைய நிகழ்வு சில கிராமங்களில் இன்றும் நிலவி வருகின்றது.

இந்த மாதத்தில் வருகின்ற "பாவை நோன்பு", "மார்கழி நோன்பு", "காத் தாயானி விரதம்" கன்னியர் அனுஷ்டித்தால் கண்ணிறைந்த கணவனும் சுமங்கலிகள் அனுஷ்டித்தால்; கணவனோடு மங்களகரமாக வாழலாம்.

கலாபூஷணம்
க.கோகேஸ்வரன்-
தொல்புரத்தூர்.

## பாரிய குற்றச்செயல்கள் 7,592

# நவம்பரில் மட்டும் 39 கொலைகள்!

கடந்த நவம்பர் மாதத்தில் பாரிய குற்றச் செயல்களின் அளவு குறைவடைந்திருப்பதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டின் நவம்பர் மாதம் வரையிலான காலப் பகுதியில் நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் பதிவான பாரிய குற்றச் செயல்களின் எண்ணிக்கை 7592 என்று பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் இந்தக் குற்றச் செயல்கள் கடந்த ஆண்டுக்கு நிகராக எவ்வாறான மாற்றத்தை காட்டுகின்றது என்பது குறித்து அந்த அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை.

கடந்த ஆண்டின் குற்றச் செயல்களின் எண்ணிக்கை மற்றும் அது தொடர்பான தரவுகள் தம்மிடம் இல்லை என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் காரியாலயம் தெரிவித்தது.

பொலிஸ் தலைமையகம் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, இந்த ஆண்டின் நவம்பர் மாதத்தில் மாத்திரம் பாரிய குற்றச்செயல்கள் 575 ஆக பதிவாகியுள்ளன.

அவற்றில் மனிதப் படுகொலை சம்பவங்கள் 39, பாலியல் குற்றங்கள் 198, வீடுகளை உடைத்தல் 153, கொள்ளை சம்பவங்கள் 64 மற்றும் திருட்டுச் சம்பவங்கள் 121 பதிவாகியிருப்பதாக கூறப்பட்டுள்ளது.

இதைக் கடந்த ஆண்டு நவம்பர் மாதத்துடன் ஒப்பிடும் போது 90 குற்றச் செயல்கள் குறைவடைந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் பதிவான பாரிய குற்றச் செயல்களில் அதிகளவானவை மேல் மாகாணத்தில், பதிவாகியிருந்ததுடன், அவற்றின் எண்ணிக்கை 170 ஆக உள்ளதென்று அந்த அறிக்கை கூறுகின்றது.

அந்த அறிக்கையின்படி மேல் மாகாணத்தில் நுகேகொட தொகுதியிலேயே அதிகளவான குற்றச் செயல்கள் பதிவாகியுள்ளன.

எவ்வாறாயினும் ஆண்டின் ஏனைய மாதங்களில் இடம்பெற்ற குற்றங்கள் தொடர்பில் அந்த அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்பதுடன், அவை தொடர்பான தரவுகள் தம்மிடம் இல்லை என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் காரியாலயம் தெரிவித்துள்ளது. (இ-10)

# மலேஷியாவில் மைத்திரிக்கு எதிராக போராட்டம் நடக்கும்

## இலங்கைத் தூதுவருக்கு அது நன்றாகத் தெரியும்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக மலேஷியாவில் ஆர்ப்பாட்டம் செய்யவுள்ளதாக கூறப்படுகின்றமை தொடர்பில் மலேஷியாவின் பாதுகாப்பு தரப்பினருக்கு தெரியும்.

அது தொடர்பில் நாங்கள் கவலையடைய வேண்டியதில்லை. ஆனால் அது தொடர்பில் இந்நாட்டு அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும். தேவையான பாதுகாப்பை மலேஷிய அரசாங்கம் வழங்கும் என்று மலேஷியாவுக்கான இலங்கை தூதுவர் இப்ராஹிம் அன்சார் தெரிவித்தார்.

ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ளதாக கூறப்படுகின்றமை குறித்து நாங்கள் கவலையடைய வேண்டியதில்லை. ஜனநாயக நாட்டில் ஜனநாயக சூழலில் இவ்வாறான ஆர்ப்பாட்டங்கள் நடப்பதுண்டு. அது தொடர்பில் நாங்கள் கவலையடைய வேண்டியதில்லை. இதனால் எமது நிகழ்ச்சி நிரலில் எவ்வாறான தடையும் ஏற்படாது என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு மலேஷியாவுக்கு சென்றுள்ள நிலையில் அவருக்கு எதிராக கோலாலம்பூரில் புலம்பெயர்ந்தோர் ஆர்ப்பாட்டம் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றமை குறித்து அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-10)

# பஸ் சாரதிகளுக்கு புதிய சீருடை

(கொழும்பு)


பஸ் சாரதிகளுக்கு புதிய சீருடையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு மேல் மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

எதிர்வரும் மூன்று மாதங்களில் இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதாக அதிகார சபையின் தலைவர் நுவன் வனிகரத்ன தெரிவித்தார்.

பஸ் ஊழியர்களின் வசதி கருதி இந்த சீருடை அறிமுகப்படுத்தப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (இ-10)




# ராமுவின் ஆசை




தன் அதிர்ஷ்டத்தை நொந்து கொண்டே, ராமு வீட்டை அடைந்தான். அவன் மனைவி அவனை அன்புடன் அழைத்து, "இதோபாருங்க! நீங்க கண்ட கனவு பலிக்கப் போகிறது! இந்தாருங்கள், வடை சாப்பிடுங்கள்!" என்று ஆறு வடைகளை அவன் முன் வைத்தாள். மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்த ராமு "ஆகா! பிரமாதம்! வடை யார் கொடுத்தார்கள்?" என்று கேட்டான்.

"பக்கத்து வீட்டுக் குழந்தைக்கு இன்று ஆண்டு நிறைவு கொண்டாடினார்கள். அவர்கள் நமக்கும் கொடுத்து இருக்கிறார்கள்!" என்றாள்.

மகிழ்ச்சியுடன் வடையை சாப்பிட முனைந்தவன் ஏதோ நினைவிற்கு வந்தவனாக, "நீயும், குழந்தைகளும் சாப்பிட்டீர்களா?" என்று கேட்க, "உங்களுக்கு வடை என்றால் ஆசை என்பதால் நாங்கள் யாரும் தின்னவில்லை. எல்லாம் உங்களுக்குத்தான்!" என்றாள் அவன் மனைவி. அதைக் கேட்ட ராமு நெகிழ்ந்து போய், "நீங்கள் சாப்பிடவில்லை என்றால் எனக்கும் வேண்டாம்! சாப்பிடுவதானால் எல்லாரும் பகிர்ந்து கொள்வோம்!" என்றான்.

அப்போது, பக்கத்து வீட்டுக் குழந்தை மீண்டும் தளர் நடை போட்டு அவர்கள் வீட்டிற்குள் நுழைந்தது. குழந்தையை அன்புடன் அணைத்துக் கொண்டான். ராமு, திடீரென அவனுக்குள் ஒரு சிந்தனை உதித்தது.

ஹ...இந்தப் பச்சிளம் குழந்தை நடக்கப் பயின்றவுடன் வீட்டில் கால் தரிக்காமல் வெளியேறி நம் வீட்டிற்குள் அடிக்கடி நுழைகிறது.



ஆனால், நான் பட்டிக்காட்டை விட்டு வேலை தேடிப் பட்டணம் செல்ல பயப்படுகிறேன். என் குழந்தைகள் நன்கு வயிறாற சாப்பிட வேண்மானால், இங்கேயே முடங்கிக் கிடந்தால் நடக்காது" என்று எண்ணிய ராமு, தன் மனைவியை நோக்கி, "நான் பட்டணம் சென்று வேலை செய்யத் தீர்மானித்து விட்டேன்.

நன்கு சம்பாதித்து, உங்களுக்குப் பசிதீர உணவளிப்பேன்!" என்றான் ராமு.

இதைக் கேட்ட அவனது மனைவி மிகவும் மகிழ்ச்சியுடன் கடவுளுக்கு நன்றி கூறினாள். (முற்றும்)




- 1431 - இங்கிலாந்தின் ஆறாம் ஹென்றி பிரான்ஸ் மன்னனாக பாரிசில் முடி சூடினான்.
- 1497 - வாஸ்கொடகாமா முன்னர் பர்தலோமியூ டயஸ் சென்றடைய முடியாத தென்னாபிரிக்காவின் அட்லாண்டிக் கரையோரத்தில் உள்ள நன்னம்பிக்கை முனையை சுற்றி வந்தார்.
- 1598 - கொரிய, ஜப்பானியக் கடற்படைகளுக்கிடையே இடம்பெற்ற சமரில் கொரியா வெற்றி பெற்றது.
- 1653 - சேர் ஒலிவர் குரொம்வெல் இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து, அயர்லாந்து நாடுகள் அடங்கிய பொதுநலவாயத்தின் தலைவரானார்.
- 1707 - ஜப்பானின் ஃபூஜி மலை கடைசித் தடவையாக வெடித்தது.
- 1773 - அமெரிக்கப் புரட்சி: பாஸ்டன் தேநீர் கொண்டாட்டம் - அமெரிக்கர்கள் பிரித்தானிய கிழக்கிந்தியக் கம்பனியின் கப்பல்களில் ஏறி தேநீர் பெட்டிகளை பாஸ்டன் துறைமுகத்தில் எறிந்தனர்.
- 1835 - நியூயோர்க் நகரத்தில் இடம்பெற்ற பெருந்தீயில் 530 கட்டிடங்கள் சேதமடைந்தன.
- 1857 - இத்தாலியின் நேப்பிள்சில் இடம்பெற்ற 6.9 நிலநடுக்கம் 11,000 பேரைக் கொன்றது.
- 1920 - சீனாவில் 8.6 ரிக்டர் நிலநடுக்கம் ஏற்பட்டதில் 200,000 பேர் கொல்லப்பட்டனர்.
- 1922 - போலந்து அரசுத்தலைவர் கேப்ரியல் நருடோவிச் சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 1925 - இலங்கை வானொலியின் வானொலி சேவை கொழும்பில் ஆரம்பம்.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பானியர்கள் சரவாக்கின் மிரி நகரைக் கைப்பற்றினர்.
- 1960 - ஐக்கிய அமெரிக்க விமானம் நியூயோர்க்கை அண்மிக்கும் போது மோதியதில் 134 பேர் கொல்லப்பட்டனர்.
- 1971 - வங்காளதேச விடுதலைப் போரில் பாகிஸ்தான் இராணுவம் சரணடைந்து போர் முடிவுக்கு வந்தது.
- 1971 - பாஹ்ரேன் பிரித்தானியாவிடம் இருந்து விடுதலை பெற்றது.
- 1991 - கசக்ஸ்தான் சோவியத் ஒன்றியத்திடம் இருந்து விடுதலை பெற்றது.

பிறப்புக்கள்

- 1770 - லுடுவிக் ஃவான் பேத்தோவன், ஜெர்மனிய மேற்கத்திய இசை இயற்றுநர். (இ. 1827)
- 1866 - வசிலி கன்டின்ஸ்கி, ரஷ்ய ஓவியர். (இ. 1944)
- 1917 - ஆர்தர் சி. கிளார்க், ஆங்கில எழுத்தாளர்.
- 1930 - லலிதா - திரைப்பட நடிகை (திருவிதாங்கூர் சகோதரிகளில் மூத்தவர் (பத்மினி, ராகினி). (இ. 1982)
- 1933 - அடையார் கே. லட்சுமணன், பரதநாட்டியக் கலைஞர், நடன ஆசிரியர். (இ. 2014)

இறப்புகள்

- 1916 - கிரிகோரி ரஸ்புட்டின், ரஷ்ய மதகுரு. (பி. 1869)
- 1999 - ஜோசப் ஆனந்தன், தமிழ் நாடக எழுத்தாளர்.

சிறப்பு நாள்

- பாஹ்ரேன் - தேசிய நாள். (1971)
- வங்காள தேசம் - வெற்றி நாள். (1971)
- கசக்ஸ்தான் - விடுதலை நாள். (1991)
- நேபாளம் - அரசியலமைப்புச் சட்ட நாள் (1962)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 90 | 80 | 60 | 80 | 50 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 100 | 120 | 100 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 100 | 120 | 120 | 120 | 100 |
| தக்காளி | 80 | 100 | 45 | 70 | 60 | 80 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 80 | 40 | 60 | 60 | 60 | 50 |
| கோவா | 30 | 80 | 20 | 20 | 60 | 50 | 20 |
| கரட் | 140 | 140 | 90 | 100-160 | 100 | 160 | 100 |
| பூசணி | 40 | 80 | 35 | 50 | 40 | 60 | 40 |
| புடோல் | 60 | 80 | 60 | 80 | 60 | 80 | 80 |
| வாழைக்காய் | 50 | 80 | 45 | 50 | 40 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 120 | 80 | 100 | 120 | 120 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 95 | 120 | 110 | 120 | 100 |
| பாகற்காய் | 180 | 400 | 180 | 400 | 200 | 200 | 300 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 80 | 100 | 80 | 80 | 80 |
| கருணைக்கிழங்கு | 60 | 100 | 50 | 60 | 60 | 80 | 50 |
| பயற்றங்காய் | 160 | 200 | 150 | 200 | 140 | 120 | 200 |
| லீக்ஸ் | 120 | 100 | 95 | 120 | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 60 | 100 | 50 | 60 | 60 | 120 | 60 |
| குடமிளகாய் | 180 | 100 | 130 | 200 | 120 | 160 | 120 |
| முருங்கைக்காய் | 380 | - | 200 | 300 | 200 | 160 | 300 |
| போஞ்சி | 240 | 200 | 160 | 200 | 160 | 140 | 160 |
| கத்தரித்தம்புளை | 60 | 60 | 50 | 50 | 50 | 60 | 50 |
| கீரை - பிடி | 40 | 60 | -- | 40 | 20 | 40 | 40 |
| தேசிக்காய் | 400 | 300 | 400 | 400 | 400 | 400 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 50 | 20-40 | 50 | 35 | 30-45 | 50 |
| இராவள்ளி | 350 | 600 | -- | - | 300 | - | 300 |
| வெங்காயப்பூ | 300 | 200 | -- | -- | 280 | -- | - |
| முள்ளங்கி | 60 | 100 | 50 | 60 | 60 | 80 | 60 |
| பொன்னாங்காணி | 35 | 60 | 15 | 30 | 70 | 40 | 30 |
| வல்லாரை | 15 | 60 | 15 | 10 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | 120 | - | 80 | 60 | 80 | 60 |

எல்லா பாதைகளும் ரோமாபுரிக்கே
~ ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தாயோடு அறுசுவை போம்
## தந்தையோடு கல்வி போம்
## மகிந்தவோடு றோட்டு போம்

நல்லவர் என்போரும் பலவீனமானவர் என்போரும் ஒரே குணவியல்பு கொண்டவர்கள் அல்லர்.

நல்லவர்களிடம் வல்லமை இருக்கும். எதையும் உடனுக்குடன் நிறைவேற்றும் ஆற்றல் இருக்கும். சரி, பிழை என்பதை கண்டறிந்து நீதி, நியாயம், அறம் என்ற சிந்தனையோடு செயற்படும் விவேகம் இருக்கும்.

ஆனால் பலவீனமானவர்கள் இத்தகையவர்கள் அல்லர். இவர்களிடம் முடிவெடுக்கும் விவேகம் இருக்காது. எதையும் காலம் தாழ்த்துவர்.

தீர்மானம் எடுத்தால் அதை அமுல்படுத்துவதில் இழுத்தடிப்பர். இத்தன்மை கொண்டோர் பலவீனமுடையவர்களாகக் கருதப்படுவர்.

எனினும் சில சந்தர்ப்பங்களில் பலவீனமானவர்களை நல்லவர்கள் என்று கருதுவதும் நல்லவர்களை பலவீனமானவர்கள் என்று நினைப்பதும் வழமையில் உள்ளது.

இது மிகவும் மோசமான ஒரு நினைப்பு. நல்லவர்களைப் பலவீனமானவர்களாக நினைத்தால் அது நல்லவர்களை இல்லாமல் செய்து விடும்.

மாறாக பலவீனமானவர்கலை நல்லவர்களாக நினைத்தால் அது ஆபத்தை ஏற்படுத்தும். எனவே இனம்காணல் என்பது மிகவும் முக்கியமானது.

அண்மையில் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா அவர்களின் மறைவு இந்திய தேசம் முழுமையிலும் பெரும் துக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

எதிர்க்கட்சிகள் கூட முதல்வர் ஜெயலலிதாவுக்கு அஞ்சலி செலுத்தும் போது கலங்கினர். கலைஞர் கருணாநிதி உடல் நலக்குறைவுற்றிருந்ததால் தன் மகள் கனிமொழியை ஜெயலலிதாவுக்கு அஞ்சலி செலுத்த அனுப்பி வைத்தார்.

ஜெயலலிதாவின் உடலுக்கு அஞ்சலி செலுத்திய கனிமொழி கண்ணீர் விட்டு அழுதார். அரசியலில் மிகப்பெரும் எதிரிகள் என்றிருந்த நிலைமை மரணத்தில் மாறியதாயினும் மரணம் என்பதைக் கடந்து ஜெயலலிதாவின் ஆளுமை; அவரின் தீர்மானம் எடுக்கும் திறமை; மக்கள் அவர் மீது கொண்ட அளவு கடந்த அன்பு என எல்லாமும் சேர்ந்து, தமிழகத்தின் ஒரு பெரும் தலைவியின் இழப்பாக அந்த மரணம் மாறி விடுகிறது. இந்நிலைமைதான் எதிர்க்கட்சிகளையும் கண்ணீர் விட்டு அழ வைத்தது.

எனவே ஆட்சித் தலைவர்களாக இருப்போர் விரைவாகத் தீர்மானங்களை எடுத்து அதனை உடனடியாக அமுல்படுத்த வேண்டும்.

மக்கள் நலன்சார்ந்த பணிகளை காலம் தாழ்த்தாது - இழுத்தடிப்புச் செய்யாது நிறைவேற்ற வேண்டும். எனினும் இவற்றை இன்றைய நல்லாட்சியில் காணமுடியவில்லை.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீது தமிழ் மக்கள் கொண்டுள்ள ஆத்திரம் என்பது கொஞ்சமல்ல. இருந்தும் வீதிகளை புனரமைப்பதில் மகிந்த ராஜபக்ஷ காட்டிய கருசனையும் கொண்டிருந்த வேகமும் அந்த வீதியால் பயணிக்கும் போது மகிந்த ராஜபக்ஷவை நினைக்கவே செய்கிறது.

காபற் வீதிகளை அமைத்தமை, வடக்குக்கான புகையிரதப் பாதை நிர்மாணம் என்பன முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அதிரடி நடவடிக்கையால் நடந்து முடிந்தவை.

ஆனால் இன்றைய நல்லாட்சியில் வீதிகள் அமைக்கப்படவில்லை என்பதுடன் எத்தனையோ வீதிகள் திருத்தப்படாமலும் உள்ளன. வீதிகளை சீராக வைத்திருப்பது நாட்டின் அபிவிருத்திக்கு முக்கியமானது என்பதுடன் அந்தந்தப் பிரதேச மக்களின் வாழ்வியலிலும் வீதி என்பது மிகவும் முக்கியமானது.

இருந்தும் நல்லாட்சிக்கு வீதி புனரமைப்பதில் ஒரு சொட்டு அக்கறையும் இல்லை எனலாம். இந்நிலைமை நீடித்தால் மீண்டும் தமிழர் தாயகத்தில் வீதிகள் குன்றும் குழியுமாக மாறுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

இத்தகைய நிலைமையை ஔவையாரின் பாடல் வரிகளில் கூறுவதாயின் தாயோடு அறுசுவை போம்; தந்தையோடு கல்வி போம்... மகிந்தவோடு றோட்டு போம் எனலாம்.

# வடக்கு சபையின் நிதியொதுக்கீட்டை வரவு-செலவுத் திட்டம் எனக்கூறமுடியாது

## எதிர்க்கட்சித் தலைவர் தவராசா சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் அடுத்த வருடத்திற்கான நிதி ஒதுக்கீட்டை வரவு செலவு திட்டம் என்று கூறமுடியாது. இவ்வாறு வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சி தலைவர் சி.தவராசா தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் 69 ஆவது அமர்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த அமர்வில் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் அடுத்த ஆண்டுக்கான வரவு-செலவு திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது.

இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். வடக்கு மாகாண சபையின் வரவு-செலவு திட்டம் என்று கூறப்பட்டு அடுத்த ஆண்டுக்கான செலவீனங்கள் ஒதுக்கீடுகள் ஆராயப்படுகின்றன. ஆனால் இவ்வாறு ஒவ்வொரு துறைகளுக்குமான ஒதுக்கீடுகளை மத்திய அரசாங்கமே மேற்கொண்டு அவற்றை எமக்கு அனுப்புகின்றன. ஆம் அதற்கு அங்கீகாரம் மட்டுமே கடநத மூன்று வருடங்களாக வழங்கி வருகின்றோம்.

வரவு-செலவு திட்டம் என்பது எமது தேவைகளை பொறுத்து எமக்கான நிதி ஒதுக்கீடுகளை தேவைக்கு ஏற்ற அளவு மேற்கொள்ளுதலாகும். ஆனால் இங்கு அவ்வாறு நடைபெறவில்லை. மத்திய அரசினால் குறித்தொதுக்கப்பட்ட நிதிக்கான அனுமதியை மாத்திரமே நாம் வழங்கி வருகின்றோம். ஆகையால் இதனை வரவு-செலவு திட்டமாக கருத முடியாது. எமக்கான தேவையை நாமே பங்கிடுவதற்கு தேவையான அதிகாரம் எமக்கு உள்ளது. அதனை மேற்கொள்ள நாம் முயற்சிக்க வேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் தவராசா தெரிவித்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம்,புதிய அரசியலமைப்பில் இவ்வாறான பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும் என எதிர்பார்க்கின்றோம். புதிய அரசியலமைப்பு தொடர்பில் கருத்து பெற்ற குழுவிடமும் வடக்கு மாகாண சபை சார்பில் பரிந்துரை செய்யப்பட்ட விடயங்களில் இந்த பிரச்சினையும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது என்றார்.

மேலும் இதன்போது கருத்து தெரிவித்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் சுகிர்தன், வடக்கு மாகாண சபை இந்த வருடமும் மக்களுக்கு பெரிதாக ஒன்றையும் செய்யவில்லை. மாகாண சபை உறுப்பினர்கள் பேச்சுப்போட்டிக்கு கதைப்பவர்களாகவே சபையில் கதைத்து வருகின்றனர். இதுதான் இங்கு கண்ட மிச்சம் எனக் கூறினார். இதன் போது கருத்து தெரிவித்த உறுப்பினர்களான சர்வேஸ்வரன், சிவநேசன் ஆகியோர், தென்னிலங்கை அரசியல் வாதிகள் போல் எமது மாகாண சபையை நாமே குற்றம்சாட்டுவது போன்று பேசுவது ஏற்றுக்கொள்ள முடியாது. மேலும நல்லிணக்கம் குழம்பிவிடும் எனக் கூறியவர்கள் இப்போது இவ்வாறு கூறுகின்றமை ஆச்சரியமாக உள்ளது என தெரிவித்தனர். (இ-4)

## அலெப்போ மீதான தாக்குதல் போர்க்குற்றத்திற்கு ஒப்பானது

### ஐ.நா. கண்டனம்

கிழக்கு அலெப்போவில் இரா ணுவ நடவடிக்கைகள் நிறைவடைந்ததாக அறிவிக்கபபட்டதன் பின்னர் சிரிய அரச படைகள் அங்கு மீண்டும் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளமை போர்க்குற்றத்திற்கு ஒப்பானது என ஐ.நா. அறிவித்துள்ளது.

கிழக்கு அலெப்போவில் யுத்த நடவடிக்கை நிறைவடைந்துவிட்டதாக ரஷ்யா அறிவித்தமையை அடுத்து, அங்கிருந்து கிளர்ச்சியாளர்களும் பொது மக்களும் வெளியேறு வதற்கு அவகாசம் வழங்கப்பட்டது.

அதன்படி மோதல்களினால் பேரழிவை எதிர்நோக்கி வந்த பகுதிகளிலிருந்து பொது மக்களும், கிளர்ச்சியாளர்களும் வெளியேறுவதற்கு எதிர்பார்த்திருந்த தருணத்திலேயே இவ்வாறு மீண்டும் மோதல்கள் வெடித்துள்ளன.

சிரிய அரச படையினரின் குறித்த செயல் ஐக்கிய நாடுகள் சபையை ஆத்திரமூட்டியுள்ள நிலையிலேயே, மக்கள் அனைவரும் வெளியேற ஒன்று திரண்டுள்ள தருணத்தில் சிரிய அரச படையினரின் இவ்வாறான செயற்பாடு சர்வதேச சட்டத்தை மீறும் செயற்பாடாகும் என ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை அலுவலகத்தின் பேச்சாளர் தெரிவித்தார்.

மேலும், அரச தரப்புடனான ஒப்பந்தத்தின் அடிப்படையில் கிளர்ச்சியாளர்களும், பொது மக்களும் வெளியேறுவதற்கு பேருந்துகள் தயாராகவிருந்த நிலையில் மேற்கொள்ளப்பட்ட குறித்த தாக்குதல்களானது மிக மிகக கொடூரமானதாகும்என்றும் அவர் தெரிவித்துள்ளார்.(இ-3)



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### இறுதிச் சடங்கு முடித்தவுடன் ஏன் குளிக்கவேண்டும்?

மனிதனின் உயிர் பிரிந்த பிறகு, அந்த உடல் மண்ணில் புதைக்கப்படுகிறது அல்லது நெருப்பில் எரித்துச் சாம்பலாக்கப்படுகிறது.

உயிர் பிரிந்த உடல் அழிக்கப்படுவதற்கு முன்பாக சில சடங்குகள் (நடைமுறைகள்) செய்யப்படுகின்றன. இதற்கு இறுதிச் சடங்கு என்று கூறுவர்.

இந்து சமயத்தில் இறந்தவர்களுக்கு செய்யப்படும் ஈமச் சடங்குகள் சாதிகள் வாரியாக வித்தியாசமாக நடத்தப்படுகிறது. இச்சடங்குகள் இறப்புச் சடங்குகள், ஈமச் சடங்குகள், ஈமக் கிரியைகள் என்றும் வழங்கப்படுகின்றன.

ஈமச்சடங்கு முடிந்த பிறகு குளித்தல் பிரேத ஆத்மாக்கள் உங்களை பிடித்து விடும் என்தைத் தான் இதற்கு காரணமாக பலரும் கூறி வருகின்றனர்.

ஆனால் உண்மை என்னவென்றால், அது நுண்ணுயிர்கள் சம்பந்தப்பட்டவையாகும்.

ஒருவர் இறந்த பிறகு அவர் உடல் கொஞ்சம் கொஞ்சமாக அழுகத் தொடங்கும். ஈமச்சடங்கில் கலந்து கொள்பவர்கள் இறந்த நபருக்கு அருகில் தான் இருக்க வேண்டி வரும்.

இதனால் அழுகிக் கொண்டிருக்கும் இறந்த உடலில் இருந்து வரும் பக்றீரியாக்களால் நீங்கள் பாதிக்கப்படலாம். அதனால் தான் ஈமச்சடங்கை முடித்த கையோடு, பிற வேலைகளை செய்வதற்கு முன் குளிக்க வேண்டும்.



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### சரியாகக் கிரகிக்கப்படாத ஞானம்

ஞானத்தைச் சரியாகப் புரிந்து, கிரகித்துக் கொள்ளவில்லையெனில் அதை நாம் வேண்டாத தந்திரமான அகந்தைக்கு வழி கொள்வோம். அதைக் குணமாக்க வழியேயில்லை. அந்தத் தந்திரமான அகந்தை நம் வாழ்விற்கு ஆதாரமற்ற உதவாத பழக்கவழக்கங்களை உண்டாக்கி விடும்.

ஞானத்தைப் புரிந்து கொள்ளாவிடில் நமக்குத் தெரியாத தந்திரமான அகங்காரம், பிடிவாதம், உபதேசம் செய்யும் போக்கு, சுயநலத்திற்காக ஞானத்தை உபயோகப்படுத்திக் கொள்ளல், மேலெழுந்த வாரியாக ஒரு விடயத்தைத் தெரிந்து கொண்டு அதன் ஆழ்ந்த கருத்தைப் புரிந்து கொள்ளாமை, ஆர்வமின்மை, தனக்குத் தானே உரிமை கொள்ளல், விழிப்புணர்வு இல்லாமை, மனவருத்தம் மனதில் எரிச்சல் ஆகியவற்றிற்கு வழிகோலுகிறது.

உன்னுடைய பழக்கங்களிலிருந்து விடுபடுவது என்பது உன்னால் இயலாதபோது, அது உனக்கு மன உறுத்தலை தரும், அதனால் நீ மிகவும் வேதனைப்படும் போது அதுவே உன்னை அந்தப் பழக்கத்திலிருந்து விடுவிக்கும். உன்னிடமுள்ள குறை குற்றங்களுக்காக நீ வேதனை அடையும்போது நீ சாதகன் (ஞானம் தேடுபவன்) ஆகிறாய். அவ்வேதனை உன்னை அக்குறை குற்றங்களிலிருந்து வெளிக்கொண்டு வருகிறது.

நீ தெய்வத்திடம் அன்பு கொண்டால்தான் ஞானத்தைக் கிரகித்துக் கொள்ளமுடியும். அன்பு ஞானப்பசியைத் தூண்டும். சேவைதான் ஞானப்பயிற்சி, அன்பும் சேவையும் இல்லாவிடில் உன்னால் ஞானத்தைச் செரிக்க முடியாது.

எனவே எல்லோரும் நீங்கள் இதுவரை உலகிற்கு அன்புடன் விரும்பிச் செய்திருக்கும் சேவை என்னவென்று குறித்துக்கொள்ளுங்கள்.




### பதவி தானாகவே வரட்டும்

❖ உங்களில் சிலருக்கு, வேறு சிலரை விட உயர்ந்த படித்தரங்களை அவன் (இறைவன்) வழங்கியிருக்கிறான்.

❖ இறை நம்பிக்கை கொண்டவர்களே! பன்மடங்காகப் பெருகி வளரும் வட்டியை உண்ணாதீர்கள். இறைவனுக்கு அஞ்சுங்கள், நீங்கள் வெற்றி பெறக்கூடும்.

❖ எவரிடத்தும் எதற்காகவும் கையேந்துவதில்லை என்ற உறுதிமொழியை ஒருவர் எனக்கு அளித்தால், அவர் சுவனம் (சொர்க்கம்) செல்வதற்கான உறுதிமொழியை நான் அவருக்கு அளிக்கிறேன்.

❖ எவருக்கும் உரிமை இல்லாத நிலத்தை, எவர் உழுது பயிரிடுகிறாரோ அந்நிலத்தின் மீது அவருக்கே அதிக உரிமை உண்டு.

❖ எவனொருவன் பிறிதொருவனுக்கு வாழ்வு அளிக்கின்றானோ, அவன் எல்லா மனிதர்களுக்கும் வாழ்வு அளித்தவன் போல் ஆவான்.

❖ நெருப்பால் தண்டனை வழங்குவதற்கு நெருப்பின் அதிபதியைத் தவிர (இறைவனைத் தவிர) வேறு யாருக்கும் உரிமை கிடையாது.

❖ மனிதர்களில் சிறந்தவர்கள், பதவி தானாகவே அவர்களை வந்தடையும் வரை அதனை அறவே விரும்பாதவர்களாகவே இருப்பார்கள்.

- வேதவரிகளும் தூதர் மொழிகளும் நூலில் இருந்து

# FA கிண்ண உதைபந்தாட்டம் வதிரி டயமன்ஸ் வெற்றி



இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் நடத்தும் FA கிண்ண உதைபந்தாட்ட தொடரில் 12.12.2016 அன்று மனோகரா வி.கழக மைதானத்தில் இடம்பெற்ற போட்டியில் வதிரி டயமன்ஸ் அணியை எதிர்த்து யங்கம்பன்ஸ் அணி மோதியது.

முதல் பாதியாட்டத்தில் டயமன்ஸ் அணி வீரர் துஷிகரன் கோல் போட்டு அணியை முன்னிலைப் படுத்தினார்.

மீண்டும் டயமன்ஸ் அணிக்கு தண்ட உதைப்பு மூலமான கோல் வாய்ப்பு அதனை கோலாக மாற்றினார். உஷானந்தன் முதல் பாதியாட்டம் 02:00 என்ற அடிப்படையில் நிறைவுற்றது. இரண்டாவது பாதியாட்டத்தில் யங்கம்பன்ஸ் அணி ஆட்டத்தை மாற்ற போராடிய யங்கம்பன்ஸ் அணி சார்பில் பிரகாஷ் கோல் போட்டு அணியை சரிவிலிருந்து மீண்டெடுத்தார். ஆட்டத்தை சமப்படுத்தும் சந்தர்ப்பங்கள் இருந்தும் வாய்ப்பினை தவறவிட்டது யங்கம்பன்ஸ் அணி. இறுதியாட்ட நேர முடிவில் 02:01 என்ற ரீதியில் டயமன்ஸ் வெற்றியீட்டி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. (கு)

## ஹென்றிஸ்-கில்லறி சமநிலையில் முடிவு

மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடக்கின் சுப்பர்கிங் 2016 உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் ஹென்றிஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மன்னார் கில்லறி விளையாட்டுக்கழகம் மோதியது.

மிகவும் பரபரப்பாக நடைபெற்ற போட்டி கோல்கள் எதுவும் பெறாத நிலையில் சமநிலையில் முடிவுற்றது.

வடக்கின் இரு பலமான அணிகள் மோதிய இப் போட்டி ரசிகர்களுக்கு விருந்தாக அமைந்தது குறிப்பிடத்தக்கது. (கு)

# மணற்காடு சென்.அன்ரனிஸ் வி.க. சுப்பர் 8 ஆட்டத்திற்கு தெரிவாகியது

அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ் .மாவட்ட ரீதியிலான 11 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி 13.12.2016 செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் மணற்காடு சென்.அன்ரனிஸ் வி.கழகத்தை எதிர்த்து மாதகல் சென்.தோமஸ் வி.கழகம் மோதியது.

ஆட்டம் ஆரம்பித்த நேரம் முதலே சென்.தோமஸ் அணியினர் தமது ஆதிக்கத்தை செலுத்த தொடங்கினர். எனினும் இவர்கள் தமக்கு கிடைத்த கோல் சந்தர்ப்பங்களை தவறவிட பதினைந்தாவது நிமிடத்தில் ஆட்டம் விறுவிறுப்படைய தொடங்கியது. தொடர்ந்து அன்ரனிஸ் அணியினர் கோல்கள் போட எத்தணித்த போதும் அவை தவறவிடப்பட்டன. ஆட்டத்தின் பாதிநேரம் வரை இரு அணிகளும் எந்தவித கோல்களையும் போடவில்லை.

இரண்டாவது பாதியாட்டத்திலும்





ஆதிக்கத்தைசெலுத்தியசென்.தோமஸ் அணியினர் 47 ஆவது நிமிடத்தில் ஒரு கோலினை அடித்தனர். இதனை றோகிபிரகான் தமது அணி சார்பில் பதிவு செய்தார். இதனை தொடர்ந்து கடுமையாக போராடிய அன்ரனிஸ் அணியினர் 49 ஆவது நிமிடத்தில் பதிலுக்கு ஒரு கோலினை போட்டனர். இக் கோலினை அன்ரனிஸ் சார்பில் றெஜிநோல்ட் பதிவு செய்தார். 1-1 என ஆட்டம் தொடர்ந்து செல்ல 50 ஆவது நிமிடத்தில் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. இறுதியில் தண்டஉதை வழங்கப்பட்டது. இதில் 4-1 என்ற கோல்கணக்கில் சென்.அன்ரனிஸ் அணியினர் வெற்றி பெற்று சுப்பர் 8 ஆட்டத்திற்கு தகுதி பெற்றனர். (கு)

## இன்றைய போட்டி

அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ். மாவட்ட ரீதியிலான 11 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் மூன்றாம் சுற்று ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும் போட்டியில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (கு)

# மன்னார் லீக் கழகங்களுக்கிடையிலான FA கிண்ண உதைபந்தாட்ட சுற்றுத்தொடர்

## யுனைற்றட் சம்பியன்





இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் மன்னார் லீக்கில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான FA கிண்ணத்திற்கான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டியானது கடந்த செவ்வாய் மாலை 4.30 மணிக்கு மன்னார் லீக்கின் ஏற்பாட்டில் தாழ்வுபாடு ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை மைதானத்தில் கோலாகலமாக நடைபெற்றது. கடந்த 3 வாரங்களாக மன்னார் உதைபந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட 27 கழகங்கள் விலகல் முறையிலான போட்டியில் ஆடி இறுதிப் போட்டிக்கு மன்னார் வங்காலை சென் ஆன்ஸ் விளையாட்டுக்கழகமும் ஜோசவ்வாஸ்நகர் யுனைற்றட் விளையாட்டுக்கழகமும் தெரிவாகின.

இவ்விறுதிப்போட்டியில் இரு அணிகளும் தமது பலப்பரீட்சையைக்காட்ட முயன்றும் போட்டி தொடங்கியதிலிருந்து முதல் பாதி வரை ஆட்டம் வங்காலை சென் ஆன்ஸ் விளையாட்டுக்கழகத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது. வங்காலை சென் ஆன்ஸ் விளையாட்டுக்கழகம் 2-1 என்ற கோல் கணக்கில் இடைவேளையின் போது காணப்பட்டது. 2ஆம் பாதி ஆட்டம் தொடங்கியது முதல் ஜோசவ்வாஸ்நகர் யுனைற்றட் விளையாட்டுக்கழகம் ஆதிக்கம் செலுத்த தொடங்க போட்டி விறுவிறுப்பானது.

ஜோசவ்வாஸ்நகர் யுனைற்றட் விளையாட்டுக்கழகம் தொடர்ந்து 2 கோல்களைப்போட 3-2 என்று காணப்பட அடுத்த நிமிடத்தில் வங்காலை சென் ஆன்ஸ் வி.க தனது 3ஆவது கோலைப்போட்டு ஆட்ட முடிவின்போது 3-3 என சமனிலையில் காணப்பட்டது.

தொடர்ந்து தண்ட உதை மூலம் வெற்றி, தோல்வி தீர்மானிக்கப்பட ஜோசவ்வாஸ்நகர் யுனைற்றட் விளையாட்டுக்கழகம் 3-0 என்ற கோல் கணக்கில் சம்பியனாகியது.

இதன் மூலம் FA கிண்ணத்திற்கான அடுத்த கட்ட போட்டிக்கு ஜோசவ்வாஸ்நகர் யுனைற்றட் விளையாட்டுக்கழகம் தகுதி பெற்றுள்ளது.

ஏற்கனவே மன்னார் லீக்கிலிருந்து கடந்த வருட அடைவுக்கிணங்க மன்னார் சாவற்கட்டு கில்லறி விளையாட்டுக்கழகம் முதல் 8 அணிகளுக்குள்ளும் பனங்கட்டுக்கொட்டு சென் ஜோசப் விளையாட்டுக்கழகம் முதல் 32 அணிகளுக்குள்ளும் நிலைத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. முதலாம் இரண்டாம் இடங்களைப் பெற்ற அணிகளுக்கு வெற்றிக்கிண்ணங்களும் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில மன்னார் உதைபந்தாட்ட லீக் தலைவர் டேவிட்சன் ஜெறாட், செயலாளர் ஞானராஜ், பொருளாளர் கோலடன் டெனி, உப தலைவர்களான பிறேம்குமார், சுகிர்தன், டிகோணி, உப செயலாளர் சுவேந்திரன், உபபொருளாளர் றொணி மற்றும் ஆயிரக்கணக்கான உதைபந்தாட்ட இரசிகர்கள் கலந்து சிறப்பித்தனர். (க)

## தேசிய ரீதியிலான கராத்தே சென்.ஜோன்ஸ் மாணவர்கள் சாதனை



இலங்கை கராத்தே சம்மேளனத்தில் நடத்தப்பட்ட 2016 ஆம் ஆண்டுக்கான தேசிய ரீதியிலான கராத்தே சுற்றுப்போட்டி அண்மையில் கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

இதில்பங்குபற்றியசென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவர்கள் தங்கம், வெள்ளி, வெண்கலம் ஆகிய பதக்கங்களைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

வெற்றி பெற்ற மாணவர்களுடன் பயிற்சி ஆசிரியர் சென்சே விஜயராஜ் நிற்பதை படத்தில் காணலாம். (கு)

# நாட்டின் சொத்துக்களை விற்பதற்கு அரசாங்கத்தை அனுமதிக்க முடியாது!

## எதிர்ப்பை வெளியிடுகிறது ஜே.வி.பி

(கொழும்பு)

நாட்டின் பல பாகங்களிலும் அரசிற்கு எதிராக ஆர்ப்பாட்டங்களும் எதிர்ப்புக்களும் தீவிரமடைந்து வரும் நிலையில் நாட்டின் சொத்துக்களையும் வளங்களையும் விற்பதற்கு எதிராக ஜே.வி.பியும் போர்க்கொடி தூக்கியுள்ளது.

தனியாருக்கும், வெளிநாட்டவருக்கும் நாட்டின் சொத்துக்களையும் வளங்களையும் விற்பனை செய்யும் முயற்சியில் ஜனாதிபதி, பிரதமர் தலைமையிலான அரசு தீவிரம் காட்டி வருவதாக எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான அநுரகுமார திஸாநாயக்க நேற்று குற்றம்சுமத்தினார்.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள ஜே.வி.பி தலைமையகத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் வளங்களை விற்று பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியுமென இப்போது மாத்திரமன்றி 1988 களிலும் கருத்தொன்று நிலவி வந்தது. அப்போதும் இதேபோன்று அரச வளங்களை விற்க முயற்சித்தபோது மக்களின் எதிர்ப்புக்கள் வந்தமையால் மக்கள் மயப்படுத்தல் என்று விற்றனர்.

இதேபோன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசிலும் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

அந்தவகையில், அரசின் இந்த விற்பனைப் பட்டியலில் பிரதானமாக அம்பாந்தோட்டை துறைமுகம் காணப்படுகின்றது.

குறித்த துறைமுகத்தை கப்பல்களுக்கு எரிபொருள் மற்றும் உணவுகளை விநியோகிக்கும் துறைமுகமாக அமைக்கும் வகையிலேயே ஆரம்பத்தில் யோசனைகள் முன்வைக்கப்பட்டிருந்தன. ஆனால், ராஜபக்ஷ ஆட்சியில் பொருட்களை ஏற்றி இறக்கும் இடமாக அது மாறியிருந்தது.

இந்நிலையில் அதற்கு கப்பல் வருவதில்லை எனவும் மற்றும் கடன் சுமை காணபபடுவதாகவும் தெரிவித்து அதனை விற்க அரசினால் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. ஆனால் இதனை விற்காது சேவைகள் வழங்கும் நிலையமாக மாற்றினால் தொடர்ந்தும் நடத்திச் செல்லலாம்.

அதேபோல், கற்பிட்டி பகுதியில் காணப்படும் தீவுகளை விற்கவும் முயற்சிக்கப்படுகின்றன. ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் அங்குள்ள 14 தீவுகளை விற்க முயற்சிக்கப்பட்டது.

ஆனால் இறுதியில் இரண்டு தீவுகளை மாத்திரமே விற்க முடிந்தது. தற்போதைய அரசோ சுற்றுலாத்துறை அபிவிருத்தி என்ற போர்வையில் ஏனைய தீவுகளையும் விற்க முயற்சிக்கின்றது. இதன்மூலம் நாட்டுக்கு சொந்தமான தீவுகளை விற்கும் நிலைக்கு இந்த அரசு தள்ளப்பட்டுள்ளது உறுதியாகியுள்ளது.

அதற்கு அடுத்தப்படியாக உலகத்தில் சிறந்த துறைமுகங்களில் ஒன்றான கொழும்பு துறைமுகத்தையும் விற்க திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இங்குள்ள இறங்கு துறைகளை தனியார் நிறுவனங்களுக்கு விற்க யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இது போன்று எமது நாட்டின் பல்வேறு வளங்கள் தனியாருக்கு விற்கப்படவுள்ளன.

அரசின் இந்த நடவடிக்கையை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். எமக்கு மட்டுமன்றி எமது எதிர்கால சந்ததியினருக்கும் சொந்தமான இவற்றை விற்கும் அரசின் நடவடிக்கைக்கு நாம் மக்கள் போராட்டம் மூலம் தகுந்த பதில் வழங்குவோம். இதற்கான நடவடிக்கைகள் அடுத்த ஜனவரி தொடக்கம் சூடுபிடிக்கும் என அநுரகுமார தெரிவித்தார். (செ-11)

## நாட்டில்...

கொழும்பு பத்தரமுல்லை பிரதேசத்திலுள்ள முன்னாள் ஜனாதிபதியின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற சந்திப்பொன்றில் கலந்துகொண்ட நிலையிலேயே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தேசிய அரசாங்கத்தின் மீது இந்தக் குற்றச்சாட்டுக்களை சுமத்தியிருக்கின்றார்.

கூட்டு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களின் முன்னாள் தலைவர்கள் ஆகியோர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பத்தரமுல்லை நெலும்பொக்கன மாவத்தையிலுள்ள அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பில் கலந்துகொண்டிருந்தனர்.

இந்த சந்திப்பின் போது உரையாற்றிய மகிந்த ராஜபக்ஷ, தற்போதைய ஆட்சியில் நாட்டில் சட்டத்தின் ஆட்சி முழுமையாக சீர்குலைக்கப்பட்டு காட்டாட்சி தலைதூக்கியுள்ளதாகவும் குற்றம்சாட்டியுள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நாடு எங்கு சென்று கொண்டிருக்கின்றது என்பதை விழித்திருந்து அவதானித்துக் கொண்டிருக்கவேண்டிய ஒரு யுகம் உருவாகி இருக்கின்றது. தற்போது நாடு மிகவும் நெருக்கடியான நிலையில் பயணித்துக் கொண்டிருக்கின்றது. பொலிஸ் ஆட்சியினை நடைமுறைப்படுத்தி அனைவரையும் கட்டுப்படுத்தும் யுகமெனக் கூறினால் அதில் பிழையில்லை என்று நினைக்கின்றேன்.

ஜனநாயகம் பற்றி பேசுகின்றனர். தேர்தலை ஒத்திவைக்கின்றனர். ஊழல் நடைபெற்றதாக எங்கள் மீது குற்றம்சாட்டிக் கொண்டு அவர்கள் ஊழலில் ஈடுபடுகின்றனர். பொருளாதாரம் மிக மோசமாக பாதிப்படைந்துள்ளது. வேலையில்லா பிரச்சினை அதிகரித்துள்ளது. பணியில் உள்ளவர்களை வீட்டிற்கு அனுப்புகின்றனர். தொழிலாளர்களின் உரிமைகளை இல்லாமல் செய்கின்றனர். துறைமுக ஊழியர்களின் பிரச்சினையும் அவ்வாறுதான் என்றார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட பணியாளர்கள் மீது கடற்படையினரைக் கொண்டு தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவத்திற்கு கடும் கண்டனம் வெளியிட்ட மகிந்த ராஜபக்ஷ அவசரகால சட்டம் இல்லா நிலையில் எவ்வாறு கடற்படையினரை அனுப்பினார்கள் என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், போராட்டம் ஒன்றைகலைக்க கடற்படையை அனுப்பிய முதல் சந்தர்ப்பம் இதுவே. இதற்கு முன்னர் இவ்வாறான நிலைமைகளில் பொலிஸாரே சென்றனர். ஒரு புறம் நீதிமன்ற ஆணையை பெற்றுக்கொண்டு மறுபுறம் கடற்படையை களமிறக்குகின்றனர். தற்போது யுத்தம் இல்லை. அச்சுறுத்தல் இல்லை ஆகவே இராணுவ முகாம்களை அகற்றுவதாக தெரிவிக்கின்றனர்.

எனினும் யாழ்ப்பாணத்தில் என்ன நடக்கின்றது? பொலிஸார் மீது தாக்குதல் நடத்தும்போது, கடற்படையைச் சேர்ந்த இருவரை தடுத்து வைத்திருந்தபோது இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. வடக்கில் நடந்த சம்பவங்கள் உங்களுக்குத் தெரியும். அந்த சந்தர்ப்பங்களில் கடற்படையை அரசாங்கம் அனுப்பவில்லை. ஆனால் தென் பகுதியில் தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபடும் போது குறித்த போராட்டத்தை ஒடுக்க கடற்படையினரை அனுப்பிவைக்கின்றனர். கடற்படையை அங்கு அனுப்பியது யார்?. நாட்டில் தற்போது அவசரகால சட்டம் இல்லை. ஆகவே ஜனாதிபதியின் அனுமதியில்லாமல் கடற்படையை அங்கு அனுப்ப முடியாது. எனினும் அதனையும் மீறி அரசாங்கம் அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு கடற்படையினரை அனுப்பி தொழிலாளர்களின் போராட்டத்தை நசுக்கியுள்ளது எனச் சாடினார்.

நாட்டின் சொத்துக்களை தனியாருக்கும், வெளிநாடுகளுக்கும் விற்கும் நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டுள்ள அரசாங்கம் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 15 ஆயிரம் ஏக்கர் காணிகளை சீன நிறுவனமொன்றுக்கு வழங்கவுள்ளதாகவும் மகிந்த ராஜபக்ஷ மேலும் குற்றம்சாட்டினார்.

நாட்டின் துறைமுகத்தை மட்டுமல்லாது காணிகளையும் வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யும் நிலை தற்போது ஏற்பட்டு ள்ளது. அம்பாந்தோட்டையை சீனாவுக்கு கொடுப்பதற்கு தீர்மானித்துள்ள இவர்கள் திருகோணமலை அல்லது காங்கேசன்துறையை யாருக்கு கொடுப்பார்களோ எனத் தெரியவில்லை எனவும் மகிந்த ராஜபக்ஷ தனது உரையில் குறிப்பிட்டார். (செ-11)

## காணிப் பிரச்சினை...

16 ஆண்டுகளாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுவரும் காணி பிரச்சினை தொடர்பான வழக்கிற்கு விரைவில் தீர்வை வழங்குமாறு கோரிக்கையினை முன்வைத்து குடும்ப பெண் ஒருவர் நேற்றுமுன்தினம் யாழ். பொது நூலகம் முன்னால் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார்.

இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பெண் கருத்துரைக்கையில், எமது காணியானது நாச்சிமார் கோவிலடி பெரியபுலம் பாடசாலைக்கு அண்மையில் உள்ளது என்றும், அங்கே மிக நீண்ட காலமாக தாம் வருகிறோம். தற்போது தமது காணிக்கு அருகில் உள்ள காணியின் உரிமையாளர் வெளிநாட்டில் இருந்து வந்து அங்கு வசித்து வரும் நிலையில் எமது காணியினையும் சேர்த்து தனது காணி என்று கூறி தங்களை அங்கிருந்து வெளியேறுமாறு கோரிவருகின்றார்.

எமது காணிக்கும் சேர்த்து பொய்யான உறுதிப்பத்திரம் ஒன்றினையும் அவர் தயாரித்து வைத்துக் கொண்டு எங்களை அங்கிருந்து வெளியேறுமாறு பலவந்தப்படுத்துகிறார்.

இப் பிரச்சினை தொடர்பாக கடந்த 2001 ஆம் ஆண்டு யாழ்.மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இந் நிலையில் அவ்வழக்கானது கடந்த 16 வருடாங்களாக நடைபெற்று வருகின்றது. இந்நிலையில் இவ்வழக்கின் தீர்ப்பினை விரைவுபடுத்துமாறு கோரியேதான் போராட்டத்தில் ஈடுபடுவதாக அப் பெண் தெரிவித்தார்.

போராட்டத்தில் ஈடுபட்டிருந்த அந்த பெண் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கவனத்தினை ஈர்க்கும் முகமாக அவருடைய புகைப்படத்தினை கைகளில் தாங்கியவாறும், தமது கோரிக்கைகளை எழுதிய பதாகையினை கைகளில் தாங்கியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார். இவருடைய போராட்டம் தொடர்பில் அமைச்சு மட்டங்களினால் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபருக்கு தகவல் கொடுக்கப்பட்டு, அது தொடர்பாக ஆராயுமாறு பணிப்புரை விடுக்கப்பட்டது.

இதன்படி போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் நேற்று நண்பகல் வேளை யாழ்.மாவட்டச் செயலகத்திற்கு அழைக்கப்பட்டு, அவர்களுடைய காணி பிணக்கு தொடர்பாக ஆராயப்பட்டது. குறித்த காணி பிணக்கானது தனியார் பிரச்சினையாக உள்ளதும் அது தொடர்பில் நீதிமன்ற வழக்கு நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதையும் மாவட்டச் செயலகம் கவனத்தில் கொண்டது.

தொடர்ந்து குறித்த காணி பிணக்குத் தொடர்பாக நீதிமன்ற நடவடிக்கைகள் தலையிடாது தவிர்த்து அரசாங்கத்தினால் தீர்வு காணக்கூடிய வழிகள் எதும் உள்ளனவா என்று ஆராயுமாறு யாழ்.அரச அதிபர் என்.வேதநாயகன் நல்லூர் பிரதேச செயலர் ஆழ்வார்பிள்ளை சிறிக்கு அறிவிறுத்தியுள்ளார்.(செ-4)

## குறிப்பிடத்தக்க...

பதிவொன்றின் ஊடாக அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்க செயலாளர் நிஷா பிஸ்வால் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

கடந்த 13ஆம் திகதி நடைபெற்ற மிலேனிய சவால்களுக்கான ஒத்துழைப்பு அமைப்பின் பணிப்பாளர் சபையின் சந்திப்பில் இலங்கை, புர்கினோ ஃபசோ மற்றும் ரியூனியா ஆகிய நாடுகள், இந்த ஊக்குவிப்பு திட்டத்திற்கென தெரிவுசெய்யப்பட்டிருந்தன.

இலங்கை மக்களுடனான ஆறு தசாப்த அபிவிருத்தி பங்களிப்புக்கு பாரிய உந்துசக்தியாக, மிலேனிய சவால்களுக்கான ஒத்துழைப்பு அமைப்பு குறிப்பிடத்தக்க ஆதரவை வழங்கியுள்ளதாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அதுல் கேஷப் தெரிவித்துள்ளார்.

மிலேனிய சவால்களுக்கான ஒத்துழைபபு அமைப்பின் உதவியை பெறுகின்ற நாடாக இலங்கை தெரிவுசெய்யப்பட்டதன் அடிப்படையில், ஜனநாயக ஆட்சி, மக்களுக்கான முதலீடு மற்றும் பொருளாதார சுதந்திரம் ஆகியவற்றுக்கான அர்ப்பணிப்பை நிரூபிக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

நல்லாட்சி, ஊழலுக்கு எதிராக போராடுதல், பெண்களின் உரிமைகளுக்கு மதிப்பளித்தல், சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்தல், வறுமைக்கு எதிராக போராடும் திறனை அதிகப்படுத்தல், மக்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தல் போன்ற விடயங்களில் சிறந்த தரங்களை அடைவதே அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுடனான ஒத்துழைப்பின் நோக்கம் என மிலேனிய சவால்களுக்கான ஒத்துழைப்பு அமைப்பின் தலைமை நிறைவேற்று அதிகாரி டனா ஜே ஹைறடி சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனநாயக உரிமைகளை நிலைநிறுத்துவதில் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளமை உள்ளிட்ட தொடர்ச்சியான மேம்பாடுகளை காண்பித்தன் அடிப்படையில் மிலேனிய சவால்களுக்கான ஒத்துழைப்பு அமைப்பின் உதவித் திட்டத்திற்கென இலங்கை தேர்வு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## மருத்துவமனையில் கருணாநிதி அனுமதி



(சென்னை)

திமுக தலைவர் கருணாநிதி உடல்நலக் குறைவு காரணமாக மீண்டும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சென்னை ஆழ்வார்ப்பேட்டையில் ஏற்கெனவே சிகிச்சை பெற்று வந்த இவர், காவேரி மருத்துவமனையில் நேற்று அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் 25ஆம் திகதி ஒவ்வாமை காரணமாக கருணாநிதி பாதிக்கப்பட்டு இருந்தார். இதனால் தொண்டர்கள் அவரை பார்க்க வர வேண்டாம் என்று திமுக தரப்பில் அறிவுறுத்தப்பட்டு இருந்தது.

அதனை தொடர்ந்து கடந்த டிசம்பர் ஒன்றாம் திகதி கருணாநிதி காவிரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவர் எடுத்துக் கொண்ட மருந்துகளின் ஒவ்வாமை காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

அதனையடுத்து, ஒரு வார சிகிச்சைக்கு பின்னர் கடந்த டிசம்பர் 7ஆம் திகதி கருணாநிதி வீடு திரும்பி இருந்தார். பின்னர் வீட்டில் இருந்து அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில், சளித் தொல்லை காரணமாக மீண்டும் கருணாநிதி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (செ-11)

## அரசியலமைப்பு...

யாப்புடன் சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பிலான தீர்ப்புக்களை உயர் நீதிமன்றமே வழங்கி வந்தது.

இந்த புதிய நீதிமன்ற உருவாக்கத்தின் பின்னர், உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்குச் சென்ற அரசியலமைப்பு தொடர்பிலான சகல வழக்குகளும் செல்லாது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அரசியலமைப்பு நீதிமன்றம் என இந்த நீதிமன்றத்துக்கு பெயரிடப்பட்டுள்ளதாகவும், இதற்கான நீதிபதிகள் அரசியலமைப்புச் சபையின் பரிந்துரையின் பேரில், ஜனாதிபதி நியமிப்பார் எனவும் அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-10)

## தோல்வியடைந்து...

லில் பிரதமர் இந்த விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் கொள்கைகள் வெற்றி அளித்துள்ளதை மக்கள் உணர்ந்துள்ளதாக குறிப்பிட்டுள்ள பிரதமர் ரணில் விக்ரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தோல்வி அடைந்தவராக மாறியுள்ளதாக கூறியுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ மீண்டும் ஆட்சிக்கு வருவதற்கான சாத்தியங்கள் குறித்து கரிசனை கொண்டுள்ளீர்களா என த ஹிந்து பத்திரிகை சார்பில் பிரதமரிடம் கேள்வி எழுப்பட்டுள்ளது.

இதற்கு பதில் அளித்த பிரதமர் ரணில் விக்ரமசிங்க, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கு வெளியே, மகிந்த ராஜபக்ஷ பலமிக்க ஒருவராக செயற்பட முடியாது என குறிப்பிட்டார்.

காலம் மாற்றமடைந்து வருவதால் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அடிப்படை ஆதரவை இழப்பார் எனவும் கட்சி அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையை எடுக்கலாம் எனவும் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் நாட்டின் இளம் வாக்காளர்கள், மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவு வழங்கவில்லை எனவும் ரணில் விக்ரமசிங்க கூறியுள்ளார்.

மற்றுமொரு மாற்றத்தை மக்கள் எதிர்பார்ப்பார்கள் ஆயின் புதிதான ஒரு விடயம் குறித்தே அவர்கள் கவனம் செலுத்துவார்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் இரண்டு பிரதான கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்படுவதை மக்கள் விரும்புவதால், புதிய மாற்றமொன்றை அவர்கள் எதிர்பார்க்க மாட்டார்கள் என ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டார்.

சிறந்த விடயங்களையே மக்கள் தற்போது எதிர்பார்ப்பதாக குறிப்பிட்ட பிரதமர், அது குறித்தே அரசாங்கம் இப்போது கவனம் செலுத்தியுள்ளதாகவும் கூறியுள்ளார்.

சிறந்த பெறுபேறுகள் கிடைப்பது உறுப்புடுத்தப்படுமாயின் முக்கிய முரண்பாடான பிரச்சினை இல்லாது போய்விடும் எனவும் அதனை செய்வதற்கான திறன் அரசாங்கத்திலுள்ள அரசியல் கட்சிகளுக்கு உள்ளதாகவும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை இலங்கை மத்திய வங்கியின் திறைசேரி முறிகள் விநியோக விவகாரம், இனி தன் கையில் இல்லாத ஒருவிடயம் என பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். இந்த விடயம் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் தாம் சட்டமா அதிபரிடம் கையளித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மத்திய வங்கியில் இடம்பெற்ற திறைசேரி முறிகள் விநியோக மோசடி குறித்து தாமே முதலில் உள்ளக விசாரணையை ஆரம்பித்ததாக த ஹிந்து பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

குறித்த விசாரணை தொடர்பான அறிக்கையை தாம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளதாக தெரிவித்த பிரதமர், மத்திய வங்கியின் முறிகள் விநியோக மோசடி குறித்து கோப்குழுவும் விசாரணை மேற்கொள்வதற்கு தாம் அனுமதி வழங்கியதாக குறிப்பிட்டார்.

கோப் குழுவின் தலைவரான மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்திக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்கியதாக குறிப்பிட்ட பிரதமர், தற்போதும் அவருக்கு ஒத்துழைப்பு வழங்கிவருவதாக கூறியுள்ளார்.

மேலும் கோப் குழு, தமது பரிந்துரைகளை சமர்ப்பித்துள்ளதாகவும் அவை ஒருமனதானது எனவும் மேலதிக விசாரணைகளுக்காக அவை சமர்ப்பிக்கப்படும் பிரதமர் குறிப்பிட்டார். (செ-11)

## கே.பியை கைது...

க்கப்பட்ட போது கொழும்பு மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி விஜித் மழல்கொட இதனை தெரிவித்தார்.

ஆதாரங்கள் முன்வைக்கப்பட்டால் மாத்திரமே ஒரு நபரை கைது செய்யுமாறு உத்தரவு பிறப்பிக்க முடியுமென்று கூறிய நீதிபதி, ஊடகங்களில் வெளியாகும் செய்திகளை அடிப்படையாகக் கொண்டு கைது உத்தரவுகளைப் பிறப்பிக்க முடியாதென்று அறிவித்தார்.

இந்த மனு அழைக்கப்பட்ட போது மனுதாரர் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் கருத்து தெரிவிக்கையில், முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி கொலை சம்பந்தமாக குமரன் பத்மநாதனை கைது செய்யுமாறு இந்திய நீதிமன்றமொன்று உத்தரவு பிறப்பித்துள்ள போதிலும் அவரை கைது செய்து நாடு கடத்த இலங்கை அரசாங்கம் மறுத்து வருவதாக குற்றம்சாட்டினார்.

இந்த குற்றச்சாட்டை நிராகரித்த அரசு தரப்பு வழக்கறிஞர், இந்திய அரசாங்கத்திடமிருந்து முறையான வேண்டுகோளொன்று முன்வைக்கப்பட்டால் மாத்திரமே அதனை மேற்கொள்ள முடியுமென்று கூறினார்.

குமரன் பத்மநாதன் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்ற காரணத்தினால் இந்த மனு முன்கொண்டு விசாரணை செய்யும் அவசியம் ஏற்படவில்லையென அரசு தரப்பு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இதன்படி குமரன் பத்மநாதன் சம்பந்தமாக விசாரணைகளை மேற்கொள்ள பொலிஸாருக்கு மேலும் கால அவகாசம் வழங்கிய நீதிபதி, மனு மீதான விசாரணைகளை எதிர்வரும் மார்ச் மாதம் 17-ஆம் திகதி வரை ஒத்திவைப்பு தாக உத்தரவிட்டார். (செ-11)

## சிதம்பர தரிசன...

2017-ம் ஆண்டு ஜனவரி மாதம் 13-ம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

மார்கழித் திருவெம்பாவை காலத்தில் ஈழத்து சைவத் தமிழ் மக்கள் சிதம்பரம் சென்று தரிசனம் செய்யும் பொருட்டு கப்பல் சேவையை ஏற்பாடு செய்து தருமாறு ஈழத்து சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம் அவர்கள் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய இவ்ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கப்பலில் செல்வதாயின் உரிய விசா அனுமதிகள் பெறப்படவேண்டும் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## இளம் குடும்பஸ்...

என்பவரே உயிரிழந்தவராவார்.

குடும்பத் தகராறு காரணமாக குறித்த நபருடைய மனைவி அவரை பிரிந்து வேறு வீட்டுக்கு சென்றுள்ளார்.

அந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு 4 பிள்ளைகளும் வீட்டில் இருந்த சமயம் இவர் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக மரண விசாரணையின் போது உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும் இறந்த நபருடைய உடல்களில் ஆங்காங்கே காயங்கள் காணப்படுவதாகவும், குறித்த மரணம் தொடர்பில் விசாரணை செய்ய வேண்டும் என கோரி 30க்கும் மேற்பட்ட அயலவர்கள் ஒன்றிணைந்து கடிதம் ஒன்றை திடீர் மரண விசாரணை அதிகாரியிடம் கொடுத்துள்ளனர்.

இது தொடர்பிலும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில், மரண விசாரணையை நல்லூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி மு.உதயசிறி முன்னெடுத்துள்ளார். சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (செ-9-30)

## சட்ட வைத்திய...

ரவிராஜின் கொலை தொடர்பான விசேட ஜூரி சபை அமர்வு, கொழும்பு மேல் நீதிமன்ற பிரதம நீதிபதி மணிலால் வைத்தியதிலக்க முன்னிலையில் நேற்று நடைபெற்றது.

பொலிஸ் சார்ஜன் லக்ஸ்மன் லொகுவெல்லவின் சடலம் தொடர்பில் பிரேதப் பரிசோதனை நடத்திய உதவி சட்ட வைத்திய அதிகாரி நேற்று மன்றில் ஆஜராகி சாட்சியமளித்திருந்தார்.

இதன்போது, பொலிஸ் சார்ஜன் லக்ஸ்மன் லொகுவெல்லவின் சடலத்தில் பத்து காயங்கள் காணப்பட்டதாகவும் அவற்றில் எட்டு துப்பாக்கிச் சூட்டு காயங்கள் எனவும் உதவி சட்ட வைத்திய அதிகாரி எஸ்.ஆர்.பி.சமரநாயக்க சாட்சியமளித்துள்ளார்.

இந்த துப்பாக்கி சூட்டுத் தாக்குதல் 10 மீற்றர் அருகிலிருந்து மேற்கொள்ளப்பட்டிருக்கக்கூடும் என தாம் அனுமானிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

உதவி சட்ட வைத்திய அதிகாரியின் சாட்சியத்தை அடுத்து, பிரதிவாதிகள் தரப்பு சட்டத்தரணிகள் அதனை ஏற்றுக்கொண்டதுடன், இந்த சாட்சியம் தொடர்பில் மீள விசாரணைகளை நடத்துவதற்கான அவசியம் இல்லை எனவும் அறிவித்துள்ளனர்.

இருதரப்பு விசாரணைகளையும் அடுத்து இந்த வழக்கு விசாரணையை நீதிபதி இன்றைய தினத்திற்கு ஒத்தி வைத்தார். (செ-11)

## மலேசியாவில் ஜனாதிபதி மைத்...



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நேற்று மலேசிய நேரப்படி பிற்பகல் 2.10 மணிக்கு கோலாலம்பூர் சர்வதேச விமான நிலையத்தை சென்றடைந்தார்.

மலேசிய அரசாங்கத்தின் சார்பில் அந்நாட்டின் மனிதவள அபிவிருத்தி அமைச்சர் டத்தோ ஸ்ரீ ரிச்சாட் றோயிற் அனக் ஜேம் உள்ளிட்ட பிரதிநிதிகள் ஜனாதிபதியை வரவேற்றனர். இராணுவ அணிவகுப்பு மரியாதையுடன் இந்த வரவேற்பு இடம்பெற்றது.

இரண்டு நாடுகளினதும் நீண்ட கால நட்புறவை வெளிப்படுத்தும் வகையில் விமான நிலைய வளாகத்தில் இரண்டு நாடுகளினதும் தேசிய கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன.

இதேவேளை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் மலேசிய மனிதவள அபிவிருத்தி அமைச்சருக்குமிடையே சுமுகமான சந்திப்பொன்றும் விமான நிலைய வளாகத்தில் இடம்பெற்றது. ஜனாதிபதியின் இவ்விஜயத்தின் நோக்கம் இலங்கைக்கும் மலேசியாவுக்குமிடையிலான வர்த்தக உறவுகளை மேம்படுத்தி புதிய உறவுகளைக் கட்டியெழுப்புவதாகும்.

மலேசியாவுக்கான தனது மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தின்போது ஜனாதிபதி, மலேசியாவின் மன்னர் சுல்தான் முஹம்மத் மற்றும் பிரதமர் நஜிப்பின் அப்துல ரஸ்ஸாக் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடவுள்ளார். (இ-10)


ஆங்கில வகுப்பு

தரம் 02, 03, 04, 05, 06, 07, 08, 09, 10 ஆம் O/L, A/L மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தொழில் புரிபவர்களுக்குமான English Spoken with Grammar வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு : 0767070069 M.Suren (6943)

அனைத்து நாடுகளுக்குமான விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு UK-550/=Kg

DELIVERY IN 3 - 5 DAYS

தொடர்புகளுக்கு: 0768226240 V2 TRAVELS

யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

பண்டிகைக்காலத்தில் உங்கள் உறவுகளுக்கு பெறுமதியான பொருட்களையும் கடிதங்களையும் விரைவாகவும் குறைந்த விலையிலும் அனுப்பிட

021 221 5656
070 330 5500

அன்னை & கோ 976, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்

ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

பிரெஞ்சு மொழி

உடன் பதிவு செய்யுங்கள், அல்லது இந்த நம்பரை உங்கள் மொபைலில் சேமியுங்கள் !!

0212228093 61, கச்சேரி - நல்லூர் வீதி யாழ்ப்பாணம்



அன்னைக்கு எங்கள் அஞ்சலி



திருமதி
சரஸ்வதி ஆறுமுகம்

எமது ஆலயத்தின் வளர்ச்சியில் மிகுந்த கரிசனை கொண்ட செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்களினதும் ஓய்வுநிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி அவர்களினதும் அன்புத் தாயார் திருமதி சரஸ்வதி ஆறுமுகம் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்கி அவரின் ஆத்மா சாந்தியடைய கூத்தபிரானின் திருவடிகளை பிரார்த்திக்கின்றோம்.

தில்லேஸ்வரம் சிவன் ஆலயம், மண்டைதீவு.


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.12.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.